விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 07 வெள்ளிக்கிழமை (23.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 216

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO


SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அமெரிக்காவின் போதனைகள் இலங்கைக்குத் தேவையில்லை

## அமைச்சர் ஹெகலிய சீற்றம்

(கொழும்பு)

இலங்கைக்கு அமெரிக்கா பாடம் சொல்லித் தரத் தேவையில்லை. இலங்கையில் உள்ள உள்நாட்டு விடயங்களில் மூக்கை நுழைக்கத் தேவையில்லை என அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல கூறினார். (20 ஆம் பக்கம் பார்க்க)



டெஸ்ட் ஆட்டத்தில் 800 விக்கெட்டுக்கள் கைப்பற்றி இலகுவில் எவராலும் முறியடிக்க முடியாத சாதனையை நேற்று நிலைநாட்டிய இலங்கைக் கிரிக்கெட் அணியின் நட்சத்திர பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேரடியாக வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் நினைவுப் பரிசையும் வழங்கினார்.

## வெற்றிலை கடைகளை மூடுமாறு கரைச்சிப் பிரதேசபை உத்தரவு

### முறையிட எவருமின்றி வியாபாரிகள் தவிப்பு

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேசபையின் உத்தரவுக்கு அமைய கிளிநொச்சிச் சந்தையில் இயங்கி வந்த சுமார் 30க்கும் மேற்பட்ட வெற்றிலைக் கடைகள் மூடப்பட்டுள்ளன.

வெற்றிலைக் கடையில் பல் பொருள்கள் விற்பதாக தெரிவித்து வெற்றிலைக்கடைகளை உடனடியாக இழுத்து மூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

உள்ளூராட்சி சபையின் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய ஆணையாளர் பொன். நித்தியானந்தனிடமிருந்தே கடை மூடுவதற்கான எழுத்து மூலமாக கடிதம் அனுப்பப்பட்டதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர் (20 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தலைவர் இறந்து விட்டார் நேரில் பார்த்து உறுதிப்படுத்தினேன்

### முன்னாள் கூட்டுப் படைத் தளபதி பரபரப்புப் பேட்டி



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டார் என்பதை பிரபாகரனின் பிரத்தியோகத் துப்பாக்கியைப் பரிசோதித்து உறுதிப்படுத்தினேன்.

இப்படி இஸ்ரேலிய நாட்டு ஆங்கிலப் பத்திரிகைக்குப் பரபரப்புப் பேட்டி ஒன்றை வழங்கியிருக்கின்றார் கடந்த வருடம் அரசு–புலிகள் ஆகியோருக்கிடையிலான இறுதி யுத்தம் இடம்பெற்றபோது களத்தில் கூட்டுப் படைகளின் கட்டளைத் தளபதியாகச் செயற்பட்டவரும் இஸ்ரேலுக்கான இலங்கையின் இந்நாள் தூதுவருமான எயார் சீவ் மார்ஷல் டொனால்ட் பேரோ.

அவர் அப் பேட்டியில் முக்கியமாக (20 ஆம் பக்கம் பார்க்க)



## கொசோவா பிரிவினை சரி சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

செர்பியாவில் இருந்து கொசோவா சுதந்திரம் பெற்றதாகப் பிரகடனம் செய்தமை சர்வதேச சட்டத்தை மீறும் செயல் அல்ல என்று தி ஹேக்கில் இருக்கின்ற சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மொத்தமான 14 நீதிபதிகளில் 10 பேர் இத் தீர்ப்புக்கு ஆதரவு அளிக்கின்றனர். உலகம் எங்கும் உள்ள பிரிவினைவாத இயக்கங்களில் இத் தீர்ப்பு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இத் தீர்ப்பு சட்ட ரீதியில் கட்டுப்படுத்தாது. ஆனால் மேலதிக சர்வதேச அங்கீகாரத்திற்கு இது கொசோவாவை (20 ஆம் பக்கம் பார்க்க)

## றெபோட் ஓ பிளேக் மாலைதீவு பயணம் நீல் பூனே நியூயோர்க் திரும்பினார்

(கொழும்பு)

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் நேற்று பகல் 1.30 மணியளவில் இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார்.

நேற்றைய தினம் ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்த அவர், ஜனாதிபதி உட்பட தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்த நிலையில் அவர் மாலைதீவை நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளார். இதே வேளை ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நீல் பூனே அதிகாலை நியூயோர்க்கிற்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அவர் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னரே நியூயோர்க்கிலிருந்து இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

அத்துடன் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸைச் (20 ஆம் பக்கம் பார்க்க)

## கொரியக் குடியரசின் போர்க் கப்பல் நேற்றுக் கொழும்பை வந்தடைந்தது


(கொழும்பு)


கொரியக் குடியரசின் கடற்படைப் போர்க் கப்பல் மூன்று நாள் சுற்றுலாப் பயணம் ஒன்றை மேற்கொண்டுக் கொழும்புத்துறை முகத்தை நேற்று வந்தடைந்ததுள்ளது.

வாங் ஜியோன் என்ற போர்க் கப்பலே நேற்றுக் காலை கொழும்புத்துறை முகத்தை வந்தடைந்தது என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

கொரிய மற்றும் இலங்கைக் கடற்படையினருக்கிடையிலான நல்லுறவைப் பேணும் வகையிலேயே இந்தச் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்த ஊடக மத்திய நிலையம், குறித்த கப்பல் கொழும்பில் தரித்து நிற்கும் நிலையில் பல்வேறு சிறப்பு நிகழ்வுகளிலும் பங்கேற்கவுள்ளதாகக் கூறியது.

சுமார் 149 மீற்றர் நீளமுடைய இந்தப் போர்க் கப்பல் துருப்புக்களைத் தரையிறக்கும் வகையில் (20 ஆம் பக்கம் பார்க்க)





கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு முத்திரை வெளியீட்டும் ஹண்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த முத்திரை வெளியீடும் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நேற்று இடம் பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெயரட்ணம் மங்கல விளக்கேற்றுவதையும் பழையமாணவர் சங்க கொழும்புக்கிளை உப தலைவர் இரத்தினபிரகாசம் தலைமையுரையாற்றுவதையும் முன்னாள் அதிபர் பஞ்சலிங்கம் உரை நிகழ்த்துவதையும் பிரதி தபால்மா அதிபர் நூற்றாண்டு முத்திரையை வெளியிட்டு வைக்க ஹண்டி பேரின்பநாயகத்தின் புதல்வி திருமதி பூம்பாவை பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒருதொகுதியினரையும் படங்களில் காணலாம்.

# வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தி னால் 2010 ஒக்ரோபர் மாதம் நடத்தப்படவுள்ள மத்திய அரசாங்கத்தின் கீழ் தேசிய பாடசாலை களுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் பதவி வகிப்பவர்களுக்கான முத லாவது, இரண்டாவது வினைத்திறன் தடைதாண் டல் பரீட்சை-2010க்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ் வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட் சைக்காக முதல் தடவையாக தோற்றும் விண்ணப்பதாரர்களிடம் இருந்துபரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதற்குப் பின்னர் தோற்றுவதாயின் ரூபாய் 400 பரீட்சைக்கட்டணம் அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாய கத்தின் வருமானத்தலைப்பு 2003.02.13 இல் வைப்பிலிடக்கூடியவாறு நாட்டின் எந்த மாவட்ட பிரதேச செயலகத்திலும் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப் பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்ட வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படி வங்கள் வலயக்கல்விப்பணிப்பாளர், திணைக் களப் பொறுப்பாளரினால் 2010.08.20 ஆம் திகதிக்கு முன்னர், கிடைக்கக்கூடிய வாறு, பத்தரமுல்லை, பெலவத்தை எனும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

மேலதிக விபரங்களை இன்று வெளியாகும் வர்த்தமானிப் பத்திரிகையில் அல்லது வலம் புரிக்காரியாலயத்தில்பார்வையிட முடியும். (ச-3)

# அமைச்சர் விமல் வீரவன்சவின் நாடகம் சர்வதேச உறவுகளுக்கு விழுந்த பேரிடி

## லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவினால் அண்மையில் அரங் கேற்றப்பட்ட நாடகம் சர்வதேச உறவுக ளுக்கு விழுந்த பேரிடியாக கருதப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு மன்ற உறுப் பினர் லக்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்சவின் நாடகத்தினால் ஆலோ சனைக் குழுவின் எண்ணிக்கை பத்தாக உயர்த் தப்பட்டுள்ளதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூவரடங்கிய ஆலோசனைக் குழுவிற்கு உதவி வழங்கும் நோக்கில் மேலும் ஏழுபேரை பான் கீ மூன் நியமித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடக வியலா ளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார். நிறை வேற்று அதிகார ஜனாதிபதி முறைமை யில் மாற்றத்தை ஏற்படுத்தி நிறைவேற்று பிரதமர் முறை மையை உருவாக்க வேண் டும்என மக்கள் கோரவில்லை.

மக்களின் பிரச்சினை களுக்கு தீர்வு வழங்குவ தனை விடவும் அதிகா ரத்தை தக்கவைத்துக் கொள்ள முனைப்புக் காட்டப்பட்டு வருவதாக அவர் தெரிவித் துள்ளார். (ச-5)

**மகேஸ்வரி நிதியத்தில் மணல் பெறுவதற்காக பணம் செலுத்துவோர் தமக்குரிய மணல் கிடைக்கும் திகதிகளை அவர்கள் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கத்தின் அடிப்படையில் (ப.இல) தெரிந்து கொள்ள முடியும்.**

| 23/07/2010 | 24/07/2010 | 26/07/2010 | 27/07/2010 | 28/07/2010 | 29/07/2010 | 30/07/2010 | 31/07/2010 |
|---|---|---|---|---|---|---|---|
| 1486 | 5303 | 5303 | 5303 | 5303 | 5303 | 5303 | 5303 |
| 5792 | 5792 | 5792 | 5792 | 5792 | 5088 | 4476 | 4476 |
| 1032 | 4721 | 4708 | 4709 | 4707 | 4722 | 4724 | 4763 |
| 2494 | 3820 | 4249 | 4674 | 4673 | 4295 | 4300 | 4693 |
| 1325 | 4043 | 4387 | 4387 | 4328 | 4328 | 4191 | 4679 |
| 1693 | 4276 | 4277 | 4275 | 4695 | 4694 | 4677 | 4308 |
| 2138 | 4675 | 4679 | 4679 | 4679 | 4679 | 4679 | 4550 |
| 5475 | 5475 | 5475 | 5475 | 5475 | 5475 | 4458 | 4459 |
| 6000 | 6000 | 6000 | 6000 | 6000 | 6000 | 4573 | 4685 |
| 2853 | 1229 | 2850 | 2852 | 2851 | 4458 | 4535 | 4422 |
| 2036 | 2036 | 2036 | 5927 | 4573 | 4573 | 4685 | 4553 |
| 5791 | 5791 | 5791 | 5791 | 5791 | 4456 | 4422 | 4710 |
| 668 | 4665 | 4665 | 4595 | 4595 | 5952 | 4553 | |
| 5513 | 7600 | 4637 | 4637 | 4637 | 4685 | 4710 | |
| 2316 | 4460 | 4460 | 4460 | 4460 | 4460 | | |
| 4610 | 4610 | 4610 | 4172 | 4172 | 4553 | | |
| 2530 | 4720 | 4720 | 4720 | 4723 | 4711 | | |

**குறித்த தினத்தன்று குறிப்பிட்ட பற்றுச் சீட்டுக்குரிய பயனாளிக்கு மணல் கிடைக்க தவறும் பட்சத்தில் உடனடியாக 021-2226837 என்னும் இலக்கத்திற்கு அலுவலக நாட்களில் மாலை 3.30 தொடக்கம் 5.00 மணிவரை முறையிடவும்.**

தம்பித்துரை றஜீவ்
செயற்றிட்ட இணைப்பாளர்

(C-722)

# வாக்காளர் இடாப்பில் தமிழ் மக்கள் அனைவரும் பதிவு செய்யப்படவேண்டும்

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் அனைவரும் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யவேண்டும். பதிவு செய்யாதவிடத்து எதிர்காலத்தில் பாதிப்படை யக்கூடிய நிலை காணப்படும் என பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

பேராசிரியர் சிவச்சந்திரனின் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சிக்கும் ஜனநாயகத்திற்கும் வாக் காளர் இடாப்பில் பதிவுசெய்வது அவசிய மாகும். வெளிநாடுகளில் வாழ்ந்துவருகின்ற மக்கள் தமது வாக்களிப்பதற்கான உரிமையை வாக்காளர் இடாப்பில் பதிவுசெய்து தமது உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும்.

கடந்த தேர்தல் காலங்களில் யாழ்ப்பாணத் தில் 18 வீதமே வாக்களிக்கப்பட்டுள்ளது. இவை நீடிக்குமாயின் எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

பல்கலைக்கழக அனுமதிகள் கூட குடி சார் பரம்பலை மையமாகக் கொண்டே மதிப் பீடு செய்யப்படுகிறது. எனவே 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் வாக்காளர் இடாப் பில் பதிவுசெய்யவேண்டும் என அவ்வ மைப்பு தெரிவித்துள்ளது.

இப் பத்திரிகையாளர் சந்திப்பில் தமிழரசுக் கட்சி உறுப்பினர் சி.வி.கே.சிவஞானம், பேராசிரியர் சிவச்சந்திரன் மற்றும் பவ்ரல் அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொண் டனர். (ச-7)

# முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாக ஏ.எம்.எம்.றியால் நியமனம்

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் நேற்று புதன்கிழமை திறந்து வைக்கப்பட்ட தையடுத்து சாவகச்சேரி நீதிமன்றில் நீதிவா னாக கடமையாற்றிவந்த நீதிவான் ஏ.எம்.எம். றியால் அங்கு தனது கடமைகளைப் பொறுப் பேற்றுள்ளார்.

இந்நிலையில் சாவகச்சேரி நீதிமன்றத் துக்கு நீதிவான் செ. கணபதிப் பிள்ளை பதில் நீதிவானாக நியமிக் கப்பட்டுள்ளார்.

இதேவேளை அக்கரைப்பற் றைச் சேர்ந்த நீதிவான் அப்துல் கபூர் சாவகச்சேரி நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ள போதிலும் இதுவரை யில் அவர் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)




# இன்று ஒரு தகவல்

## தூக்கம் வரவில்லையா?

''மாதக்கணக்காக நான் தூங்குவதே இல்லைசேர்'' என்றார் ஒருத்தர். இது பொய். இப்படி ஒருவரால் இருக்கவே முடியாது – என்கிறார்கள். நிபுணர்கள்.

பொதுவாக 9 நாட்களுக்கு மேல் எவரும் தூங்காமல் இருந்ததாக ஆதாரம் இல்லையாம். நான் தூங்கவே இல்லை என்று சொல்பவர்கள் கூட பகலிலோ இரவிலோ கொஞ்ச நேரமாவது கண்ணை மூடி விடுவார்களாம். உடம்பு தன்னுடைய தூக்கதேவையை எப்படியும் நிறைவேற்றிக் கொள்ளுமாம்.

நாம் ஒரு நாளைக்கு எவ்வளவு நேரம் தூங்கினால் நல்லது என்பது நமது வயது, உடம்பு, மனம், பழக்கவழக்கம் என்பவற்றைப் பொறுத்தது.

பிறந்த குழந்தைகள் 22 மணிநேரமும் 3 வயதுக் குழந்தைகள் 13 மணிநேரமும் தூங்கும். பெரியவர்கள் 8 மணி நேரம் தூங்குவார்கள். பொதுவாக குழந்தைகள், சிறுவயதானவர், கருவுற்ற தாய்மார்கள், கடுமையான நோயிலிருந்து மீள்பவர்கள் இவர்களுக்கெல்லாம் அதிகதூக்கம் தேவை.

நெப்போலியன், தொமஸ் அல்வாஎடிசன் இவர்களெல்லாம் இரவில் 2 அல்லது 3 மணிநேரம் தான் தூங்குவார்களாம். நம்மில் பலருக்கு படுக்கை விரித்துபடுத்தவுடன் தான் ஊர் விவகாரமெல்லாம் ஞாபகத்துக்கு வரும். சொந்தப்பிரச்சனைகள், அரைகுறை வேலைகள் என்பவை கூட ஞாபகத்துக்கு வரும் இதையெல்லாம் நினைக்காமல் மனதைப் பழக்கப்படுத்திக் கொண்டால் எல்லாம் சரியாக வந்துவிடும். சிலபேர் சொல்லுவார்கள். "நான் கொஞ்சநேரம் படித்தால் தான் தூக்கம் வரும் 'என்பார்கள்.

இன்னும் சிலர் "நான் கொஞ்சமாவது குடித்தால் தான் தூக்கம் வரும் '' என்பார்கள். படிப்பதும், குடிப்பதும் மன அமைதியையும் உடல் அமைதியையும் தரக்கூடிய பழக்கங்களாக இவர்களுக்கு மாறிவிட்டது என்று அர்த்தம்.

அது இல்லாமல் எனக்குத் தூக்கம் வராது என்ற நினைப்பை மாற்றிக் கொள்ளவேண்டும். தூக்கம் வராமல் சிரமப்படுபவர்களுக்கு நிபுணர்கள் சில நல்ல பழக்கங்களைச் சொல்லிக் கொர்டுக்கிறார்கள்.

இரவில் சரியாக தூக்கம் வரவில்லையா? அப்படியானால் பகலில் தூங்காதீர்கள். கொஞ்சம் உடற்பயிற்சி செய்யுங்கள். காலாற நடவுங்கள்.

கவலை, பயம், மன இறுக்கம் இவற்றுக்கெல்லாம் இடம் கொடுக்காதீர்கள். கோப்பி, தேநீர் அதிகமாக கொடுக்காதீர்கள். மிதமான உணவு போதும்.

யாரிடமும் சண்டைபோடாதீர்கள். கோபப்படாதீர்கள். இது தூக்கத்துக்கு மட்டும் இடைஞ்சல் இல்லை. உடல் நலத்துக்கும் இடைஞ்சல்.

நீண்ட காலத்துக்கு இந்த உலகத்தில் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்று ஆசைப்படுபவர்கள் கோபப்படக் கூடாது. சண்டையும் போடக்கூடாது. வீட்டுக்குள்ளும் வெளியிலும் நாகரிகமாக நடந்து கொள்ளவேண்டும்.

இலேசான வெந்நீரில் குளிக்கலாம். இது தூக்கத்தை வரழைக்கும். காற்றோட்டமில்லாத இடம், இரைச்சலுள்ள இடம், குளிருள்ள இடம் போன்ற இடங்களில் தூங்கினால் எப்படித் தூக்கம் வரும்?

இப்படியான இடங்களில் படுக்கையறை அமையாமல் பார்த்துக் கொள்வது நல்லது. சுகமான படுக்கை, சுகமான சிந்தனைகள் இருந்தால் தூக்கம் வரவில்லையே என்ற கவலை வராது.

சிலபேர் தூக்க மாத்திரை உள்ளெடுப்பார்கள். மருத்துவர்களின் ஆலோசனையில்லாமல் தூக்க மாத்திரை உள்ளெடுப்பது நல்லதல்ல.

தூக்கம் வருகிறதோ இல்லையோ சிலபேர் தூக்கமாத்திரை வாங்கிப் போடுவார்கள் இது மிகவும் தவறு.

ஒருநாள் நள்ளிரவில் ஒருத்தர் அசந்து தூங்கிக் கொண்டிருந்தார். அவருடைய மனைவி அவரை அவசர அவசரமாக எழும்பினார்.

அவரும் தூக்கம் கலைந்து எழுந்து உட்கார்ந்து, "ஏன் என்னை எழும்பினாய்?"என்று கேட்டார்.

"தூக்க மாத்திரை விழுங்காமல் தூங்கி விட்டீர்கள். இந்தாங்க... இதைச் சாப்பிட்டு விட்டு தூங்குங்கள்"என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சட்டவிரோத மின்சாரப் பாவனையை தவிர்க்குமாறு வேண்டுகோள்

(கொழும்புத்துறை)

சட்டவிரோதமாக மின்சாரம் பெறுபவர்களுக்கு எதிராக யாழ்.மாவட்ட பொலிஸாரின் ஒத்துழைப்புடன் சட்ட நடவடிக்கை எடுக்க இருப்பதால் சட்ட விரோதமாக மின்சாரம் பெறுவதைத்தவிர்க்குமாறு இலங்கை மின்சாரசபையின் மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறிகையில் ,

இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான தேசிய மின் தொகுதியில் இருந்து அனுமதியற்ற முறையில் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வது சட்ட விரோத செயலாகும். அத்துடன் 2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரசபை சட்டத்திற்கமைய பிணை வழங்க முடியாதொரு குற்றச் செயலாகும். இவ்வாறானதொரு குற்றச் செயல் தொடர்பாக ஒருவர் நீதிமன்றம் ஒன்றில் குற்றவாளியாகக் காணப்படின் இதற்காக 10 ஆயிரம் ரூபா அபராதமும் சட்ட விரோதமாக மின் பாவித்தமைக்கான குற்றப் பணமும் அறவிடப்படும்.

சட்ட விரோதமாக மின்சாரம் பெறுவதால் மின்தாக்குதலுக்கு இலக்காகி தேவையற்ற மரணங்களும் இதனால் மின்தொகுதி பாதிக்கப்படுவதால் மின்நுகர்வோருக்கு மின் சாரத்தடை ஏற்படுகிறது. எனவே சட்ட விரோத மின்சார பாவனையைத் தவிர்க்குமாறு மக்களைக் கேட்டுள்ளார். (2-51)

# கருத்தரங்கு

(சித்தங்கேணி)

PC house limited இன் பங்குகளை பொதுமக்களுக்கு விநியோகித்தல் சம்பந்தமான கருத்தரங்கு எதிர்வரும் 26 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு இல.398/1 , ஆஸ்பத்திரி வீதி , யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள கொழும்பு பங்குச் சந்தையின் யாழ். கிளையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பங்கு முதலீட்டாளர்களை கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (6-17)

# உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிகள் தொடர்பான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். வணிகர் கழகம், வரியிறுப்பாளர்கள், கணக்காய்வு நிறுவனங்கள் ஆகியவற்றின் வேண்டுகோளுக்கு இணங்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

ஆகவே வர்த்தகர்கள், வங்கியாளர்கள் , பட்டயக் கணக்காளர்கள் , வரி செலுத்துபவர்கள் உட்பட சகல துறையைச் சார்ந்தவர்களையும் இக்கருத்தரங்கில் கலந்து பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும் இக்கருத்தரங்கில் பங்கு பற்றுவதன் மூலம் வருமானவரி, மொத்த விற்பனை வரி (B.T.T) , முத்திரைவரி , தடுத்து வைத்தல் வரி (W.H.T) பொருளாதார சேவைகள் கட்ட ணம் (E.S.C) , பெறுமதி சேர் வரி (V.A.T) , தேசத்தை கட்டுயெழுப்புதல் வரி (N.B.T) தொடர்பான தெளிவான விளக்கங்களை பெற்றுக் கொள்ள முடியும் என உள் நாட்டு இறைவரித் திணைக்களயாழ்ப்பாண பிராந்திய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (6-4)

# அறிவொளி முன்பள்ளியின் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அறிவொளி முன்பள்ளி மழலைகளின்விளையாட்டுவிழாநாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அறிவொளி சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

மை.எழில்ரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தெற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி முருகநேசன் சுலோச்சனா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6-4)

# சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான கட்டுரை,கவிதைப்போட்டிகள்

(அல்வாய்)

சிறுவர் அபிவிருத்தி பெண்கள் விவகார அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம், சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு ,பருத்தித்துறை செயலக பிரிவில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையில் கட்டுரை ,கவிதைப் போட்டிகள் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு , பிரதேச செயலக சிறுவர்தின விழாவின் போது சான்றிதழ்களும் பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கப்படுவதுடன் மேற்படி படைப்பாக்கங்கள் தேசிய மட்டப் போட்டிக்காக சிறுவர் அபிவிருத்தி பெண்கள் விவகார அமைச்சிற்கு அனுப்பி வைக்கப் படவுள்ளதால் மேற்படி போட்டிகள் தொடர்பான தகவல்களை பருத்தித் துறை கோட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கி போட்டியில் பங்கு பற்ற வைத்து ஒத்துழைப்பு வழங்குமாறு வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கேட்டுள்ளார்.

மேலும் இப் போட்டிகளை ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதிற்கு முன்னர் நடத்தி பெறுபேறுகளை வடமராட்சி கல்வி வலய அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறு வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கேட்டுள்ளார். (2-19)

# இராசி பலன்

*23.07.2010*
*(ஆடி 7,வெள்ளிக்கிழமை)*
*திரியோதசி பின்னிரவு 5.11 மணிவரை*
*மூலம் முழுவதும்*
*இராகுகாலம்10.32-12.02 மணிவரை*
*சுபநேரம் -6.02-7.32 மணிவரை*
*பிரதோச விரதம்.*

| | |
|---|---|
| மேடம் | பிரயாண நன்மை, கட்டுப்பாடு, பெரியோர் சந்திப்பு, புதிய முயற்சி. |
| இடபம் | கௌரவக் குறைவு, தெய்வ சிந்தை,தொழில் நன்மை, போசன சுகம். |
| மிதுனம் | தெய்வதரிசனம், எடுத்த காரியம் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி, தனவருவாய். |
| கடகம் | மனமகிழ்ச்சி, தொழில் முன்னேற்றம், முயற்சி கைகூடும், சிந்தனை மிகுதி. |
| சிங்கம் | புத்திரரால் கவலை, தேவையற்ற செலவு, தெய்வசிந்தை, போசன சுகக் குறைவு. |
| கன்னி | தொழிலில் ஆர்வம், கல்வியில் மேன்மை, முயற்சி தாமதம், சுபசெலவு. |
| துலாம் | சகோதரர் உதவி, புதிய திருப்பம், வாக்கு மேன்மை,தெய்வசிந்தை. |
| விருச்சிகம் | அமைதிக் குறைவு, தனவிரயம், பித்த ரோகம், போசன சுகம். |
| தனுசு | நண்பர்கள் சந்திப்பு, வெகுமானம், புதிய முயற்சி, தேகநலன். |
| மகரம் | சயன சுகக் குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு, திடீர் பயணம். |
| கும்பம் | தெய்வதரிசனம், முயற்சி கைகூடும், உறவினர் வருகை, மனமகிழ்ச்சி |
| மீனம் | அதிக பிரயாசை, பாராட்டு, தெய்வதரிசனம், விருந்துபசாரம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 120 |
| தக்காளி | 60 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | 70 | 80 | 70 |
| கரட் | 130 | 140 | 130 |
| பூசணி | 40 | 50 | 45 |
| புடோல் | 20 | 50 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 50 | 70 | 65 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 60 |
| பாகற்காய் | 60-70 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 70 |
| பயற்றங்காய் | 80 | 70 | 70 |
| லீக்ஸ் | 120 | 130 | 130 |
| பீற்றூட் | 60 | 80 | 65 |
| கறிமிளகாய் | 100 | 120 | 110 |
| முருங்கைக்காய் | 140 | 150 | 140 |
| போஞ்சி | 80 | 100 | 90 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | 40 |
| கீரை – 1 பிடி | 10-15 | 20 | 15 |
| தேசிக்காய் | 60 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25 |



அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தினால் நடத்தப்பட்ட கலை இலக்கிய விழாவின் முதலாம் நாள் நிகழ்வில் சங்கத்தின் தலைவர் பண்டிதர் பொன்.சுகந்தன், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை எஸ்.தில்லைநடராஜா, சங்கத்தின் உபதலைவர் ரி.ரி.சண்முகநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் மேடையில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம்.

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இவ் உற்சவத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து இரதோற்சவம் இடம்பெறவுள்ளதுடன் சிறப்பு நிகழ்வாக கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சி.வை. நித்தியானந்தசர்மா "விநாயகர் பெருமை" என்னும் விடயம் பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். நாளை காலை தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது. (4)

## மாகியம்பதி அங்கணாமைக் கடவை கண்ணகி அம்மன் ஆலய நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சேக்கிழார் மன்றம் நடத்தும் மாகியம்பதி அங்கணாமைக் கடவை கண்ணகி கோவிலின் வரலாற்றுச் சிறப்பு நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் சண்டிலிப்பாய் ஆலங்குளாய் அகில இலங்கை சேக்கிழார் மன்றத் தலைவர் அருள் மொழி அரசு ச.கா. சபாநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் கலந்து சிறப்பிப்பதுடன் அறிமுகவுரையை அகில இலங்கை சேக்கிழார் மன்ற செயலாளர் நாயகம் இ.சிவசுப்பிரமணியம் வழங்கவுள்ளார்.

மேலும் நிகழ்வில் திருகோணமலை பாடசாலை அதிபர் கனகமகேந்திரா- அகில இலங்கை சேக்கிழார் மன்ற உறுப்பினர் மா.அ.கமலானந்தன், கிளிநொச்சி கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் அ.கனரகத்தினம் ஆகியோர் விசேட சொற்பொழிவாற்றவுள்ளனர். (6-4)

## செயலமர்வு

(அல்வாய்)

தரம் 9இற்கான புதிய பாடத்திட்ட சீர்திருத்தம் தொடர்பான செயலமர்வு யாழ். புலோலி மெ.மி.த.க பாடசாலையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை நடைபெறும்.

இச் செயலமர்வில் வடமராட்சி வலயப் பாடசாலைகளில், சுகாதாரமும், உடற்கல்வியும் என்ற பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரை தவறாது அனுப்பிவைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (2-19)

## அபிவிருத்தி சங்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கலட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் அபிவிருத்தி சங்கக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் புதிய விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாட உள்ளதால் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (4)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் 500 பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர்

### யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அதிகரித்து வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்தி ஒழிக்கும் திட்டத்தில் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ள சிரமதான நடவடிக்கையில் யாழ். பிரதேசத்திற்குட்ட 9 பொலிஸ் பிரிவுகளில் இருந்து 500 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் டெங்கின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. இந்த நிலைமைக்கு யாழ்ப்பாணம் 3ஆம் இடத்தில் உள்ளது. யாழ்ப்பாணத்தில் மட்டும் டெங்கு நோயினால் 30 பேர் இறந்துள்ளனர்.

டெங்கு நோயினால் விலை மதிக்க முடியாத மக்களின் உயிர்கள் காவுகொள்ளப்படுகின்றது.

இவற்றில் இருந்து மக்களை விடுதலை செய்யும் முகமாகவே பொலிஸ் உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாண நகரத்தை அண்டிய பகுதிகள் சிரமதான நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இலங்கை பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியவின் பணிப்பிலும் வட பிராந்திய சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் காமினி டி சில்வா மற்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி அமரக்கோன் ஆகியோரின் வழி காட்டலிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இத் திட்டத்தினை மேற்கொள்ளும் முகமாக டெங்கு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு தொடர்பாக ஒலிபெருக்கிகள் மூலம் அறிவுறுத்தப்படுவதுடன் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்படுகின்றது.

அத்துடன் யாழ்ப்பாண திரையரங்குகளில் இது தொடர்பாக விளம்பரப்படுத்தப்படுகின்றது.

இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கையானது ஆரம்பமே தவிர முடிவு அல்ல தொடர்ந்தும் பொலிஸாரால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்குட்பட்ட 9 பிரதேச பொலிஸ் நிலையங்களிற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

நாளை மேற்கொள்ளப்படுகின்ற சிரமதானத்திற்கு யாழ். மத்திய கல்லூரி மாணவர்களின் பங்களிப்புடன் ஒவ்வொரு பிரதேசத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சிவில் சமூக குழுக்களில் இருந்து 250 பேரும் ஈடுபடவுள்ளனர்.

எனவே சகல பொதுமக்களின் பங்களிப்பும் வழங்கப்பட வேண்டும் என யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா தெரிவித்துள்ளார். (6-7)

## அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

அளவெட்டியைச் சேர்ந்த சிவபாக்கியம் வெற்றிவேலு என்பவருடைய தேசிய அடையாள அட்டை (416150508V) கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (6-4)




## எவர்சைன் கிட்ஸ் வேல்ட்டின் 5ஆவது விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

எவர்சைன் கிட்ஸ் வேல்ட்டின் 5ஆவது விளையாட்டு விழா நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞயிற்றுக்கிழமையும் காலை 9.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் இயக்குநர் செ.ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் நாளை சனிக்கிழமை நடைபெறும் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் கு.பிரதீபன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். வலய முன்பள்ளி பிரதிக் கல்விப்பணிப்பாளர் க.விமலநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கணித புள்ளி விபரவியல் துறை தலைவர் கலாநிதி சி. சிறிசற்குணராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6-4)

## தொழில் முயற்சி கூட்டுறவு சங்கம் அமைத்தலும் பதிவுசெய்தலும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் நெறிப்படுத்தலில் வடமாகாண மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியை மேம்படுத்தும் முதல் நடவடிக்கையாக பிரதேச செயலக மட்டத்தில் சங்கம் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனால் நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தொழில் முயற்சியில் ஈடுபடுகின்ற, ஈடுபட முயல்கின்ற அனைவரும் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (6-4)





யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறையின் ஊடாக மருத்துவமாணவர்களின் வெளிக்கள நிகழ்ச்சியாக கட்டிளமைப்பருவத்தினரை சட்டவிரோத முறையற்ற கருத்தரிப்பில் இருந்து பாதுகாப்பது தொடர்பான யாழ் .வலய ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு நேற்று நடைபெற்றது. இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறை மாணவி பா.விஜிதா ஆலோசனை வழங்குவதையும் வைத்தியகலாநிதிகளான கே.குருபரன், ஆர்.சுரேந்திரகுமாரன் திருமதி.பிலிப்,திருமதி.ஆர்.சாவித்திரி ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் செயலமர்வில் கலந்து கொண்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:என்.குமார்)

# பாலஸ்தீனியர்களுக்கு எதிரான இஸ்ரேலின் தாக்குதல் நியாயமானது

## இஸ்ரேலுக்கான இலங்கைத்தூதுவர் டொனால்ட் பெரேரா தெரிவிப்பு

பாலஸ்தீனியர்களின் பயங்கரவாத்திற்கு எதிராக இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் நியாயமானவை, எனவே எந்த விதமான நிபந்தனைகளுமின்றி பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலுடன் பேச்சுக்களை நடத்த வேண்டும் என இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவரும் இலங்கை படைகளின் முன்னாள் பிரதம அதிகாரியுமான டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பாலஸ்தீனியர்களின் பயங்கரவாதத்திற்கு எதிராக இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் நியாயமானவை. இரத்தக் களரியை யாரும் விரும்பவில்லை. எனவே பாலஸ்தீனியர்கள் நிபந்தனையற்ற பேச்சுக்களுக்கு முன்வரவேண்டும். அதன் மூலம் உடன்பாடுகள் எட்டப்பட வேண்டும்.

இஸ்ரேல் விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ளப்போவதில்லை எனவே அது தனது படை நடவடிக்கையை முழு வீச்சில் மேற்கொள்ளவேண்டும். அதிக விலைகளை கொடுத்து மிகவும் சிக்கலான போரை இலங்கை அரசு எவ்வாறு நிறைவு செய்தது என்பதை இலங்கை அரசு இஸ்ரேல் மக்களுக்கு எடுத்துக்காட்டி யுள்ளது.

மக்களின் ஆதரவு இருந்தால் எதனைப் பற்றியும் கவலைப்படாது முழு அளவில் அழித்தொழிப்பு போரை நடத்தலாம். அதிலிருந்து பின்வாங்க தேவையில்லை. எமது போருக்கு இஸ்ரேல் பல வருடங்களாக உதவி வந்துள்ளது. அது தகவல்களையும் தொழில் நுட்பங்களையும் வழங்கியிருந்தது.

எமது வான்படையில் 17 கிபீர் ரக விமானங்கள் உள்ளன. டாபர் வகை ரோந்து படகுகளும் எம்மிடம் உள்ளன. எமது விமானிகளை இஸ்ரேலே பயிற்றுவித்தது. கடந்த சில வருடங்களில் நாம் இஸ்ரேலிடம் இருந்து பில்லியன் டொலர்; உதவிகளை பெற்றிருந்தோம். அதனால் தான் என்னை இஸ்ரேலின் தூது வராக நியமிக்கும்படி நான் கேட்டுக்கொண்டேன். கடந்த மே 31 ஆம் நாள் துருக்கியின் உதவிக் கப்பலை இஸ்ரேலின் கொமோண்டோக்கள் தாக்கியது. சரியானதே. நான் ஒரு படை அதிகாரி என்பதால் இதனை கூறுகிறேன். தன்னை பாதுகாக்கும் உரிமை இஸ்ரேலுக்கு உண்டு. பலஸ்தீனியர்கள் மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதலை நாம் எப்போதும் ஆதரிப்போம்.

நாம் இஸ்ரேலை ஆதரிக்கின்ற போதும் ஈரானுடனும் உறவுகளை பேணிவருகிறோம். இஸ்ரேலுக்கு பெரும் அச்சுறுத்தலாக ஈரான் உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

# நற்கருணை வழிபாடும் திருநாள் திருப்பலியும்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா நடைபெற்று வருகின்றது.

இதில் நாளை சனிக்கிழமை நற்கருணை வழிபாடும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.45 மணிக்கு திருநாள் திருப் பலி பங்குத்தந்தை அருட் பணியாளர் சேவியர் வின்சன்ற் யேமிஸ் அடிகள் தலைமையில் நடைபெறும்.

(4-72)

# விமல் வீரவன்சவின் நாடகத்தினாலேயே ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் அதிகரிப்பு

## லக்ஸ்மன் கிரியல்ல எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவினால் அண்மையில் அரங்கேற்றப்பட்ட நாடகம் சர்வதேச உறவுகளுக்கு விழுந்த பேரிடியாக கருதப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்சவின் நாடகத்தினால் ஆலோசனைக் குழுவின் எண்ணிக்கை பத்தாக உயர்த்தப்பட்டுள்ளதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மூவரடங்கிய ஆலோசனைக் குழுவிற்கு உதவி வழங்கும் நோக்கில் மேலும் ஏழு பேரை பான் கீ மூன் நியமித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தி நிறைவேற்று பிரதமர் முறைமையை உருவாக்க வேண்டுமென மக்கள் கோரவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதனை விடவும் அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள முனைப்பு காட்டப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். (6)

# டெங்கு ஒழிப்புக்கு நாடளாவிய ரீதியில் 143 சுற்றாடல் பொலீஸ் அலகுகள்

## பாதுகாப்பு செயலர் ஆலோசனை

(கொழும்பு)

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் டெங்கு ஒழிப்புக்கு 143 பொலிஸ் அலகுகள் நியமிக்கப்படவுள்ளன.

அதன்படி டெங்கு ஒழிப்பைத் துரிதப்படுத்தும் வகையில் நாடாளாவிய ரீதியில், 143 சுற்றாடல் பொலிஸ் அலகுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய உத்தரவிட்டுள்ளார்.

இத் திட்டத்திற்கு ஏற்ப மேல் மாகாணத்தில் 36 பொலிஸ் அலகுகள் அமைக்கப்படுவதோடு அதில் 8 பொலிஸ் அலகுகள் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ளன.

சூழலை பாதுகாக்கும் நோக்கில் இவ்வாறான பொலிஸ் பிரிவுகள் நாட்டில் அமைக்கப்படுவது இது முதல் முறையாகும்.

டெங்கு நோயானது அண்மை காலத்தில் தீவிரமடைந் துள்ள நிலையில் 375 பேர் மரணமுற்றுள்ளதுடன் பலர் சிகிச்சை பெற்றும் வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (6-2)

# புதிய பதிவுமுறையை வாபஸ் பெறத்தவறின் பகிஷ்கரிப்பு

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

தனியார் பேருந்துக்கான புதிய பதிவு முறைமையை தென் போக்குவரத்து அதிகாரசபை வாபஸ் பெற்றுக்கொள்வதற்கு தவறினால் எதிர்வரும் 26ஆம் திகதி முதல் தமது சேவைகளை வாபஸ் பெறவிருப்பதாக இலங்கை தனியார் பேருந்து சேவையாளர் சங்கம் தெரிவித்தது.

புதிய முறைமையின்படி பதிவுக் கட்டணம் அதிகமாக உயர்த்தப்பட்டிருப்பதாக இந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ன தெரிவித்தார். (6-2)

# வெங்காயச் செய்கை இம்முறை அதிகரிப்பு

குடத்தனைப் பகுதியில் கடந்த வருடத்தைவிட இவ்வருடம் வெங்காயச் செய்கை அதிகரித்துள்ளது. தற்போது சந்தையில் வெங்காயத்திற்கு நல்ல கேள்வி நிலவுவதாலும் தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்வதாலும் விவசாயிகள் அதிக அக்கறை காட்டி வெங்காயப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த வருடம் பயிர்ச்செய்கை செய்யாத பல விவசாய நிலங்களில் இவ் வருடம் வெங்காயச் செய்கை அதிகரித்துள்ளதைக் காணக்ககூடியதாக இருக்கிறது. (6-2)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo. com
Learn French the French Way French Classes
சர்வதேச மொழியான French மொழி வகுப்புக்கள் French Emabassy இன் அனுசரணையுடன் பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகின்றது.
பிரெஞ்சு தூதரகம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ALLIANCE FRANCAISE யாழ்ப்பாணத்தில் உள்ள பிரெஞ்சு மொழி பயிலுவதற்கான ஒரே ஒரு கலாசார மையமாகும்.
வகுப்புக்கள் : சனி, ஞாயிறுகளில்
விரிவுரையாளர்கள்: பிரான்சியரும், பிரெஞ்சில் தகைமை பெற்றோரும்
*புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.*
C7/11
மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.

# இலங்கைத் தூதரகம் இனி சென்னையில் இயங்கக்கூடாது

## கர்ச்சிக்கிறார் வைகோ

"இலங்கைத்தூதரகம் இனி சென்னையில் செயற்படக்கூடாது!" -கடலூர் சிறை வாசலில் இருந்து வெளிப்பட்ட வைகோ கர்ச்சிக்க..... நெல்லையில் நடந்த ஒரு திருமண வீட்டில், "இதுவே இன்றைய தமிழன் செய்து முடிக்கவேண்டிய

இலங்கையின் இனவாதம் ! அப்படிப்பட்ட நாட்டின் தூதரகம் இங்கு இருக்கக்கூடாது.அது அகற்றப்படவேண்டும். அகற்றப்பட்டே தீரும்!"

"இலங்கைக்கு எதிராக இந்தியா இப்படி ஒரு நிலைப்பாடு எடுக்கும்


வாஜ்பாய். ஆனால்,2004இல் ஆட்சிக்கு வந்த மன்மோகன் சிங்-சோனியாகாந்தியின் தூண்டுதலின் பேரில், அனைத்து உதவிகளையும் இலவசமாகச் செய்தார்.

புலிகளைக்கொன்றொழிக்க நினைத்தது ராஜபக்ஷவின் திட்டம்

சாப்பிட்டத்தைத்தவிர, தமிழனுக்கு என்ன செய்தார்கள்? யாரிடம் இருந்து எதிர்பார்க்கிறார்களாம் அரசியல் தீர்வை? இவை யெல்லாமே வெறும் நாடகங்கள்! உலகின் எல்லாப் பகுதிகளிலும் யுத்தம் நடந்திருக்கிறது. போராளிகள், பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆனால்,செத்த பின்பும் ஒரு மனிதனை அவமானப்படுத்தும் காரியங்கள் இலங்கையைத் தவிர எங்கும் நடந்ததில்லை. அனுராதபுரம் தாக்குதலில் இறந்த 21 புலிப்படைவீரர்களின் உடலை நிர்வாணமாக்கி, ஊர் ஊராக வானில் எடுத்துச் சென்று கொக் கரித்துக் காட்டினார்கள் புலிப்படை பெண் பிள்ளைகளின் உயிரற்ற சடலங்களுடன் வன்புணர்ச்சி செய்தார்கள். அடிக்கி வைக்கப் பட்ட பிணங்கள் மீது புல்டோசர் ஏற்றி நசுக்கி சகதி போல ஆக்கி னார்கள். இது எந்த நாட்டிலுமே நடந்திராத கொடுமை. நரமாமிசம்

**ஆனந்த விகடன்**

சாப்பிடும் கொடிகூட்டம் அது. அது அரசியல் தீர்வுக்கு ஒரு போதும் உடன்படாது!"


பழ.கருப்பையாவின் கார் தாக்குதல்...


சீமானுக்குச் சிறை...


பழ.நெடுமாறன் கைது...

முழு முதல் காரியம் என்று சபதம் ஏற்போம்!" என 83 வயதைக் கடந்த இலக்கிய கர்த்தா தி.க.சி.வழி மொழிந்து வரவேற்க....விவகாரம் அதை நோக்கியே போய்க்கொண்டிருக்கிறது. இந்த சூழலில் நடந்தது வைகோவுடனான சந்திப்பு....

"இலங்கைத் தூதரகத்தை இழுத்து மூடுவோம் என்று அறிவித்து போராட்டங்களை முன்னெடுப்பது ஏன்?"

"குண்டுகள் வீசி கொன்றவர்கள் போக,மிச்சம் இருக்கும் தமிழனையும் பட்டினி போட்டு,மருந்துகள் தராமல் சிறுகச்சிறுக சாகடிக்கும் காரியத்தை

என்று நினைக்கிறீர்களா?"

"இந்திய அரசாங்கம் இதைச் செய்யும் என்று எதிர்பார்த்து இப்படி ஒரு கோரிக்கையை வைக்கவில்லை. தமிழ் நாட்டு மக்கள் தங்களின் போராட் டங்களின் மூலம் இதை வென்று காட்டுவார்கள். அங்கிருந்து 20 கல் தொலைவில் இருக்கும் இந்த ஏழு கோடி தமிழ் மக்கள் தான் இந்த போராட்டத்தின் பலம். இன்று நாம் கையறு நிலையில் இருக் கலாம். ஆனால், தமிழனுக்கு என்று நாடு அமைத்து தரவேண்டிய கடமை நமக்கு உண்டு என்பதை ஒரு போதும் மறக்கமாட்டோம். தூதரகத்தை இங்கிருந்து அகற்றுவதில் இருந்தே அது

மட்டுமல்ல; சோனியாவின் விருப்பமும் தான். இதற்காக கருணாநிதிக்கு பதவிகளைதூக்கிக் கொடுத்து வாயடைத்தார்.சோனியா தமிழனின் மூச்சை இப்படித்தான் நிறுத்தினார்கள்.

இலங்கையின் போர்க்குற்றம் குறித்து விசாரிக்கப்பட்டால்,தாங்கள் இதுவரை அவர்களுக்குச் செய்த உதவிகள் வெளிச்சத்துக்கு வரும் என்று மன்மோகன்சிங் பயப் படுகிறார். அதனால் மௌனம் சாதிக்கிறார். கருணாநிதிக்கும் உள் மனதில் பிரபாகரன் என்றாலே பிடிக்காது. இன்னும் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் தமிழ்ச் சமூகத்தில் தன்னிகரற்ற தனிப்பெரும் தலைவனாக



## ஈழத்தமிழரை அழித்த காங்கிரஸை வேரோடு வீழ்த்த வேண்டும்

சிங்களவர் செய்து வருகின்றனர். இது உலக நாடுகளின் உள் மனச் சாட்சிக்கு இப்போது தான் உறைத்திருக்கிறது. ஐ.நா. சபை,மூவர் குழுவை அமைத்து தனது விசாரணையைத்தொடங்கி இருக்கிறது. அவர்கள் விசாரிக்கப்போகிறார்கள். அதற்குள் ஐ.நா. செயலாளர் பான் கீ மூனை அவமானப்படுத்தும் வகையில்" 'பெண்களை கூட்டிக்கொடுக்கும் மாமா' என்று இழிவுபடுத்தி கொழும்பு நகரில் ஊர்வலம் போகிறார் சிங்களவர்.

ஐ.நா அலுவலகத்தை அடித்து உடைக்கிறார். உலகம் அங்கீகரித்த ஒரு சபையில் அலுவலகத்தையே செயற்பட விடாமல் முடக்க முடியுமானால்,இப்படி ஒரு ரவுடித்தனமான நாட்டின் தூதரகம் நம் தாய் பூமியில் எதற்கு இருக்க வேண்டும் என்று தமிழன் கேட்கக்கூடாதா? பாலஸ்தீனியர் களை படுகொலை செய்த இன பாதக இஸ்ரேல் நாட்டின் தூதரகம் பல நாடுகளில் இல்லை. இந் தியாவிலும் இடம் தராமல் தடுத்து தான் வைத்திருந்தார்கள். அதன் பிறகு,சிறப்பு அனுமதியுடன் கொடுத்தார்கள்.இஸ்ரேலின் கொடுமையை விட 200 மடங்கு கொடுமையானகு அல்லவா

தொடங்கட்டும்!"

"இலங்கையில் போர் குற்றங்கள் ஏராளமாக நடந்திருக்கிறது என்பதை உலகின் பல நாடுகள் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் ,இந்தியா இதுவரை எந்தப் பதிலும் சொல்லவில்லையே?"

"தமிழர்கள் படுகொலையை இந்தியா கண்டிக்கவில்லை என்பது மட்டுமல்ல; ஐ.நா. சபை அலுவ லகம் தாக்கப்பட்டதற்கும் கண்டனம் தெரிவிக்கவில்லை. இலங்கையைக் கண்டிக்கும் தீர்மானம் ஐ.நா.வில் வந்த போது எதிர்த்த, ஒரே நாடு இந்தியா தான். இலங்கைக்குப் பொருளாதார தடையை ஐரோப்பிய யூனியன் விதிக்கும் போது, குறைந்த வட்டிக்குப் பணம் தரும் நாடும் இந்தியாதான். இலங்கையை அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் முட்டுக் கொடுக்கும் காரியத்தை இந்தியா செய்கிறது.அந்தத் திமிரில் தான் இலங்கை ஆடுகிறது.

1998 ஆண்டு பிரதமராக வாஜ் பாய் இருந்த போது அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டி,இலங்கைக்கு எந்த உதவியும் செய்யமாட்டோம் என்று தீர்மானம் கொண்டு வரப் பட்டது. 'விலைக்குக்கூட ஆயுதங் களை விற்க மாட்டோம்' என்று நெஞ்சுரத்தோடு சொன்னார்

வீரத்திலும் தீரத்திலும் ஒழுக்கத்திலும் மெச்சப்படும் ஒரே தலைவனாக மதிக்கப்படும் பிரபா கரனை அவருக்குப் எப்படி பிடிக் கும்? தமிழகத்தில் வெடித்துக் கிளம்பிய இன உணர்வுத் தீயை தடுக்கும் காரியத்தை கட்சிதமாக செய்து முடித்தார் கருணாநிதி. இந்தப் பழியும் பாவமும் இவருக்கு காலம் எல்லாம் நிற்கும்!"


"அரசியல் தீர்வுக்கான ஆலோசனையைத் தாருங்கள் என்று முதல்வர் கருணாநிதியிடம் பிரதமர் வேண்டுகோள் வைத் துள்ளாரே?!

"என்ன செய்யலாம் என்று இப்போது கருணாநிதியைக் கேட்கும் மன்மோகன்சிங், இலங்கைக்கு ஆயுத உதவி செய்யும் போது கேட்டாரா? ராடர் தரும்போது கேட்டாரா? இப்போது மட்டும் ஏன் கருத்தும் ஆலோசனையும் கேட்கிறாராம்?

சிறப்புப் பிரதிநிதியை அனுப்பி கண்காணிக்க வேண்டும் என்று கருணாநிதி யோசனை சொல்லியிருக்கிறார். இதுவரை அனுப்பப்பட்ட பிராணப் முகர்ஜி,எம்.கே. நாராயணன், சிவ் சங்கர் மேனன் போன்றவர்கள் கொழும்ப ஹோட்டலில் விருங்க

"ஈழத் தமிழர் குறித்து தொடர்ந்து நீங்கள் பேசி வருகிறீர்கள். ஒரு வெளி நாட்டுப் பிரச்சினையை இங்கு தொடர்ந்து பேசத் தடைவிதிக்கச் சட்டம் கொண்டுவரப்போவதாக அமைச்சர் துரைமுருகன் சொல்லியிருக் கிறாரே?"

"மந்திரி தெனாலிராமன் சொல்ல வேண்டாம். செய்யட்டும். இந்தக் பூச்சாண்டிக்குப் பயப்படும் கத்துக்குட்டிகள் அல்ல நாங்கள். உங்களது சட்டமும் திட்டமும் ஜார்க் கண்டிலும் சத்தீஸ்கரிலும் என்ன ஆனது? சூடத்தைக் கொளுத் துவதுபோலத் தன் உடம்பைக் கொளுத்தி 17 பேர் செத்துப்போன பூமியப்பா இது. (1[illegible]ஆம்பக்கம் பார்க்க)



யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சைக்கிள், மூன்று சில்லு சைக்கிள் கையளிக்கும் நிகழ்வில் த.தே. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் யுவதியொருவருக்கு சைக்கிள் கையளிப்பதையும் முதியவர் ஒருவருக்கு மூன்று சில்லு சைக்கிள் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

# தேர்த்திருவிழா

உரும்பிராய் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் தேர்த்திருவிழா வர்ணனையை வழங்கவுள்ளார். (6)

# இரதோற்சவம்

(பருத்தித்துறை)

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

மறுநாள் தீர்த்த உற்சவமும் 26 ஆம் திகதி அல்வாய் இளைஞர்களின் உற்சவமும் நடைபெறவுள்ளது. (2-10)

# ஓய்வூதியம் வழங்குவற்கு தனியான நிதியமொன்றை ஸ்தாபிக்க திட்டம்

## ஓய்வூதிய திணைக்கள ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் வழங்கும் பொருட்டுத் தனியான நிதியமொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென ஓய்வூதியத் திணைக்களம் தெரிவிக்கிறது.

அனைத்து அரச ஊழியர்களதும் மாதாந்தச் சம்பளத்திலிருந்து ஆறு முதல் ஏழு வீதம் வரை விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கென வைப்பீடு செய்யப்படுமெனத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கே.ஏ.திலகரத்ன தெரிவித்தார்.

இதன்மூலம் சிறந்த பலனைப் பெறலாமெனினும் இதுவரை நிதியம் ஆரம்பிக்கப்படவில்லையென அவர் கூறியதுடன் நடைமுறையிலுள்ள கட்டளைச் சட்டத்தின் கீழ் அரச சேவைகள், மாகாண அரச சேவைகள் மற்றும் பாதுகாப்புப் படை அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்படும் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் தொகையை பொதுவான நிதியமொன்றில் வைப்பீடு செய்ய எண்ணியுள்ளதாக அவர் தெரிவித்ததோடு இந்தப் பொது நிதியத்தின் மூலம் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் செலவீனங்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்த நிதியத்தை ஸ்தாபிப்பதற்கான சட்ட நடவடிக்கைகளைத் தற்போது மேற்கொண்டு வருவதாகவும் ஓய்வூதியத் திணைக்கள ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார். (6-2)

# டெங்கு நோய்க்கு இலக்கானவர் வைத்தியசாலையில் அனுமதி

(பருத்தித்துறை)

வடமராட்சி உடுப்பிட்டிப் பகுதியில் மேலும் ஒருவர் டெங்கு நோய்க்கு ஆளாகியுள்ளதாக இனம் காணப்பட்டுள்ளார்.

தற்போது சிகிச் சைக்காக மந்திகை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை வடமராட்சிப் பகுதியில் டெங்கு நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கழிவுநீர் தேங்கி நிற்கும் பகுதிகளில் நுளம்புக் குடம்பிகள் காணப்படுவதாகவும் சுகாதாரப் பகுதியினர் அவ்விடங்களில் மருந்துகளை விசிறி வருகின்றனர். வெளியிடங்களில் நீர் தேங்கி நிற்கவிடாது அதனை துப்புரவு செய்து தருமாறு சுகாதாரப் பணிப்பாளர் மக்களைக் கேட்டுக் கொள்கின்றார். (2-10)

# வீடமைப்பு அதிகார சபைக்கு சொந்தமான காணிகளின் விபரம் திரட்டப்படவுள்ளது

(கொழும்பு)

வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாடு முழுவதிலுள்ள வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணிகள் தொடர்பான தகவல்களை திரட்டும் நடவடிக்கை எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் மூலம் அதிகார சபைக்கு சொந்தமான காணிகளை கண்டுகொள்ளவும் அவற்றைக் குறுகிய காலப்பகுதியில் அபிவிருத்தி செய்யவும் முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கென விசேட காணி நடவடிக்கை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அரச காணிகளில் சட்ட விரோதமான முறையில் குடியிருப்போர் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்றும் தேசிய வீடமைப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் அனைத்து தகவல்களும் கணனி மயப்படுத்தப்படவுள்ளதுடன் இந்த தகவல்களை அடிப்படையாக வைத்து நாடு பூராகவும் உள்ள காணிகளை பதிவு செய்யும் நடவடிக்கை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படவுள்ளது. (6-4)

# அனைத்து நகரங்களிலும் விசேட போக்குவரத்து திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸார் வாகன ஒழுக்க விதிகள் தொடர்பாக கவனம் செலுத்தி மக்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்று பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார்.

முறையற்ற விதத்தில் வாகனத்தை செலுத்துவோரை நீதிமன்றத்தில் முன்னிறுத்தி தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் அனைத்து நகரங்களிலும் விசேட போக்குவரத்து திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும்அவர் தெரிவித்தார்.

அத்துடன், சிற்றுண்டிச்சாலைகள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றுக்கு முன்னால் வாகனங்களை நிறுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதுடன் காலை 7மணிமுதல் முற்பகல் 9.10 மணி வரையும் பிற்பகல் 4 மணிமுதல் 6 மணிவரையும் இது அமுலில் இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4)

# கரைச்சி பிரதேச செயலகப் பிரிவு மக்களுக்கான காணிக் கச்சேரி

(வட்டக்கச்சி)

கரைச்சிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஐந்து கிராமசேவை அலுவலர் பிரிவுகளான இராமநாதபுரம், மாவடி, மாயவனூர், வட்டக்கச்சி, சுவிட்சென்ரர், ஆகிய பிரதேசங்களுக்குட்பட்ட மக்களுக்கான காணிக் கச்சேரியானது ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி , இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையில் இடம்பெறும்.

இதில் காணி ஆவணங்கள் தவறவிட்டவர்கள் காணி பெயர் மாற்றம் தொடர்பான பிரச்சினைகள் ஆராயப்படவுள்தாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (6-2)


# Calling for Tender - Teaching Hospital,Jaffna

01) The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive separate sealed tenders for the following works upto10.00 am on 05.08.2010. Tender form may be collected from Director, Teaching Hospital,Jaffna up to 01.08.2010 on payment on non refundable deposit.

| No | Nature of Work | Non Refundable Deposit |
|---|---|---|
| 01. | 750KVA Generator Building | Rs.4,000 |
| 02. | Repairs to Roof of Ward 24 | Rs.3,000 |
| 03. | Construction of Vehicle Park | Rs.2,000 |

02) Tenders will be opened immediately after closing, at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representative are requested to be present at the opening Tenders.

03) Tender forms are issued only to the contractor who has valid registration in Grade ' M 7' and above in the field of Building Constructions and other institute of Constructions Training And Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association of Sri Lanka (NCCASL).

04) Sealed Tenders may be dispatched either by registered post or be hand delivered to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00 am on 05.08.2010.

05) Tender Documents may be inspected free of charge at the Residence Engineers office, CECB, Jaffna.

06) For further details please contact Hospital Secretary, Teaching Hospital, Jaffna.

**The Chairman,**
**Divisional Tender Board,**
**Teaching Hospital,**
**Jaffna.**

(C-721)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# மனித உடல் ஆரோக்கியத்தில் கல்சியத்தின் பங்கு

### How much Calcium and Vitamin D do you need per day?

| AGE | CALCIUM | VITAMIN D |
|---|---|---|
| 4 to 8 | 800 mg | 200 IUs |
| 9 to 18 | 1300 mg | 200 IUs |
| 19 to 50 | 1000 mg | 400 IUs |
| 50+ | 1500 mg | 800 IUs |

மனித உடலானது பல்வேறு வகையான இரசாயனச் சேர்வைகளையும் , மூலகங்களையும் தன்னகத்தே கொண்டு அமைந்துள்ளது. கனியுப்புக்கள் மற்றும் காபன் , ஐதரசன், ஒட்சிசன் , நைதரசன் போன்றவை மனித உடலின் கட்டமைப்பிலும் , தொழிற்பாட்டிலும் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன.

கனியுப்புக்கள் பிரதானமாக அசேதனச் சேர்வைகளாகும். அத்துடன் இவை இரு பெரும் பிரிவுகளாக வகுக்கப்படுகின்றன. அவையாவன மா மூலகங்கள் மற்றும் நுண் மூலகங்கள் அல்லது சுவட்டு மூலகங்கள் ஆகும்.

கல்சியம்,பொசுபரசு, மக்னீசியம், கந்தகம், சோடியம், பொற்றாசியம், குளோரைட்டு போன்றன மாமூலகங்களுள் உள்ளடக்கப்படுகின்றன. சுவட்டு மூலகங்களாக இரும்பு, அயடீன், புளோரைட்டு, நாகம், செலீனியம், செப்பு, கோபோற்று, குறோமியம், மங்கனீசு, மொலிப்டினம், ஆசினிக், நிக்கல், வனேடியம் போன்றன விளங்குகின்றன.


அத்தியாவசியமான கனியுப்புக்களை மனிதன் குறைவான அளவில் உள்ளெடுப்பதன் மூலம் பல்வேறு குறைபாட்டு நோய்களை எதிர்நோக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றான். மனித உடலில் காணப்படும் கனியுப்புக்களின் செறிவானது அகத்துறிஞ்சல், கழிவகற்றல் போன்ற செயற்பாடுகளின் மூலம் சீர்செய்யப்படுகின்றது. கனியுப்புக்களின் குறைபாட்டினால் ஏற்படும் நோய்கள் பல்வேறு விதமான உணவுகளையும் உட்கொள்ளும் உணவுப் பழக்கம் உடையவர்களுக்கு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகும்.

கல்சியமும், பொசுபரசும் சேதனச் சேர்வைகளுடன் இணைந்து பற்கள், என்புகள் போன்றன உருவாவதற்கு உதவுகின்றன. கல்சியமானது என்புகளில் சேமித்து வைக்கப்படுகிறது. என்புகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ள கல்சியமானது முதலுருவின் (Plasma) கல்சியம் அயன் செறிவினைச் சீர்செய்வதில் உதவுகின்றது. மனித உடலானது ஏனைய கனியுப்புக்களை விட அதிகளவு கல்சியத்தைக் கொண்டதாக விளங்குகிறது.

நாளொன்றுக்கு உள்ளெடுக்கத் தேவையான போதிய கல்சியத்தின் அளவானது 1000 முதல் 1200 மில்லி கிராம் ஆகும். (1000-1200 mg/day) சாதாரண நிலையில் முதலுருவின் கல்சியம் அயன் அளவானது கல்சியம் அயன் அளவானது 9-11 மில்லி கிராம்/ டெசி லீற்றர் ஆகும். இதன் நாளாந்த வேறு பாடு 3 % இனால் கூடலாம் அல்லது குறையலாம்.

பராதைறொயிட்டு ஓமோன், கலிசிற்றோனின் ஓமோன் மற்றும் விற்றமின் D என்பவற்றின் ஒன்றிணைந்த செயற்பாட்டினால் சிறிய அளவினில் காணப்படும் கல்சியமானது சீரான அளவில் பேணப்படுகின்றது.

அனுசேபத்தின் போது கல்சியமானது முன்சிறுகுடல் மற்றும் நடுச் சிறுகுடலின் முற்பகுதி போன்ற பகுதிகளில் புரதத்துடன் இணைந்து அதன் உதவியுடன் அகத்துறிஞ்சப்படும் தேவையான அளவிற்கு மேலதிகமாக உள்ளெடுக்கப்படும் கல்சியமானது அகத்துறிஞ்சப்படுவதில்லை. அத்துடன் இவ்வாறான கல்சியம் கழிவாக வெளியேற்றப்படுகின்றது. குருதியில் கல்சியத்தின் அளவு 7 மில்லி கிராம்/டெசிலீற்றர் எனும் அளவை விட அதிகரிக்கும் போது இது சிறுநீர்த் தொகுதியினால் கழிவாக வெளியேற்றப்படுகின்றது. இது பெரும்பாலும் மாற்றமடைவதில்லை. சிறிய அளவிலான கல்சியமானது வியர்வையுடன் வெளியேற்றப்படுகின்றது.




Food sources of calcium include dairy products, green leafy vegetables and salmon and sardines

பெருமளவு கல்சியமானது மலம் மூலம் வெளியேற்றப்படுகின்றது. இவ்வாறு வெளியேற்றப்படும் அளவு மனிதனால் உணவின் மூலம் உள்ளெடுக்கப்படும் கல்சியத்துடன் வேறுபடுகின்றது.

**கல்சியத்தை அதிகளவில் கொண்ட உணவு வகை:-**

-பாலுற்பத்திப் பொருட்கள்
-தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்
-பச்சை இலை கொண்ட மரக்கறி.

உதாரணமாக அகத்தி, முளைக்கீரை, பசளி, முருங்கை, வல்லாரை, பொன்னாங்காணி முதலியன கல்சியமூட்டப்பட்ட சேதனச் குடிபானங்கள்(Organic Juice) மற்றும் உணவு வகை.

**கல்சியத்தின் பிரதான தொழிற்பாடுகள்:-**

- பற்களிற்கும், என்புகளிற்கும் வலிமையை வழங்குகிறது.
- குருதி உறைதலுக்கு உதவுகின்றது.
- நரம்புகளின் வழியே கணத்தாக்கம் கடத்தப்படுதலில் பங்கெடுக்கின்றது.
- தசையானது சுருங்கித் தளருதலில் அவசியமாகின்றது.

மொத்தக் கல்சியத்தின் 99% என்புகளிலும், பற்களிலும் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் என்புகளிலுள்ள கல்சியமானது. ஐதரொட்சி அப்பரைற்று மற் றும் $Ca_{10}(Po_4)_6(OH)_2$ போன்ற சேர்வைகளாகப் படிவாகிக் காணப்படுகின்றது. என்பானது பளிங்குரு அற்ற கல்சியம் பொசுபேற்று,காபனேற்று என்பவற்றையும் மேலும் சிறு அளவிலான ஏனைய உப்புக்களையும் கொண்டதாகக் காணப்படுகிறது.

மொத்த என்பின் திணிவில் கனியுப்புக்கள் ஏறத்தாழ 50 % ஐயும் ஏனைய சேதனச் சேர்வைகள் மிகுதித் திணிவையும் பிடித்துள்ளன. என்பின் கனியுப்புக்களின் மட்டம் நாளாந்த கல்சியத்தின் படிவுகளுக்கும் மீளப் பயன்படுத்தலுக்கும் இடையில் ஓர் சமநிலையைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. ஏறத்தாழ 700 மில்லிகிராம் கல்சியமானது தினமும் என்புகளில் சேர்க்கப்படுவதுடன் என்பிலிருந்து பெற்றுக் கொள்ளவும் படுகிறது.

பரத்தோமோன், தைறொயிட் ஓமோன், கல்சிற்றோனின் என்பன முதலுருவில் கல்சியத்தின் அளவைச் சீர்செய்வதில் இணைந்து செயற்படுகின்றன. அத்துடன் விற்றமின் D உம் பங்குவகிக்கின்றது. பரத்தோமோன் முதலுரு கல்சியத்தின் மட்டத்தை உயர்த்துகிறது.சாதாரணமாக முதலுருவானது ஒரு டெசிலீற்றருக்கு 9-11 மில்லி கிராம் என்ற அளவில் கல்சியத்தைக் கொண்டுள்ளது. முதலுரு கல்சியத்தின் அளவானது குறிப்பிட்ட அளவில் இருந்து குறைவடையும் போது, என்பிலுள்ள கல்சியமானது பயன்படுத்தப்படுவதுடன், புதிய என்பின் உருவாக்கம் தடைசெய்யப்படுகிறது. இதனால் கல்சியம் அயனின் அளவு அதிரிக்க்கின்றது.

பராதையிறொயிட்டு ஓமோன் ஆனது அயன் நிலையிலுள்ள கல்சியத்தின் அளவை முதலுருவில் மிகவும் குறுகிய வீச்சினுள் கல்சியம் உள்ளெடுத்தல், கழிவாக அகற்றப்படல், அத்துடன் என்பினில் படிவாகச் சேமிக்கப்படல் போன்றவற்றின் மூலம் பேணுகின்றது.அத்துடன் குடலிலிருந்து அகத்துறிஞ்சப்படும் வீதத்தையும் இது அதிகரிக்கின்றது. குருதி முதலருவிலுள்ள கல்சியம் அயனானது $(Ca^{2+})$ குருதி உறைதலுக்கான காரணியாக விளங்குகின் றது. கல்சியம் அயன் உள்ள நிலையிலேயே புரோத்துறொம்பின் (Prothrombin) ஆனது துறொம்பினாக (Thrpmbin) மாற்றமடையும்.

நரம்பு முளைகளுக்கிடையிலான கணத்தாக்கக் கடத்துகையில் கடத்தியான அசற்றைல் கோலினானது (acetylycholine) பங்குவகிக்கின்றது. நரம்பு முனைகளை (synaptic knob) வந்தடையும் நரம்புக் கணத்தாக்கமானது நரம்பு முனைகளுக்கு முன் காணப்படும் மென்சவ்வினை முனைவற்றதாக்குகிறது. அத்துடன் கல்சியத்திற்கான பாதையினைத் திறந்து ஊடுபுகவிடும். தன்மையை கல்சியம் அயன்களுக்கு அதிகரிக்கின்றது.கல்சியம் அயனானது நரம்பு முனைகளினுள் நரம்புப் புடகத்தினை (Synaptic vesicle) உருவாக்கி நரம்பிணைப்பிற்கு முன்னாள் மென்சவ்வுடன் (Presynaptic membrane) இணையச் செய்து அதன் உள்ளடக்கங்களை நரம்பிணைப்புப் பிளவினுள் (synaptic cleft) விடுவிக்கின்றது.

தசைச்சுருக்கமானது கல்சியம் அயனால் தூண்டப்படுகிறது. ஓய்வுநிலையிலுள்ள தசை முதலுருவில் (muscle sarcoplasm) கல்சியம் அயனின் செறிவு $10^{-7} - 10^{-8}$ மூல்/ லீற்றர் ஆகும்.தசைமுதலுருவில் உள்ள கல்சியம் அயனானது புடகங்களை தசைப் பாத்துக்களில் Z கோடுகளில் உருவாக்கும்.

துரப்போனின் (Tropnin) ஒரு கோளப் புரதம் இது . கல்சியம் அயனுடனும் துரப்போமயோசினுடனும் (Tropomyosin) இணைந்துள்ளது. துரப்பாமயோசினானது அதன் செய்றபாடுகளை ஆரம்பிக்கும் அல்லது நிறுத்தும். இதயத் தசையில் கலத்திற்கு வெளியேயான திரவம் அல்லது பாய்பொருளானது தூண்டலுக்கான கல்சியம் அயனின் பிரதான மூலமாகும்.கலத்திற்கு வெளியேயான பாய்பொருளில் கல்சியம் அயன் காணப்படாதவிடத்து ஒரு நிமிடத்தினுள் இதயத் தசையானது அதன் சுருங்கித் தளர்வடையும் தொழிற்ப்ர்டை நிறுத்திக் கொள்ளும். மளமளப்புத் தசையின் சுருங்கத் தளரும் தன்மையும் கல்சியம் அயனினாலேயே செயற்படுத்தப்படுகின் றது. இத்தசை அல்பா அக்ரினின்($\propto$-actinin) மற்றும் துரப்போமயோசின் மூலக்கூறுகளைக் கொண்டுள்ள இவை துரபோனின் ஒரு தொகுதியைக் கொண்டிருப்பதில்லை.

கல்சியத்தின் குறைபாட்டினால் தசை, நரம்புத் தொகுதிகளுடன் தொடர்புபட்ட நோய்கள் ஏற்படும் வாய்ப்புண்டு. இவ்வறிகுறிகள் விற்றமின்D குறைபாட்டினாலும் சுரக்கப்படும் தைறொயிட்டு ஓமோனின் அளவு குறைவடைவதன் விளைவினாலும் ஏற்படும். அத்துடன் கல்சியத்தின் இழப்பும் ஒரு காரணமாக அமையும்.முதலுருவில் கல்சியத்தின் அளவு குறைவடைவதனால் கல்சியமானது என்பிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும்.இதனால் சுற்றோட்டத்தில் கல்சியம் அயனின் செறிவு அதிகரிக்கும். அத்துடன் புதிய என்பின் உருவாக்கமும் தடைப்படும். கல்சியத்திற்கும், பொசுபரசிற்கும் இடையிலான விகிதம் 2:1 ஆக அமைவது கல்சியத்தின் அகத்துறிஞ்சலை அதிகரித்திருப்பதுடன், என்பிலிருந்து கனியுப்புகள் இழக்கப்படுவதைக் குறைக்கும். பொசுபேற்றானது உயர்ந்தளவில் உள்ளெடுக்கப்படுவதால் இது என்பிலிருந்து கனியுப்புக்கள் இழக்கப்படுவதை அதிகரிக்கும். இது தீமை பயப்பதாகும்.

**திருமதி நி.ஜெ. ஜேன்ஜெசிக்கா**
செய்முறை காட்டுனர்,
விலங்கியற்றுறை.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 26

**5 பக்கங்களைக் கொண்ட பல்கோணி எவ்வாறு அழைக்கப்படும்?**

**விடைகளை 04-08-2010 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

Mr. S.Selvarajan
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Mathematics & Statistics,
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 24க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

ஆரணி விக்னேஸ்வரன்
பாடசாலை வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

**புதிர் 25 இற்கான விடை: Alaska**

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல . 26

சரியான விடை :........................................
முழுப்பெயர் :........................................
முகவரி :........................................
:........................................
கையொப்பம் :........................................

# தமிழில் சொற்பொழிவு இலக்கியம் 4

## தோற்றமும் வளர்ச்சியும்

### செம்மொழி மாநாட்டு ஆய்வுக் கட்டுரை


சு.லலீசன்
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை




மேனாட்டார் ஆட்சியில் தமிழகம் சிக்குண்டிருந்த காலங்களில் பிரசங்கம் மேற்கொள்ளப்படுவதில் உள்ள சிக்கல்களை மேற்படி கூற்று எடுத்துக்காட்டுகிறது. மேலும் "இக்காலத்தில்' சொற்பொழிவு என்ற சொல்லைத் தமிழறிஞர்கள் வழங்குகின்றார்கள். வானத்து நின்று பொழியும் மழைபோல, மேடையினின்று பொழியும் சொல்மாரியைச் சொற்பொழிவு என்ற சொல் உணர்த்துவதாகும். முப்பது ஆண்டுகளுக்கு முன்னே "சொற்பொழிவு ஆற்றுப்படை" என்ற நூலை இயற்றினார் ஒரு தமிழறிஞர். சொற்பொழிவு செய்யும் முறைகளை எடுத்துரைத்துப் பேச்சாளருக்கு நெறிகாட்டுவது அவ்வுரைநடை நூல். ஆயினும் சொற்பொழிவு என்னும் சொல், புதுச் சொல்லாய் இருந்தமையால், அந்நூலை ஏளனம் செய்யத் தலைப்பட்டனர் பலர். சின்னாளில் இறந்துபட்டது அந்நூல். ஆனால், சொற்பொழிவு என்பது வழக்காற்றில் வந்துவிட்டது, எனக் குறிப்பிட்டார்.

சொற்பொழிவு என்பது வழக்காற்றில் வந்துவிட்டது எனக் குறிப்பிட்டார்.

"சொற்பொழிவு ஆற்றுப்படை" என்ற நூல் ஒன்று 1982 ஆம் ஆண்டளவில் இருந்ததாக இக்கட்டுரை மூலம் அறிய முடிகின்றது. மேலும் சொற்பொழிவு என்ற சொல் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே தோற்றம் பெற்றதாக உணர முடிகின்றது.

சமயத்தளத்தில் செல்வாக்குப் பெற்ற பிரசங்கம் அரசியல்வாதிகளுடைய கைகளுக்குச் சென்ற போது பல சவால்களைச் சந்தித்ததுடன் புதிய பரிமாணத்தையும் பெற்றது. ஆற்றல் வாய்ந்த பேச்சாளர் ஒருவரால் நாட்டின் தலைவிதியை மாற்ற முடியும். இதனை உலக வரலாறு எமக்குக் கற்றுத் தருகின்றது. தமிழ் மரபிலும் பல தலைசிறந்த பேச்சாளர்கள் அரசியல்வாதிகளாக நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பவர்களாகத் திகழ்ந்துள்ளனர்.

பிரசங்கத்தின் வளர்ச்சி நிலையில் இருபதாம் நூற்றாண்டில், அது பல மாற்று வடிவங்களைக் கண்டது. இசையுடன் சொற்பொழிவாற்றும் மரபு தோற்றுவிக்கப்பட்டது. இதனைக் கதாபிரசங்கம் என அழைப்பர்.

நிலத்தில் அமர்ந்திருந்தவாறு இசைக் கோலங்களை இடையிடையே பயன்படுத்தி சொற்பொழிவாற்றும் செயற்பாடு கதாப் பிரசங்கம் எனப்படுகிறது.

இன்றும் கருத்தரங்கு, சுழலும் சொற்போர், பட்டி மண்டபம், ஆய்வரங்கம் எனப் பல வடிவங்கள் இன்று செல்வாக்குப் பெறுவதற்குச் சொற்பொழிவே அடிப்படையாகும்.

'சொற்பொழிவு' பொருண்மை நிலையிலும்மாற்றங்களை கண்டுள்ளது. ஆரம்பத்தில் சமயக் கருத்துக்களை கூறுவதற்காகப் பெரும்பாலும் பயன்பட்ட வடிவம் இன்று இலக்கியம், அரசியல் , ஆன்மீகம், கலை, பண்பாடு என எவ்விடத்தையும் பற்றிக் கையாள்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

மகாகவி பாரதியார் கவிதைச் சொற்பொழிவு என்ற புதுமையைப் படைத்துள்ளார். அவரது 'சத்திரபதி சிவாஜி' என்ற படைப்புக் கவிதைச் சொற்பொழிவாகக் கொள்ளப் படுகின்றது. இதற்குப் பின்வரும் பகுதி சான்றாக அமையும்.

'ஜயஜய பவானி! ஜயஜய பாரதம்!

............................

சேனைத் தலைவர்காள்! சிறந்தமந் திரிகள்!

யானைத் தலைவரும் அருந்திறல் வீரர்காள்!'

(பாரதியார் கவிதை: தேசியப்பாடல்கள்:, சத்திரபதி சிவாஜி என விழித்துக் கவிதைச் சொற்பொழிவு தொடர்ந்து செல்கிறது. இதனைப்பிரசங்கத் துறையில் அல்லது கவிதைத்துறையில் ஒரு பரிசோதனை முயற்சி எனலாம்.

சொற்பொழிவு மரபு சமூகத்தில் பெற்ற செல்வாக்கின் அளவு வலுப்பெற்று இன்று தொழில்சார் பேச்சாளர்கள் பலரைத்தோற்றுவித்துள்ளது. 'சொல்வேந்தர்' சுகிசிவம், 'கம்பவாரிதி' இ.ஜெயராஜ் போன்றோர் இத் தகையோருக்கு எடுத்துக்காட்டுக்களாக அமைவர்.

இன்று நம்மிடையே நிலவுகின்ற பிரதான இலக்கிய வடிவங்களாக நாவல், சிறுகதை , திறனாய்வு , கவிதை, நாடகம் என்பன கொள்ளப்படுகின்றன. ஆயினும் இலக்கியத்திற்குரிய தகுதிப்பாடு கொண்ட சொற் பொழிவு, நேர்காணல் (செவ்வி), கடித இலக்கியம் முதலியனவற்றை இலக்கியங்களாகக் கொள்ள முடியும். இது பற்றிக் குறிப்பிடும் ச.சிவகாமி "பிரசங்கம்" என்பது கட்டுரை இலக்கியத்தின் மாற்று வடிவம் என ஏற்கலாம். கடித இலக்கியம் போன்று இதுவும் இன்னும் தோற்ற நிலையிலேயே உள்ளது. சொற்பொழிவு, பிரசங்கம், சொற் பெருக்கு, சிறப்புரை, உரை, உபந்யாசம், மேடைப் பேச்சு எனப் பலவாறாக வழங்கப்படும். இவ்விலக் கியம் நாடகக் கலை போன்று மேடையைத் தன் பிறப்பிடமாக கொண்டுள்ளது என்கிறார்.

இலத்திரனியல் ஊடகங்களின் வளர்ச்சி தொழில்சார் சொற்பொழிவாளர்களின் பெருக்கத்திற்கு வாய்ப்பாக உள்ளது. பிரபல சொற்பொழிவாளர்கள் தமது சொற் பொழிவுகளை ஒலி நாடாக்களாகவும், இறுவட்டு (CD) ஆகவும் வெளியிட்டுள்ளனர்.

நவீன தொடர்பு சாதனங்களின் பெருக்கம் இத்துறை சார்ந்த தீர்க்கமான, சிறப்பான எதிர்கா லத்திற்கு ஆதாரமாக உள்ளது. இந்நிலை யில் ' சொற்பொழிவு' காலத்திற்குக் காலம் வளர்ச்சிபெற்று சமூக மாற்றத்தை ஏற்ப டுத்தும் சக்தியாகவும் விளங்கிவருவதால் அதனை நவீன இலக்கியங்களில் ஒரு வடிவமாக கொள்வது இக்கலையின் வளர்ச் சிக்கு உரஞ்சேர்ப்பதாக அமையும்.

(முற்றும்)

## நிறைவேற்றதிகார பிரதமர் முறையை விட நாட்டில் வேறு முக்கிய தேவைகள் உள்ளன

### ஐ.தே.க.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பில் அரசாங்கம் உண்மையான விருப்பத்துடன் செயற்படுகின்றதா என ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

அரசியல் சாசனத் திருத்தம் தொடர்பில் அரசாங்கம் உண்மையான அர்ப்பணிப்புடன் எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றதா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்துடன் இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியதன் பின்னர், ஐக்கிய தேசியக் கட்சி இந்த சந்தேகத்தை வெளியிட்டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு பதிலாக நிறைவேற்று அதிகாரப் பிரதமர் முறைமையை அறிமுகப்படுத்துவதனை விடவும் நாட்டில் வேறு முக்கிய தேவைகள் இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

17ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையமாக அமுல்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளதுடன் எதிர்க்கட்சிகளின் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் 17 ஆவது திருத்தச் சட்டமூலத்தை பூரணமாக அமுல்படுத்த வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜீ.எஸ்.பி.சலுகைத் திட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கையை எடுக்காது,நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் பதவி தொடர்பில் அரசாங்கம் அதிக கரிசனை கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்துவது குறித்தும் அராசங்கம் இரட்டை நிலைப்பாட்டை கடைப்பிடித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(6-2)

## பொன்சேகாவிற்கு சிறப்புரிமைகளை வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவிற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமைகளை வழங்குமாறு கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான எழுத்துமூல உத்தரவை சிறைச்சாலை ஆணையாளருக்கு அனுப்பி வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாராளுமன்றக் கூட்டத்தொடர்களுக்கும் குழு நிலை விவாதங்களுக்கும் உரியநேரத்தில் சமூகம் அளிக்கக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் எனவும் சிறைச்சாலை ஆணையாளர் கேட்கப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சரத்பொன்சேகா சபாநாயகரிடம் நேற்று முன்தினம் முறையிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(6-2)

## பள்ளிவாசல்துறையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் ஒருவர் பலி

(கொழும்பு)

கற்பிட்டி பள்ளிவாசல்துறை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஒருவர் பலியாகியுள்ளதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5.30 மணி அளவில் இடம்பெற்றுள்ளது.

பள்ளிவாசல்துறை விமானப்படை முகாமில் கண்டெடுக்கப்பட்ட கூரான இந்த குண்டைப் பயன்படுத்தி இளநீர் காயை உடைக்க முற்பட்டபோது அது வெடித்து சிதறியதில் இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

பள்ளிவாசல் துறையைச் சேர்ந்த 32 வயதான நபரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

(6)

## 23 வருடங்களின் பின்னர் தற்காலிக இடத்தில் முல்லைத்தீவு நீதிமன்றம் ஆரம்பம்

(கொழும்பு)

இருபத்திமூன்று வருடங்களின் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் முல்லைத்தீவு நகரத்தில் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது. முல்லைத்தீவு அரச செயலகக் கட்டடத் தொகுதியில் தற்காலிக இடத்தில் வவுனியா மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன் இந்த நீதிமன்றத்தை நேற்று முன்தினம் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

இந்தத் திறப்பு விழா வைபவத்தில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ஏ.எம். எம்.ரியால் கிளிநொச்சி மாவட்ட நீதவான் பெ.சிவகுமார் வவுனியா மாவட்ட நீதவான் எம்.கணேசராஜா முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் என். வேதநாயகன் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலக அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் அண்மைக் காலமாக வவுனியாவில் இயங்கி வருகின்றது என்பதும் இதற்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான நீதி நியாயாதிக்கச் செயற்பாடுகள் வவுனியா மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

வாரந்தோறும் புதன்கிழமைகளில் இந்த நீதிமன்றம் முல்லைத்தீவில் செயற்படுவதுடன், ஏனைய தினங்களில் வவுனியாவில் செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் டிசம்பர் மாதம் வரையில் இந்த ஏற்பாடு இருக்குமென்றும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் இந்த நீதிமன்றம் முழுமையாக முல்லைத்தீவில் செயற்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் போர்க் காலத்திற்கு முன்னர் இயங்கி வந்த அதனுடைய சொந்த இடத்தில் சகல வசதிகளையும் கொண்டதாக நீதிமன்றக் கட்டடத் தொகுதியை புதிதாக அமைப்பதற்கு நீதியமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. விரைவில் இந்தக் கட்டட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(6-2)

# தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை -2010

வலயக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்

## மாதிரி பரீட்சை–12 வினாத்தாள் –II

1 மணி நேரம்- 15 நிமிடம்

பிராணிகளிற்கிடையே இடம்பெற்ற உரையாடலினை நன்கு வாசிக்க.

குரங்கு:- கொப்புக் கொப்பாய் தாவித்திரியும் என் வழித்தோன்றலில் பிறந்தவன் மனிதன். அவர்களுடைய தொழிலுக்கு மட்டும் என்னை ப்யன்படுத்திக்கொள்வர். நல்ல தீனியும் கொடுக்கின்றனர். அங்குமிங்கும் அலைந்து திரியும் என்னை கூண்டில் அடைத்து வைத்திருப்பதை நான் வெறுக்கின்றேன்.

பூனை :-'ஆகா! என் வாழ்க்கை கொண்டாட்டம் தான் நான் மனிதன் தருபவற்றையும் உண்பேன். வேட்டையாடியும் உண்பேன். பஞ்சு போன்ற என்மென்மையான உடலை தடவி மனிதன் என்மீது அன்பு செலுத்துகிறான்.என்னை நன்றாகவும் கவனித்துக்கொள்கிறான்'

பசு :- என் கதையையும் கேளுங்கள் என்னை என் வீட்டில் கோமாதா என்று போற்றி வளர்க்கின்றனர். என் உறைவிடமும் நன்றாக உள்ளது. பசும் புற்களை தரும்போது மளமள என்று தின்பேன். அதற்கு நன்றிக்கடனாக பாலைக் கொடுப்பேன்.

பின்வரும் வினாக்களுக்கு உரையாடலை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.

1. "தீனி" என்பதன் ஒத்த கருத்தை தருக.
2. அடுக்கு மொழிச்சொல் ஒன்று தருக.
3. "வெறுக்கின்றேன" என்பதன் எதிர்ப்பதம் யாது?
4. "தின்பேன்" என்பதன் சரியான வடிவம் யாது?
5. இங்கு இடம்பெற்ற உவமைத்தொடர் ஒன்று எழுதுக.
6. இணை மொழிச்சொல் ஒன்று தருக.
7. இங்கு இடம்பெற்ற உவமைத்தொடர் ஒன்று எழுதுக.
8. தன்மை ஒருமை பெயர்ச்சொல் ஒன்று தருக.
9. இங்கு இடம் பெற்றுள்ள வினை அடைமொழிச் சொல் ஒன்று தருக.
10. "பசும் புற்களை" என்பதை பிரித்தெழுதுக.

(10 புள்ளி)

2. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.
   i. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்.
   ii. ஆத்திரக்காறனுக்கு புத்தி மட்டு.

(2 புள்ளி)

3. பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.
   i. இராச்சியத்தை எப்படிக் காப்பாற்றுவீர்கள்.
   ii. பொதுமக்களே சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருங்கள்

(2 புள்ளி)

4. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக ஆக்கி எழுதுக.
   i. சமகல்வி/ சகலருக்கும்/ உச்சப/ வழங்குவோம்/ வளங்களின்/ மூலம்/ பயன்பாட்டினை/ வாய்ப்பினை
   ii. விபத்துக்கள்/ கவலையீனம்/ எமது/ ஏற்படுகின்றன/ காரணமாகவே

(4 புள்ளி)

5. பின்வரும் இடைவெளிக்கு பொருத்தமான எழுத்துக்களை தெரிவு செய்து எழுதுக.

ம — தன் தொழி — ட்பமுறைகளை கையா — டு
வே — களை இலகுவாக்கிக் கொ — கின்றான்
ணி, ன், னி, னு, னி, ண்
று, லை, ளை, ல, ள்

(2 புள்ளி)

6. பின்வரும் சிங்கள வாக்கியத்தின் தமிழ் கருத்தினை எழுதுக.
   i.அம்மா கெதற எனவா
   ii.அப்பி பாசலட்ட யமு

(2 புள்ளி)

7. "சோறு தாருங்கள்" என்பதனை சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.

(1 புள்ளி)

8.பின்வரும் வினாக்களின் தமிழ்க்கருத்தை எழுதுக.
   i.Spiders -------------
   ii.Fourteen -------------
   iii.Calender -------------

(3 புள்ளி)

9.பின்வரும் தொடரின் ஆங்கிலக் கருத்தை (ஆங்கில எழுத்தில்) எழுதுக.
   i.மிகவும் நல்லது.
   ii.தயவு செய்து வெளியே போங்கள்.

(2 புள்ளி)

10.மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1.வயல்களில் தீங்கு விளைவிக்கும் பூச்சி புழுக்களை பிடித்து உண்ணும் இராக்காலப்பறவை

1. காகம் 2. ஹனான் 3. வந்தை 4. வௌவால்


2."எதிர்காலத்தில் எனது நாட்டிற்கு பயன் உடைய ஒருவனாக வருவேன்" என்ற மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடு அமையப்பெறுவது.

1. மனதை தளர்த்தல் 2. மலர்வு 3. பிரார்த்தனை 4. மனஉறுதி

3. தரப்பட்ட படத்தினை அவதானித்து 3,4 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

படத்தில் சகல இனமக்களும் வணங்கச் செல்லும் மலையை குறிக்கும் எழுத்து.

1. A 2. B 3. P 4. C





4. படத்தில் எழுத்து R குறிக்கும் ஆறு கடலுடன் கலக்கும் நகரம்
   1. திருகோணமலை
   2. கொழும்பு
   3. களுத்துறை
   4. காலி

5. உப்பு இட்டு வைப்பதற்கு மிக உகந்த பாத்திரம்.
   1. பிளாஸ்டிக் போத்தல் 2. இறப்பர் போத்தல்
   3. கண்ணாடிப் போத்தல் 4. தகரப்பேணி

6. இலங்கையில் கட்டிப்பாற் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்.
   1. அநுராதபுரம் 2. பொலன்னறுவை 3. கண்டி 4. அம்பேவல

7. பசுமாட்டிற்கு ஏற்படும் "பாற்காய்ச்சல்" நோய் ஏற்பட்ட முக்கியமனா காரணம்.
   1. பக்ரீரியா கிருமி 2. வைரஸ் கிருமி
   3. கல்சியக் குறைபாடு 4. புரதக் குறைபாடு

8. 
   உருவில் காட்டியவாறான அமைப்புடைய நிலவினை வானில் எத்தனையாம் நாள் காணலாம்.
   1. வளர்பிறை 5 ஆம் நாள்
   2. தேய்பிறை 8 ஆம் நாள்
   3. வளர்பிறை 8 ஆம் நாள்
   4. தேய்பிறை 9 ஆம் நாள்


9. பின்வருவனவற்றில் நெற்தாவரத்தின் விளைச்சலைப் பாதிப்பது
   1. கபிலநிறத் தத்தி
   2. மயிர்க்கொட்டி
   3. மண்புழு
   4. வண்டு

10. நள்ளிரவில் பூக்கும் பூ
   1. அல்லி 2. நாகலோகப்பூ 3. அல்லி 4. தாமரை

11. துறப்பணம் பயன்படுத்தப்படுவது,
   1. மரப்பலகை அரிய 2. மரப்பலகையை மட்டுப்படுத்த
   3. ஆணியை இறுக்க 4. மரப்பலகையில் துளையிட

12. 60W, 230V ஆகிய குறியீடுகள் காணப்படுவது
   1. தைனமோ 2. மின்கலத்தில்
   3. மின்குமிழில்
   4. திரவவாயு போத்தலில்

13. மின்னேரியா குளத்தை கட்டிய அரசன்
   1. வலகம்பா 2. துட்டகைமுனு
   3. தாது சேனன் 4. மகாசேனன்


14. 
   இந்த உபகரணத்தின் பயன்பாடு
   1. நிறையை அளத்தல்
   2. மழைவீழ்ச்சியை அளத்தல்
   3. நேரத்தை அறிதல்
   4. திசையை அறிதல்

15. உடல் வளர்ச்சிக்கு அவசியமான போசனைக் கூறு
   1. காபோவைதரேற்று 2. கொழுப்பு 3. புரதம் 4. கனியுப்பு

16. ITN என்பது
   1. தேசியதொலைக்காட்சிச்சேவை
   2. சுயாதீனதொலைக்காட்சி சேவை
   3. சக்தி தொலைக்காட்சி சேவை
   4. சுவர்ணவாகினி

17. தனிப்பட்ட ஒருவரின் உடற்சுத்தம் தொடர்பான நடவடிக்கை அல்லாதது.
   1. நகங்களை வெட்டுதல்
   2. சாப்பிடுமுன் கைகளைக் கழுவுதல்
   3. தினமும் உடலைக் கழுவுதல்
   4. நீர்ப்பாத்திரத்தை மூடிவைத்தல்

18. அதிக வெளிச்சத்துடன் எரியும் மின்விளக்கு



19. உருவில் காட்டியுள்ள வீதிக் குறியீடு வெளிப்படுத்தும் கருத்து யாது?



1. சிறுவர் கடவை முன்னால் 2. முன்னால் பாதசாரிக்கடவை
3. பாதசாரிக் கடவை
4. சிறுவர் கடவை


20. "நமதாரருள் ஆனாய் நவைத்தவிர் ---------" தேசிய கீதத்தின் சில வரிகளில் விடுபட்ட இடத்திற்கு வரவேண்டிய சொல்
1. மலரனாய் 2. வலியானாய்
3. உணர்வானாய் 4. சுதந்திரமானாய்

21. புடோல் கொடியின் பூவின் நிறம் யாது?
1. நீலம் 2. மஞ்சள் 3. ஊதா 4. வெள்ளை

22. துவிச்சக்கர வண்டியின் பின்புறச் சேறு தடுப்பானி அடிப்புறத்தில் 23Cm நீளப் பகுதிக்கு பூசப்படும் நிறம்.
1. கறுப்பு 2. சிவப்பு 3. வெள்ளை 4. கபிலம்

23. 'நுரைச்சோலை அனல் மின்நிலையம்' அமைந்துள்ள மாவட்டம் எது?
1. யாழ்ப்பாணம் 2. மட்டக்களப்பு
3. திருகோணமலை 4. புத்தளம்

24. பின்வருவனவற்றுள் தகரம் ஒன்றை வெட்ட பயன்படும் கருவி.




25. இவ்வாறான அமைப்பினை உடைய தாவரம் பின்வருவனவற்றுள் எது.



1. சதகரைச்சான் 2. நாயுருவி 3. திப்பிலி
4. நன்னாரி

26. வித்துக்கள் மூலமாகவும், வேரின் மூலமாகவும் கன்றுகளைப் பெறக்கூடிய தாவரம்.
1. மா 2. கமுகு 3. கித்துள் 4. கொய்யா


27. இவ்வாறான அமைப்புடைய கூட்டுப் புழுவிற்குரிய பிராணி




1. நுளம்பு 2. வண்ணத்துப்பூச்சி 3. தவளை
4. வீட்டு ஈ

28. வியாபாரம் ஒன்றின் நோக்கம்
1. சொத்துக்களை அதிகரித்தல் 2. இலாபத்தை அதிகரித்தல்
3. பொருட்களை கொள்வனவு செய்தல் 4. பொருட்களை விளம்பரப்படுத்தல்

29. துணி ஒன்றில் அடையாளமிடுவதற்கு பயன்படும் உபகரணம் பின்வருவனவற்றில் எது.





30. இவ்வாறான குறியீடு குறித்து நிற்பது,




1. இலங்கை மின்சார சபை
2. மீள் சுழற்சிக்குட்படுத்தக் கூடியது
3. சிற்றுண்டிச் சாலை
4. மின்தாக்கக்கூடிய பொருட்கள்

II கீழே தரப்பட்ட பயணித்த தூர அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு இரு வினாக்களிற்கு விடைதருக.





1. I. சுன்னாகத்திலிருந்து மருதனார்மடம் வரையுள்ள தூரத்தைக் குறிப்பிடுக?
II. யாழ்ப்பாணத்திலிருந்து சுன்னாகம் வரும் ஒருவர் மீண்டும் யாழ்ப்பாணம் சென்றார் எனின் அவர் சென்ற மொத்தத் தூரம் யாது?




தென்பகுதியிலிருந்து வடபகுதிக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் விபரம் வரைபு காட்டுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| மாவட்டம் | தொகை |
|---|---|
| கொழும்பு | ........ |
| .................. | .......... |
| ..................... | 50 |
| அம்பாறை | 30 |
| மொத்தம் | 170 |

3.




படத்தில் காட்டியவாறு போன்ற போக்குவரத்து வண்டிகள் எதிரெதிரே பயணத்தை மேற்கொள்கின்றன. பஸ் வண்டி 10 நிமிடத்தில் 5Km ரையும் கார் வண்டி 15 நிமிடத்தில் 5Km ரையும் அடையும் எனின் ஒரேநேரத்தில் புறப்படும் இருவண்டிகளும் சந்திக்கும் எழுத்தினைக் குறிப்பிடுக.

4. கழிக்குக. :- $\frac{1}{2} - \frac{1}{3}$


□ X △ = 12

□ ÷ △ = 3

5. □ = .........6
△ = .........2
பெறுமானங்களை எழுதுக.


6. 2250g சீனி கொள்வனவு செய்யும் நபர் ஒருவர் இதே போன்ற அளவின் மூன்று மடங்கு நிறையுடைய மாவையும் கொள்வனவு செய்கின்றார்.
i. அவர் கொள்ளவனவு செய்த பின் மாவின் நிறையாது?
ii. கொள்வனவு செய்த சீனி ஒவ்வொன்றும் 250g பக்கற் கொண்டிருக்கும் எனின் அவர் மொத்தமாக எத்தனை பக்கற் பெற்றிருப்பார்.

7. இரண்டும் ஒரே அளவுடைய உருக்கள் ஒன்றை ஒன்று எதிரே பொருத்தப்பட்டுள்ளது.




i. தடித்த கோட்டின் மொத்த நீளம் யாது?

8.



9. கமலன் தனது சேமிப்பில் பகுதியை கோயிலுக்கு காணிக்கையாகக் கொடுத்தான். மீதிப்பணத்தின் பகுதியை தனது தாயிடம் கொடுத்தான். அவனது தாய் அவன் கொடுத்த பணத்தின் பெறுமதியைப் பார்த்தபோது ரூ150.00 இருந்ததை அவதானித்தான்.
1. அவன் கோயிலுக்குக் கொடுத்த பணத்தின் பெறுமதி யாது?
2. அவன் மொத்தமாக வைத்திருந்த பணம் (சேமிப்பு) எவ்வளவு?

10. 400m தூர ஓட்டம் சம்பந்தமாக இரு மாணவர்களின் உரையாடல் பின்வருமாறு

| | |
|---|---|
| விமலன் :- | நான் ஏழு கழிந்து ஐம்பதிற்கு ஆரம்பித்து ஒன்பதிற்கு ஐம்பத்தைந்து நிமிடத்தில் முடித்தேன். |
| மோகன்:- | நான் ஏழு கழிந்து ஐம்பதிற்கு ஆரம்பித்து எட்டுக் கழிந்து பத்து நிமிடத்தில் முடித்தேன். |

இவற்றினை கருத்திற் கொண்டு பின்வரும் வினாவிற்கு விடை தருக.
1. இவர்களில் முதலில் ஓடி முடித்தவனின் பெயரைக் குறிப்பிடுக.
2. இறுதியாக ஓடியவன், ஓடி முடித்த நேரத்தை குறிப்பிடுக.

அன்று விடுமுறை நாள் ஆகையால் குமார் பொழுதைக் கழிப்பதற்காக கடற் கரைக்குச் சென்றான். அங்கே வெற்று ஐஸ்கிரீம் கோப்பைகளும்,இளநீக் கோதுகளும், சோடாப் போத்தல்களும், பொலித்தீன் பைகளும் அங்குமிங்கும் அங்கு வீசிக்கிடக்கும் பொருட்கள் பற்றி எவ்வித அக்கறையுமின்றி தம்போக்கில் வந்து போய்க் கொண்டிருந்தனர். நீதான் குமார் எனக் கருதி அம்மனிதர்களுக்குக் கூறக் கூடிய அறிவுரைகளை ஆறு வாக்கியங்களில் எழுதுக
(ஒவ்வொரு வாக்கியமும் சரியான எழுவாய் பயனிலையுடன் கூடியதாகவும் ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாமலும் அமைதல் வேண்டும்)

# ஆடி மாத இராசி பலன்கள்

## கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூர்ட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள்)*

**கொடுத்த பொறுப்பை கவனமுடன் செய்து முடிக்கும் கும்பராசி நேயர்களே!**

சஞ்சலத்திற்கும், சந்தேகத்திற்கும் சொந்தக்காரர்கள் நீங்கள். பிறரை எளிதில் நம்பி ஏமாற்றத்தையும் சந்தித்திருப்பீர்கள். சிலரை நம்பாமல் நல்ல வாய்ப்புக்களையும் இழந்திருப்பீர்கள். வெளிவட்டாரப் பழக்கவழக்கம் அதிகம் பெற்றவர்கள் நீங்கள். நட்பு வட்டத்தில் உங்களுக்கென ஒரு தனி மதிப்பு, மரியாதையும் இருக்கும்.

ஆடிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாத தொடக்கத்திலேயே அஷ்டமத்தில் சனி சஞ்சரிக்கிறார். ஆறில் சூரியன் சஞ்சரிக்கிறார். சனியோடு, செவ்வாயும் சேரப் போகிறார். எனவே, மிக மிக கவனத்தோடு செயல்பட வேண்டியமாதம் இதுவாகும்.

ஆரோக்கிய பாதிப்புகள் அடிக்கடி ஏற்படலாம். மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும். கூட்டாளிகள் விலகலாம். கூடி இருப்பவர்களை அனுசரித்துச் சென்றால் தான் குதூகலத்தை வரவழைத்துக் கொள்ள முடியும்.

தனலாபாதிபதி குருவும் இம்மாதத்தில் வக்ரம் பெறுகிறார். எனவே, எதிர்பாராத விரயங்கள் அதிகரிக்கும். திட்டமிட்டு செலவு செய்ய இயலாது. ஆதரவாளர்கள் விலகலாம். எனவே, இறைவழிபாடே உங்கள் இலட்சியத்தை நிறைவேற்றும். தெசாபுத்திக்கேற்ப சுயஜாதக ரீதியாக தெய்வ தரிசனங்களை மேற்கொண்டால், செல்வம் வருவதில் சிக்கல் ஏற்படாது.

எட்டில் சனி சஞ்சரிக்கும் சூழ்நிலையில், அத்தோடு செவ்வாயும் ஜூலை 21ஆம் திகதி இணைகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. மனக்கசப்பு தரும் சம்பவங்கள் ஏராளமானவற்றை சந்திக்கும் சூழ்நிலை ஏற்படும். பக்கத்தில் இருப்பவர்களிடமும், பணிசெய்யுமிடத்திலும் கருத்து வேறுபாடுகள் உருவாகும். வாகனங்களில் செல்லும் பொழுது கூடுதல் கவனம் தேவை. குடியிருக்கும் வீட்டால் பிரச்சினைகள் உருவாகலாம். அன்னதானம் மற்றும் வஸ்திர தானங்களைச் செய்வதோடு, அங்கையர் கன்னி முதல் ஆதிபராசக்தி வரை முறையாக பெண் தெய்வ வழிபாடுகளை மேற்கொண்டால், பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும்.

ஜூலை 22ஆம் திகதி சிம்மராசியில் புதன் சஞ்சரிக்கிறார். இடமாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றங்களை ஒருசிலர் சந்திக்க நேரிடலாம். பிள்ளைகள் வழியில் பெரும் செலவொன்று ஏற்படலாம். திடீர் பயணம் திசை மாறும். ஓகஸ்ட் 2ஆம்திகதி கன்னி ராசியில் சுக்ரன் உலா வரப் போவதால், தாயின் உடல் நலத்தில் கவனம் தேவை. பெற்றோர் ஒத்துழைப்பு குறையலாம். பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

இம்மாதம் இன்பங்களை மட்டுமே சந்திக்க அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். வெள்ளிக்கிழமை விரதம் இருப்பது நல்லது.

தனலாபாதிபதி வக்ரம் பெறும்பொழுது, தளர்ச்சியையே அதிகம் சந்திக்க நேரிடும். வீண் விரயங்கள் அதிகரிக்கும். குழப்பங்கள் மேலோங்காமல் இருக்க கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை. பயணங்களால் பலன் கிடைப்பது அரிது. இனம் புரியாத கவலை மேலோங்கும். தென்முகக்கடவுள் வழிபாடு நன்மையே வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் குடும்ப விவகாரங்களில் மூன்றாம் நபரால் பிரச்சினைகள் உருவாகலாம். மற்றவர்களை விமர்சித்து பேசுவதை தவிர்ப்பது நல்லது. பிறரை நம்பி ஒப்படைத்த பொறுப்பு உங்களிடம் வந்துசேரும். பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய மாதமிது. குடும்ப சுமை கூடும். மருத்துவச் செலவு தவிர்க்க முடியாது. வழிபாடு வளர்ச்சி தரும்.

## மீனம்

*(பூரட்டாதி 4ஆம்பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*

**மற்றவர்கள் குற்றம் சொல்லும் பொழுது, அதை மறைக்காமல் ஒத்துக் கொள்ளும் மீன ராசிநேயர்களே!**

பிறர் மனம் புண்படாமல் பேசுவதால், நட்பு வட்டம் உங்களுக்கு அதிகமாக இருக்கும். முன்னோர்களுடைய செயல்களை எடுத்துக்காட்டாகச்சொல்வீர்கள். பழைமையில்நம்பிக்கை அதிகம்வைத்திருந்தாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளமாட்டீர்கள். யாரைப் பிடித்தால் இந்தக் காரியம் நடக்கும் என்பதை அறிந்து வைத்திருக்கும் கெட்டிக் காரர்கள் நீங்கள்.

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, உங்கள் ராசிக்கு ஏழில் சனி வீற்றிருந்து உங்கள் ராசியையே பார்க் கிறார். எனவே, ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுஅகலும். சீரான வாழ்க்கையில் சிக் கல்களும், திடீர் திருப்பங்கள் வந்து சேரும். ஒரு கவலை ஓய்ந்தால், மற்றொரு கவலை தலைதூக்கும். எனவே, துலாம் ராசிக்கு செவ்வாய் செல்லும் வரை பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

இம்மாதம் குருவும், வக்ரகதியில் இயங்குகிறார். ராசிநாதன் வக்ர கதியில் இயங்கும் பொழுது செயல்பாடுகளில் எவ்வளவு தான் தீவிரம் காட்டினாலும், காரியங்கள் கடைசி நேரத்திலேயே கைகூடும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாது என்பதால் எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் சொல்வதே நல்லது.

ஜூலை 21ஆம்திகதிஏழாமிடத்தில் சனியோடு, செவ்வாய் சேருகிறார். ஏழில் செவ்வாயும், சனியும் இணைந்தால் இல்லத்தில் பிரச்சினைகள் அதிகரிக்கும். உள்ளத்தில் அமைதி குறையும் என்பர். எனவே, குடும்ப உறுப்பினர்களிடம் கொந்தளிப்பு ஏற்படாமல் இருக்க எந்தநாளும் அனுசரித்துப் போவது நல்லது. நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புக்கள் ஏற்பட்டு நீங்கும். வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். வாழ்க்கைத் துணையிடம் கோபப்படாமல் இருப்பது நல்லது. பிரச்சினை களை பெரிதாக்கிப் பார்க்காமல் இருந்தால் நிம்மதி கிடைக்கும்.

ஜூலை 22ஆம்திகதி சிம்மராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக குடும்பத்தில் சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிவிற்குவரும். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும். வாகன யோகமும், வளர்ச்சியும் ஏற்படும். புதிய வாகனங்களை வாங்கும் சூழ்நிலை அமை யும். ஆகஸ்ட் 2ஆம் திகதி கன்னிராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். 8க்கு அதிபதி உச்சம்பெறுவதால், இழப்புக்களை ஈடு செய்யும் வாய்ப்புக்கள் உருவாகும். தொழில் மாற்ற சிந்தனை மேலோங்கும்.

இம்மாதம் குரு, சனி, செவ்வாய் ஆகிய மூன்றையும் அதற்குரிய சிறப்பு தலங்களுக்குச் சென்ற வழிபட்டு வந்தால், குதூ கலத்தை நாளும் சந்திக்கலாம்.

**சிவல்புரி சிங்காரம்**

உங்கள் ராசிக்கு அதிபதியாகவும், பத்தாமிடத்திற்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால், இதன் வக்ர இயக்கம் நன்மைதான் என்றாலும், ராசிநாதனாக குரு விளங்குவதால், ஆரோக்கியத்தில் மட்டும் அச்சுறுத்தல் ஏற்படலாம். தொழில்மாற்றம், இடமாற்றம் வந்து சேரலாம். ஒரு சிலருக்கு நாடு மாற்றங்களும் நன்மைசெய்யும் வித்த்தில் அமையும். நண்பர்களுக்கு பொறுப்பு சொல் வதை தவிர்ப்பது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

குடும்ப நலன் கருதி மற்றவர்களிடம் விட்டுக் கொடுத்துச்செல்வது நல்லது. அண்டை, அயலாருடன் வரும் சண்டைகளை சமாளிப்பீர்கள். கடன் சுமை கூடும். பிள்ளைகள் வழியில் மருத்துவச் செலவு களும் ஏற்ப டும். தாய்வீட்டின் மூலம் கிடைத்த ஆதாயங்கள் விரயமாகலாம். இடம், பூமி விற்பனையானாலும், புதிய இடம் வாங்கும் சூழ்நிலை அமையும். மாதக் கடைசியல்பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். (முற்றும்)

---

# வவுனியாவில் 4 கிராமங்களில் மீள்குடியேற்றத்துக்கு அனுமதி

(கொழும்பு)

வவுனியாப் பிரதேசத்தில் நான்கு கிராமங்களில் மீள்குடியேற்றத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் திருமதி.எவ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய சேமமடு இளமருதன் குளம், ஆறுமுகத்தான் புதுக்குளம், மாளிகை ஆகிய நான்கு கிராமங்களில் சுமார் 350 குடும்பங்களை மீளக்குடியமர அனுமதித்துள்ளதாகவும் இந்தக் குடும்பங்கள் தற்போது தமது சொந்த வாழ்விடங்களைச் சுத்திகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு கூரைத் தகடுகளைப் பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறிய அரச அதிபர் அடுத்தவாரம் இந்தியாவிலிருந்து கூரைத் தகடுகள் தருவிக்கப்பட்டதும் விநியோகிக்கப்படும் எனவும் தெரிவித்தார். (6-2)

# புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஒக்டோபர் முதல் ஆரம்பம்

## தேர்தல்கள் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாவது வாரத்தில் இருந்து புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படும் என தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தம்மைப் பதிவு செய்வதற்கு இதுவரை 86 கட்சிகளும் அமைப்புக்களும் விண்ணப்பித்துள்ளதுடன் இதற்கான விண்ணப்பங்கள் கடந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து 30 ஆம் திகதி வரை கோரப்பட்டிருந்தது.

தற்போது வெளிநாட்டில் தங்கியுள்ள தேர்தல் ஆணையாளர் தயானந்தா திஸ்ஸாநாயக்கா எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நாடு திரும்பவுள்ளதோடு அதன் பின் விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும் என மேலும் தெரிவிக்கப்படுகிறது. (6-2)

# இலங்கைப் பணிப்பெண்கள் இருவர் மரணம்

(கொழும்பு)

ஜோர்தான் மற்றும் லெபனான் அகிய நாடுகளில் இரண்டு இலங்கைப் பணிப்பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

ஜோர்தானில் பணிபுரிந்துவந்த அனுராதபுரம் ஹொரவப்பொத்தானைப் பகுதியைச் சேர்ந்த 35 வயதான பெண்ணொருவர் தனக்குத்தானே தீமூட்டித் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அந்த நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் மேற்கொண்ட விசாரணைகளில் இது ஒரு தற்கொலை மரணமென உறுதிசெய்யப்பட்டுள்ளதாகப் பணியகத்தின் பொது முகாமையாளர் எல் கே ருஹுனுகே தெரிவித்தார்.

இதேவேளை லெபன்னானில் பணிபுரிந்து வந்த மாத்தறைப் பகுதியைச் சேர்ந்த 35 வயதான பெண்ணொருவர் வயது குறைந்த ஒருவர் செலுத்திய வாகன விபத்தில் சிக்கிய போது உயிரிழந்துள்ளார்.

இந்த இரு இலங்கைப் பெண்களினது சடலங்களை இலங்கைக்கு கொண்டு வர வெளிவிவகார அமைச்சுடன்இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொதுமுகாமையாளர் கூறினார்.

இவர்களுக்கான இழப்பீடுகளையும் நிலுவைச் சம்பளத்தையும் பெற்றுக் கொடுக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (6-2)

# கொழும்பிலுள்ள பிரித்தானிய விசா விண்ணப்ப நிலையம் இடமாற்றம்

(கொழும்பு)

கொழும்பு 03 டுப்பிளிகேஷன் வீதியில் அமைந்துள்ள பிரித்தானிய விசாவிற்கான விண்ணப்ப நிலையம் புதிய இடத்திற்கு மாற்றப்படுவதை முன்னிட்டு இன்று அவ் அலுவலகம் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இன்றைய தினம் புதிய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் இடம்பெறமாட்டாது எனவும் ஏற்கனவே வழங்கிய கடவுச்சீட்டுக்களை இன்று பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரையிலும் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை புதிய விசா விண்ணப்ப நிலையம் லெவல் 5 அக்ஸஸ் டவர்ஸ் 278 யூனியன் பிளேஸ் கொழும்பு02 என்ற இடத்தில் காலை 10.30 மணிக்கு திறந்து வைக்கப்பட்டு பிற்பகல் 2.30 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள் ளப்படும் எனவும் அதனைத் தொடர்ந்து 27 ஆம்திகதிசெவ்வாய்க்கிழமை முதல்வழமை போல் காலை 8 மணிக்கு பணிகள் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)



ஏழாலை தெற்கு சூராவத்தை சுன்னாகம்
முத்துமாரி அம்மன்
இரதோற்சவம்/ தீர்த்தோற்சவம்

இரதோற்சவம் :- சனிக்கிழமை, 24/07/2010 காலை 6.30 மணிக்கு உற்சவம் ஆரம்பமாகி வசந்த மண்டபப் பூஜையுடன் அருள்மிகு முத்துமாரி அம்பாள் பகல் 10.45 மணிக்கு தேரில் ஆரோகணித்து அதன் பின் பச்சை சாத்திய அலங்காரத்துடன் இருப்பிடம் வந்து சேருவாள்.

விசேட நாதஸ்வர இசையுடனான உற்சவம்

தீர்த்தத் திருவிழா :- அருள்மிகு முத்துமாரி அம்பாளின் தீர்த்தத்திருவிழா காலை 7.30மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி 10.00மணி வசந்த மண்டப பூஜை உடன் பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகி 1.00 மணிக்கு நிறைவுபெறும்.

விசேட இசைக்கச்சேரி –
இசைஞானி திலகம்:–
ராதாகிருஸ்ணன் குழுவினரால்
கூட்டுவாத்திய இசை 10.30 – 12.30 வரை

மாலை நிகழ்ச்சியாக அம்பாள் திருவூஞ்சலுடன் தொடங்கி கொடி இறக்கம் தொடர்ந்து சண்டேஸ்வரி உற்சவம், ஆச்சாரிய உற்சவத்துடன் நிறைவு பெறும்.

உற்சவ தினங்களில் விசேட மகேஸ்வர பூஜை, அன்னதானம் நடந்தேற அம்பாள் அன்னபூரணியாக அருள்பாலித்துள்ளார்.

பல நூற்றாண்டு காலமாக ஏழாலை தெற்கு சூராவத்தை கிராமத்தின் பிரபஞ்ச சக்தியாக
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள்
தருக்குடி அமர்ந்து சகல ஐஸ்வரியங்களையும் அப்பிரதேச மக்களிற்கும் சகல ஜீவராசிகளிற்கும் அருளி சரித்திர பிரசித்தி பெற்றுள்ளாள்.

விளம்பரதாரர்:–
துரை வெதுப்பகம், துரை தொலைத் தொடர்பகம்
துரை பல்பொருள் வாணிபம்

சூராவத்தை,
சுன்னாகம்.
தொ.பே.இல – 021–2240378
021–2240344
(1896)


# கூரைகளின்றி காணப்படும் பாடசாலைகள்;
# கிளிநொச்சியில் கல்வி நிலை பாதிப்பு
## வலயக்கல்விப் பணிப்பாளர் கவலை

கிளிநொச்சி வலயத்தில் இருக்கின்ற பெரும்பாலான பாடசாலைகளின் கட்டடங்கள் முழுமையாக அழிவடைந்திருக்கின்ற அதேவேளை மிகுதியான கட்டிடங்களின் பெரும்பாலானவை கூரைகளின்றி காணப்படு வதால், கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி நிலை தொடர்ந்தும், சீர்குலைவதாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனால் 52 பாடசாலைகளுக்கு சிடிஎம்ஏ தொலைபேசிகள் வழங்கும் நிகழ்வில் தலைமையுரை ஆற்றும் போதே இதை அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி வலயத்தில் 22ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட கற்றலில் ஈடுபட்டுள்ள மாணவர்களில் 40 வீதமானவர்களுக்கு மட்டுமே தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதே வேளை அதிகரித்துவரும் மாணவர் தொகைக்கு ஏற்ப 20க்கும் மேற்பட்ட கொட்டகைகளை பாடசாலைகளில் உடன் தீர்க்கப்படாதவிடத்து எதிர்வரும் பருவமழை காலம் கல்வி செயற்பாடுகளை சீர்குலைக்குமென அச்சப்படுவதாகவும் கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கவலை வெளியிட்டார். (6-2)

## குன்றும் குழியுமான வீதியால் மக்கள் பயணிப்பதில் சிரமம்

(வட்டக்கச்சி)

கிளிநொச்சி – இராமநாதபுரம் வீதியானது குன்றும் குழியுமாக காணப்படுவதால், மக்கள் போக்குவரத்து செய்வதற்கு பெரும் சிரமப்படுகின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது; நீண்ட காலமாக கிளிநொச்சி – இராமநாதபுரம் வீதியானது சீராக்கப் படாததன் காரணமாக, இவ்வீதியால் பயணிக்கும் மக்களோ வானங்களோ பெரும் சிரமத்தின் மத்தியிலேயே பயணம் செய்கின்றன.

வீதியால் பயணிக்கும் வாகனங்கள் கிறவல் புழுதியை ஏற்படுத்துவதால், விபத்துக்கள் ஏற்படுகின்றன. தற்போது மக்கள் இப்பிரதேசத்தில் மீளக் குடியேற்றப் பட்டதால், தமது அன்றாட அவசரத் தேவைக்கு இவ் வீதியால், செல்வதற்கு சிரமம் ஏற்படுகிறது.


எனவே இதில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து இவ்வீதியை சீர்செய்வதற்கு, ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு, இப்பகுதி வாழ் மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (6-2)


aat கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

Tally
ஒரிஜினல் சான்றிதழ் எம்மிடமிருந்து மட்டுமே!
Certified Computer Accountant Courses
2-3 Months

ASIAN COMPUTER EDUCATION
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-3734088
230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி. T.P : 021-3213390


# 23.07.2010
# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



## நிகழ்வுகள்

- 1632 - நியூ பிரான்சில் குடியேறுவதற்காக 300 குடியேற்றவாதிகள் பிரான்சில் இருந்து புறப்பட்டனர்.
- 1793 - புருசியர்கள் ஜெர்மனியின் மாயின்ஸ் நகரைக் கைப்பற்றினர்.
- 1829 - ஐக்கிய அமெரிக்காவில் வில்லியம் ஒஸ்டின் பேர்ட் முதலாவது தட்டச்சியந்திரத்திற்கான காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1840 - கனடா மாகாணம் என்ற பெயரில் பிரித்தானிய குடியேற்ற நாடு வட அமெரிக்காவில் அமைக்கப்பட்டது.
- 1874 - இலங்கையின் சட்டசபையின் தமிழ்ப் பிரதிநிதி முத்து குமாரசுவாமி இங்கிலாந்தில் சேர் பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்டார்.
- 1914 - ஆஸ்திரியாவின் முடிக்குரிய இளவரசர் பிரான்ஸ் பேர்டினண்ட்டின் கொலையாளியைக் கண்டுபிடிக்க ஆஸ்திரியா - ஹங்கேரி சேர்பியாவுக்கு காலக் கெடு விதித்தது. இதனை அடுத்து ஜூலை 28, 1914 இல் முதலாம் உலகப் போர் ஆரம்பமானது.
- 1929 - இத்தாலியின் பாசிச அரசு வெளிநாட்டுச் சொற்களைப் பயன்படுத்த தடை விதித்தது.
- 1942 - நாசி ஜெர்மனியரினால் போலந்தில் டிரெப்லின்கா வதை முகாம் யூதர்களுக்காக அமைக்கப்பட்டது.
- 1952 - எகிப்தின் பாரூக் மன்னரின் ஆட்சிக்கு எதிரான இயக்கத்தை ஜெனரல் முகமது நக்கீப் ஆரம்பித்தார்.
- 1961 - நிக்கராகுவாவில் சன்டினீஸ்டா தேசிய விடுதலை முன்னணி அமைக்கப்பட்டது.
- 1962 - லாவோஸ் நாட்டின் அரசியலில் வெளிநாடுகள் தலையிடாதிருக்க சர்வ தேச ஒப்பந்தம் லாவோஸ் உட்பட 15 நாடுகளுக்கிடையில் ஜெனீவாவில் கைச்சாத்திடப்பட்டது.
- 1967 - அமெரிக்காவின் வரலாற்றில் மிகப்பெரும் கலவரம் ஆபிரிக்க அமெரிக்கர்கள் செறிந்து வாழும் டிட்ராயிட் நகரில் இடம்பெற்றது. 43 பேர் கொல்லப்பட்டு 342 பேர் காயமடைந்தனர். ஆயிரத்துக்கும் அதிகமான கட்டிடங்கள் எரிக்கப்பட்டன.
- 1970 - ஓமானின் காபூஸ் அவரது தந்தை சாயிட் பின் தாமூரின் ஆட்சியைக் கைப்பற்றி நாட்டின் சுல்தானாகப் பதவியேற்றார்.
- 1983 - திருநெல்வேலி தாக்குதல், 1983 : விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தியதில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். புலிகளின் மூத்த உறுப்பினர் செல்லக்கிளி இத்தாக்குதலில் கொல்லப்பட் டார்.
- 1988 -பர்மாவில் இடம்பெற்ற மக்களாட்சிக்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்களை அடுத்து 1962ஆம் ஆண்டில் இருந்து ஆட்சி நடத்திய இராணுவத் தளபதி நெவின் பதவியைத் துறந்தார்.
- 1992 - ஓரினச்சேர்க்கையாளர்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்தும் தீர்மானத்தை ஜோசப் ரட்சிங்கர் தலைமையிலான சிறப்புக் குழு வத்திக்கானில் முடிவெடுத்தது.
- 1995 - ஹேல் - பொப் என்ற வால்வெள்ளி சூரியனுக்கு வெகு தொலைவில் கண்டுபிடிக்கப்பட்டது. இது கிட்டத்தட்ட ஓராண்டிற்குப் பின்னர் வானில் தெரிந்தது.
- 1999 - சந்திரா எக்ஸ் - கதிர் அவதான நிலையம் என்ற செய்மதி ஏவப்பட்டது.
- 2005 - எகிப்தில் இடம்பெற்ற மூன்று குண்டுவெடிப்புகளில் 88 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - ஹரியானாவில் குருஷேத்திரத்தில் 60 அடி ஆழ் துளைக் குழியில் வீழ்ந்த சிறுவன் 50 மணி நேரத்தின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டான்.

## பிறப்புகள்

- 1856 - லோகமான்ய திலகர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ.1920)
- 1892 - முதலாம் ஹைலி செலாசி, எதியோப்பிய மன்னர் (இ.1975)
- 1975 - சூர்யா, இந்தியத் தமிழ் திரைப்பட நடிகர்
- 1984 - பிரான்டன் ராய், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

## இறப்புகள்

- 1885 - யுலிசீஸ் கிராண்ட், அமெரிக்க ஜனாதிபதி (பி.1822)
- 1916 - சேர் வில்லியம் ராம்சி, நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (பி.1852)
- 1925 - சுப்பிரமணிய சிவா, இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1884)
- 1989 - தேவிஸ் குருகே, இலங்கை வானொலியின் முதலாவது சிங்கள அறிவிப்பாளர்
- 1957 - பெ.வரதராஜுலு நாயுடு, இந்திய அரசியல் வாதி(பி.1887)



**1983 ஆம் ஆண்டு இந்நாளில் தான் கறுப்பு ஜூலைக் கலவரம் ஆரம்பமானது. இரண்டுவாரங்களில் 3 ஆயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.**

# சிறையில் வாடும் எங்களை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா ?

## கொழும்பு வெலிக்கடை பெண்கள் பிரிவில் இருந்து ஓர் உருக்கமான கடிதம்

ஆண்டுகள் பல கடந்துள்ள நிலையில், எங்களைப்போல இலங்கையில் இருக்கின்ற சிறைச்சாலைகள் அனைத்திலும் நூற்றுக்கணக்கான உறவுகள் கண்களில் நீர்வழிய கானலாகிப் போகும் தங்கள் விடுதலைக்குரிய நாட்களை எண்ணி கிடைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதியுட்பட எவருக்கெல்லாம் மனிதநேயமுள்ளதென நினைக்கிறார்களோ அவர்களுக்கு எல்லாம், உதாரணமாக வத்திக்கானில் வாழ்கின்ற 63 ஆவது பாப்பரசர் வரைக்கும் எங்கள் விடுதலையைக் கோரி எழுதி அனுப்பிய கடிதங்களுக்கு அளவேயில்லை, அதனூடான முடிவுகளுமில்லை.

எங்கள் கடிதங்களும் கைது செய்யப்பட்டு விட்டனவா என்று நினைக்கத் தோன்றும் எண்ணங்களின் வேதனையை இறைதூதன் கேளாத நாளில்லை. அழுது அழுது அலுத்துப் போய் அமைதியின் விசனத்தில் ஆர்ப்பரிக்கும் எங்களின் உள்ளமும் உடலும் நலிந்து சாவைக் கேட்கிறது.நாம் மனிதர்களா / மிருகங்களா என்பதற்குக் கூட எவரும் பதில் சொல்லவில்லை.

குடிக்கும் தண்ணீரிலிருந்து, உண்ணும் உணவு வரைக்கும், அடிப்படைத்தேவை முழுவதும் அலட்சியப்படுத்தப்பட்டு அசிங்கமான வாழ்க்கையைத் தந்தன.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும், அவசர காலச் சட்டமும், நாம் எந்த நேரமும் கொல்லப் படலாம் என்ற எண்ணம் வருவதில் என்ன தான் தப்பிருக்கிறது?

உறவுகளைப் பிரிந்து உற்றவர் யாவரையும் பிரிந்து நாதியற்றுக் கிடக்கும் எங்களை விடுதலை செய்யுங்களென்றுதானே கேட்கிறோம். எங்கள் கடிதங்களை வாங்கியவர்களே, எங்களை மறந்துவிட்டீர்களா? தயவு செய்து எங்கள் கடிதங்களைப் பாருங்கள். எங்கள் பரிதவிப்பிற்கு பதில் சொல்லுங்கள். ஜனநாயகம் எங்களுக்கில்லையா?

ஐந்து வயதுப் பிள்ளையோடு தாயும், தாயின் தாயுமாக இங்கே பரிதவித்து நிற்கின்றோம். தாய்க்குலங்களுக்கே தலைவிதி இதுதானா? கண்கள், கால்கள்,கைகள் என உடலுறுப்புக்களை இழந்து தடுமாறித் தவிக்கும் உங்கள் உறவுகளை உதாசீனப் படுத்துவது ஏனோ?

கணவனைப் பலி கொடுத்தோர் , காணாமல் போயுள்ளோரைத் தேடிவந்ததால் கைது செய்யப்பட்ட எங்களையும் காப்பாறுங்கள் என்று தானே கேட்கிறோம். குழந்தைகளும் தாய்மாரும் படுகின்ற பெருந் துன்பத்தை யாராவது நிறுத்துங்கள் என்று தானே கேட்கிறோம். பெற்றவர்கள் பாலைக் கொடுப்பதற்கும், பிள்ளைகள் பாலைக் குடிப்பதற்கும் படுகின்ற வேதனை விபரிக்க முடியாதவொன்று. அம்மா, அப்பா எங்கே? எப்போது எங்களை விடுதலை செய்வார்கள் என்ற பல கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாது தவிக்கும் தாய்மார்களுக்கு தயவுள்ள நீங்களாவது பதில் சொல்லமாட்டீர்களா? நாங்கள் பெண்கள்!

தூங்கமுடியாது.துணிதுவைக்கமுடியாது அல்லற்படுகின்றோம். எங்களுக்கென தனித்துவமான எதுவுமில்லாத நிலையில் எங்களை எப்படிப் பார்க்கிறீர்கள்?

அரசியல் தலைவர்களே, மனித நேயமுள்ளவர்களே, பல்லைக்கழக ஒன்றியங்களே, மகளிரமைப்புக்களே உங்களுக்கு விருப்பம் ஏதுமில்லையா? உங்களைத் தான் கேட்கிறேம். எங்களை விடுதலை செய்ய வழிசமையுங்கள். தயவுசெய்து எங்கள் இன்னல்களைப் புரிந்து கொள்ளுங்கள்.

உங்களை விட்டால் எங்களுக்கு வேறு யார் கதி? உங்கள் கருணைக் கண்களைத் திறந்து எங்களை ஒருமுறை பாருங்கள். நீங்கள் நிச்சயம் மிக விரைவில் எங்களை விடுவிப்பீர்கள் என்ற நம்பிக்கையில்தான் நாட்களைக் கடத்துகிறோம்.

நன்றி

*இலங்கையில் உள்ள சிறைகளில் வாடும் மகளிர் தமிழ் அரசியல் கைதிகள் சார்பாக*

*கொழும்பு வெலிக்கடை மகளிர் பிரிவு.*

# நாடளாவிய ரீதியில் வாக்காளர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 26 ஆயிரத்தால் அதிகரிப்பு

## அமைச்சர் நிமல்சிறிபால டிசில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் வாக்காளர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 26 ஆயிரத்து 536 ஆல் அதிகரித்துள்ளதாகவும் தேர்தல் இடாப்பு நடவடிக்கைகள் அடுத்த மாதம் முதலாம் திகதி நிறைவுபெறுமெனவும் சபை முதல்வர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வாக்காளர் இடாப்பு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் பதிலளித்துப் பேசுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தேர்தல் இடாப்பு தயாரிக்கும் நடவடிக்கைகள் ஒரு மாத காலத்துக்கு தாமதமாகியதற்கு அடுத்தடுத்து இரண்டு தேர்தல்களை இவ்வருடத்தில் எதிர்கொண்டமையே காரணமாகும்.

புதிய தேர்தல் இடாப்பில் 1.61 வீதம் வாக்காளர்கள் தொகை அதிகரித்துள்ளதுடன் அகில இலங்கை ரீதியில் 2 இலட்சத்து 26 ஆயிரத்து 536 வாக்காளர்கள் அதிகரித்துள்ளனர் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

கம்பஹா மாவட்டத்தில் 1.58 வீதத்தினாலும் களுத்துறை மாவட்டத்தில் 1.68 வீதத்தினாலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 6.7 வீதத்தினாலும் திகாமடுல்ல மாவட்டத்தில் 1.2 வீதத்தினாலும் திருகோணமலை மாவட்டத்தில் 1.67 வீதத்தினாலும் யாழ் மாவட்டத்தில் 13.12 வீதத்தினாலும் வாக்காளர் தொகை அதிகரித்துள்ளது.

இதேவேளை 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், கொழும்பு மாவட்ட வாக்காளர் தொகை 18 ஆயிரத்து 668 ஆல் குறைந்துள்ளதுடன் இரட்டைப் பதிவினால் கொழும்பில் வாக்காளர் தொகை குறைந்தது எனவும் இதனால் 2008 இல் 51 ஆயிரத்து 638 பேரினதும் 2009 இல் 19 ஆயிரத்து 172 பேரினதும் பெயர்கள் நீக்கப்பட்டன.

கொழும்பு மாவட்டத்தில் இன்று 15 இலட்சத்து 29 ஆயிரத்து 896 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (6-2)

# ஒலுவில் துறைமுகம் அடுத்த வருடம் மக்கள் பாவனைக்காக விடப்படவுள்ளது

## பிரதியமைச்சர் ரோஹித்த தெரிவிப்பு

(கொழும்பு)

ஒலுவில் துறைமுகத்தை அடுத்த வருடம் முதல் மக்கள் பாவனைக்காக ஒப்படைக்கலாம் என துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் பிரதிஅமைச்சர் ரோஹித்த அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

துறைமுகத்தின் முதல் கட்ட நிர்மாணப் பணிகள் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தியடைந்துவிடும் என்றும் அதனை 2011 இல் மக்கள் வசப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஒலுவில் துறைமுகத்தின் நிர்மாணப் பணிகளை பார்வையிடுவதற்காக விஜயம் மேற்கொண்டிருந்த போதே பிரதி அமைச்சர் இவ்வாறு கூறினார்.

டென்மார்க் அரசாங்கத்தின் 46.1 மில்லியன் யூரோ கடனுதவித் திட்டத்தின் கீழ் இத்துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகள் 2008 இல் 56 ஹெக்டர் நிலப்பரப்பில் ஆரம்பமானதாகவும் இரண்டு கட்டங்களாக அமைக்கப்படும் இதன் வர்த்தகத் துறைமுகம் 300 மீற்றர் நீளம் மற்றும் 8 மீற்றர் ஆழம் கொண்டதாக அமைக்கப்படுகிறதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-2)

# இலங்கையர் உட்பட 73 சட்டவிரோத குடியேற்றவாசிகள் பல்கேரியாவில் கைது

(கொழும்பு)

இலங்கையர் உட்பட தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த 73 சட்ட விரோதக் குடியேற்றவாசிகள் பல்கேரியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கிரேக்க - பல்கேரிய எல்லையூடாக ட்றக் வண்டியொன்றில் மறைந்துகொண்டு ஹங்கேரிக்குள் பிரவேசிக்க முயன்ற வேளை யில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பல்கேரிய உள்துறை அமைச்சை மேற்கோள் காட்டி செய்தி ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

ஆஃப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த இந்த சட்டவிரோதக் குடியேறிகள், கிரேக்கத்திலிருந்து ஹங்கேரிக்கு பழவகைகளை ஏற்றிச் செல்லும் ட்ரக் வண்டியொன்றின் குளிரூட்டப்பட்ட இரகசிய அறைக்குள் மறைந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (6)

# மின்சார இணைப்பிற்கு விண்ணப்பிக்க சந்தர்ப்பம்

(கொழும்பு)

மின்சார இணைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக முல்லைத்தீவு மாவட்ட மக்கள் பிரத்தியேகமாக விண்ணப்பிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதென இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மக்கள் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாகத் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்க முடியுமென மின்சார சபையின் தலைவர் வித்யா தில்ருக் அமரபால கூறினார்.

இதேவேளை நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக மின் உற்பத்தி 60 வீதத்தை தாண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (6)

# நாடு முழுவதிலுமுள்ள சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சேவை இல்லங்கள் அமைக்கப்படும்

## அரசாங்கம் நடவடிக்கை


அரச நிர்வாகம் மக்களுக்கு இலகுவில் சென்றடையும் வகையில் வடக்கு,கிழக்கு உட்பட நாடு முழுவதிலுமுள்ள சகல பிரதேச செயலாளர் பிரிவுகள் தோறும் சேவை இல்லங்களை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டிலுள்ள 330 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சேவை இல்லம் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கென 330 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாக பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்தது.

வடக்கு, கிழக்கு உட்பட சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஒருங்கிணைந்த சேவையை பிரதேச மக்கள் பெற்றுக் கொள்ள முடிவதுடன் ஒவ்வொரு சேவை இல்லத்திலும் ஒரு கிராமசேவகர்,ஒரு சமுர்த்தி அதிகாரி, விவசாய உத்தியோகத்தர் மற்றும் குடும்ப சுகாதார உத்தியோகத்தர் என அரச உத்தியோகத்தர்கள் செயற்படவுள்ளனர். (6-2)

# தமிழ்ப் பண்பாட்டை பாதுகாக்க தமிழினம் முன்வர வேண்டும்

தமிழ்ச் சமூகம் அமைதியான சூழலில் மீளக்கட்டியெழுப்பப்படல் வேண்டும். எமது பொருளாதாரமான கல்வி, விவசாயம், மீன்பிடி என்பவற்றினை நாம் மேம்படுத்தல் வேண்டும். ஒவ்வொரு தமிழனின் இதயமும் தமிழ்ப் பண்பாட்டு மையமாகத் திகழ வேண்டும்.



**வைத்திய கலாநிதி சி.யமுனானந்தா**

தற்போதைய சூழலில் ஆரோக்கியமான கேள்விகளை நாம் எமக்கு உள்ளேயும் மற்றவர்களிடமும் வினவ வேண்டும். ஆக்கபூர்வமான வினாக்களே வலுவான தீர்வுகளிற்கான விடைகளைத் தரும். எமக்குள் முணு முணுக்கும் கருத்துக்களை வெளிப்படையாகக் கூறல் வேண்டும். இதுவே இனங்களுக்கு இடையிலான இடைவெளியைக் குறைக்க உதவும். நீடித்த சமாதானத்தினை ஏற்படுத்தும் இதனை நாம் வெற்றியடையச் செய்தால் உலக அமைதிக்கான நோபல் பரிசினைக் கூட இலகுவாகப் பெற்றிடலாம்.

நீடித்த சமாதானத்தினைப் பெற்றிட நாம் தமிழ் பண்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் பல்வேறு பரிமாணங்களை ஆரோக்கியமான நிலைக்கு மாற்றல் வேண்டும். அவையாவன:

தமிழ் பண்பாட்டில் வரலாற்றின் தாக்கம் தமிழருக்கு என நீண்ட பண்டைய வரலாறு உண்டு. இதனை அனைவரும் அறிந்திருத்தல் வேண்டும்.

மேலும் தமிழின் அண்மைய வரலாறாக இலங்கையில் நடைபெற்ற யுத்தமும் அதனால் ஏற்பட்ட புலம்பெயர்வும் உள்ளது.

இலங்கையில் நடைபெற்ற யுத்தம் இனங்களிற்கு இடையிலான இடைவெளியினை அதிகரித்துள்ளது. பேசாப் பொருள்களாக யுத்த வடுக்கள் அமைந்துள்ளன. அடுத்து புலம்பெயர்வு வாழ்வு ஒருமொழிக்கு பயந்து பல மொழிக்குள்வாழும் வாழ்வினை ஏற்படுத்தியுள்ளது. அடுத்து தமிழர் பண்பாட்டில் அரசியல் தாக்கம் பாரியபாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. அரசியல் உரிமைகளை மறுப்பதற்காக தமிழ் பண்பாட்டினை சீர் குலைக்கக் கூடாது. அரசியல் நடத்துவதற்காக தமிழ்ப் பண்பாட்டினை விலை பேசக் கூடாது. தமிழ் அரசியல்வாதிகள் ஜனநாயகம் அல்லாத வழியில் அரசியல் நடத்தக் கூடாது.

இலங்கையில் மதம், மொழியினை அரசியல் திண்மப் பொருளாகக் கொள்ளக் கூடாது. தமிழ் மக்களிற்கும் அரச நிர்வாகத்திற்கும் உள்ள தொடர்பினை தடுக்கவோ அல்லது இடைவெளியினை அதிகரிக்கவோ அரசியல்வாதிகள் முனையக் கூடாது.

தமிழ் அரசியல் கட்சிகள் தற்போதைய சூழலில் கருத்து ஒருமித்து இணைதல் வேண்டும். பல பேருந்துகள் வெவ்வேறு திசையில் பயணித்தாலும் பயணிகளின் நன்மை கருதி ஒருங்கிணைந்து செயற்படுவது போல் இன்றைய சூழலில் தமிழ்க் கட்சிகளும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து செயற்படல் வேண்டும்.

தமிழ் மக்கள் சந்தித்த ஊழிக்கால அழிவுகளைக் கருத்திற் கொண்டு மீண்டும் ஒருவருக்கு ஒருவர் முரண்படும் அரசியலை வளர்க்கக்கூடாது.

## அநீதிக்கு விலைபோவது இனத்தை விற்பதாகும்

அவ்வாறு அவர்கள் செய்யின் அது மீண்டும் தமிழின அழிவுக்கும், உலக வல்லரசுகளின் செயற்றிட்டத்திற்கும் பிராந் திய ஆதிக்க சக்திகளின் செயல் திட்டத்திற்கும் பலியாக வேண்டிய துர்நிலை ஏற்படும்.

எனவே எமது மக்கள் பிரதிநிதிகள் எம்மினத்தின் நீடித்த அமைதிக்கு ஒன்றிணைந்து செயற்படுவதே காலத்திற்குப் பொருத்தமானதாகும். அதுவே சிறந்த சமூக விஞ்ஞான அணுகுமுறையாகவும் அமையும்.

தமிழ்ப் பிரதேசங்களில் அபிவிருத்தி என்ற பெயரில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அபகரிக்கப்படலையோ அழிக்கப்படலையோ ஏற்றுக்கொள்ள முடியாது.

அபிவிருத்திக்காக மக்களின் வாழ்விடங்கள் அபகரிக்கப் படக்கூடாது. எமது பிரதேசத்து வளங்களை வெளிநாட்டவர்கள் சூறையாடுவதற்கு இடமளிக்கக்கூடாது. அபிவிருத்தி என்ற பெயரில் தமிழரின் மூலதனம் அகற்றப்படல் கூடாது. வட பிரதேசம் தமிழ் மக்களது சரணாலயமாகக் கருதப்பட்டுப் பேணப்படல் வேண்டும்.

தமிழர் பண்பாட்டில் அரச நிர்வாகத் தாக்கம் பலத்த விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இங்கு நிர்வாக அதிகாரிகள் பணத்திற்காகவும் பதவிக்காகவும் அநீதிக்கு துணை போதல் கூடாது. யுத்தத்தின் போது இருந்த கட்டுப்பாடுகள் அல்லது இராணுவச் சார்பு நிலைகளை தற்போது மேற்கொள்ளக்கூடாது.

மக்களை அச்சுறுத்தி அல்லது அச்சுறுத்தும் விதத்தில் நிர்வாகம் நடத்தக்கூடாது. பொதுமக்களின் பொருளாதார வளங்களை திசை திருப்பக்கூடாது. அரச நிர்வாக அதிகாரிகள் இன முரண்பாடுகளை அதிகரிக்கும் விதத்தில் நடக்கக் கூடாது. தமிழர் பண்பாட்டில் பாதுகாப்பு அணுகுமுறையின் தாக்கம் சாதகமான நிலைக்கு மாற்றப்படல் வேண்டும்.

சைவ சமயத்தினை புண்படுத்தும் விதமாக நடக்கக்கூடாது சமய வழிப்பாட்டுத் தலங்களை தரிசிக்க வழிவிடல் வேண்டும்.

ஆயுத முனையில் பௌத்த சின்னங்களை நிறுவக் கூடாது . உலகில் அல்கைடா தீவிரவாதிகளே ஒரு கையில் ஆயுதமும் மறுகையில் மதப் பிரசா ரமும் செய்கின்றனர். அவ்வாறு இலங்கை யிலும் ஆயுதமும் மதமும் ஒன்றிணைந் திருத்தல் நல்லதல்ல.

தமிழர் பண்பாட்டில் ஊடகங்களின் தாக்கம் ஆக்க பூர்வமானதாக அமைதல் வேண்டும். நடுநிலைமைத்தன்மை, உண்மையினை எடுத்துக்கூறல் என்பனவற்றை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள் கவனமாகக் கடைப்பிடித்தல் அவசியம். ஊடகங்கள் குறித்த ஒரு திசையில் மட்டும் பயணிக்கக் கூடாது. தமிழ்ப்பண்பாட்டின் ஆவணங்களாக தொல்லியல் சான்றுகளை நாம் கணனித் தொழில்நுட்பத்தின் மூலம் காத்தல் வேண்டும் இவற்றினை நாம் நெடுந்தீவு, நல்லூர், கந்தரோடை போன்ற இடங்களில் உள்ள தொல்பொருட்களில் பிரயோகிக்கலாம்.

மேலும் தென்னிந்திப் பல்கலைக்கழகங்களான தஞ்சாவூர், மதுரைப் பல்கலைக் கழகங்களின் தொல்லியல், வரலாற்றியல் பகுதியினருடன் கணனி வழி தொல்லியல் ஆய்வில் இணைந்த கள ஆய்வுகளை மேற்கொள்ளலாம். தமிழர் பண்பாட்டில் ஆரியர், சிங்களவர், அரேபியர் ,போர்த்துக்கீசர் ,ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என நூற்றாண்டுகளாகத் தாக்கம் ஏற்பட்டு வந்தது. இன்றைய உலகில் உலக பூகோள அரசியல் வழக்கில் இந்தியா, சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், ஜப்பான், ஐக்கிய நாடுகள் என்பன செல்வாக்குச் செலுத்தின. இன்னமும் தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடியன. இவற்றினை நாம் தமிழர் பண்பாட்டில் அந்நியரின் தாக்கம் என்ற ரீதியில் ஆராயலாம்.

இறுதியாக போருக்குப் பின்னான சூழலில் தமிழ்ப் பண்பாட்டின் மூலம் அன்பு நெறியினை எமது சமூகத்தில் நிலைக்ககச் செய்ய வேண்டிய கடமை எமக்கு உள்ளது. இச் சூழலில் மதமாற்றம் பாதகமானது. இங்கு அறநெறிக் கல்வி, அழகியல் கல்வி என்பவற்றினை மேம்படுத்தல் வேண்டும். இயல், இசை, நாடகம், சங்கீதம், பரதநாட்டியம் என்பவற்றினை மேம்படுத்தல் வேண்டும். திருக்குறள், தேவாரம், திருவாசகம், ஆத்திசூடி என்பவற்றினை செயல்நெறியில் புகுத்தல் வேண்டும். ஆலயத்திருவிழாக்களில் பட்டிமன்றம், வில்லுப்பாட்டு, புராணப் படிப்பு என்பவற்றினை ஊக்குவிக்க வேண்டும்.

சமூக ஒழுக்க விழுமியங்களை கல்லூரிகளிலும் பல்கலைக்கழகத்திலும் வேலைத் தளங்களிலும் பேணல் அவசியம் தமிழ்ப் பண்பாட்டினைச் சீர்குலைக்கும் தமிழன் தமிழினத்திற்கு எதிரானவனாகவே சமூகத்தினால் கருதப்படுவான்.

# கனிஸ்டன் சகல துறையிலும் ஜொலிப்பு யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி

யூனியஸ் கனிஸ்டனின் சகலதுறை ஆட்டத்தினால் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியினை 3 விக்கெட்டுக்களால் வென் றது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி .

இலங்கைக் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப்பிரிவினருக்கிடையில் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. மேற்படி சுற்றுப் போட்டியின் போட்டியொன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியினை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது.

இதில் நாணயச் சூழற்சியில் வென்ற சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதும் விக்கெட்டுகளை அடுத்தடுத்து இழந்தது. 48.2 ஓவர்களில் 141 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் பிறாங்கிளின்டன், கஜேந்திரன், கபிலன் முறையே 20, 18, 13 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பாக கனிஸ்டன் 3 விக்கெட்டுகளையும் சமிதரன், ஜெனிஜிதிரன், ஓனாசியன் முறையே 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 142 என்ற வெற்றி இலக்கை நோக்கிப் துடுப்பெடுத்தாட களம் இறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக்கு யூனியஸ் கனிஸ்டன் அரைச்சதம் அடித்து வெற்றியினை இலகுவாக்கினார். யாழ்ப்பாண மத்திய கல்லூரி அணி 38 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் யூனியஸ் 58 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் சென். பற்றிக்ஸ் கல்லூரி சார்பாக கஜீந்திரன் 3 விக்கெட்டுக்களையும் திஸாந்த எட்வின், வினுசாந்த எட்சன் தலா ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினர். (5)

# கொழும்பு - ஓமந்தை இடையிலான ரயில் சோதனையோட்டம்

(கொழும்பு)

கொழும்புக்கும் ஓமந்தைக்கும் இடையிலான ரயில் ஒத்திகை ஓட்டமொன்று எதிர் வரும் 31ஆம் திகதி நடைபெறவுள்ள தாக ரயில் நிலைய அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

ஓமந்தை ரயில் தண்டவாளத்தை புனரமைப்பதற்கான பெரும்பாலான வேலைகள் பூர்த்தியடைந்திருப்பதாகவும் ரயில் நிலையம் அமைப்பதற்கான பணிகள் மாத்திரமே இருப்பதாகவும் உத்துரு மித்துரு (வடக்கின் நண்பன்) திட்ட முகாமையாளர் பிரேமதிலக தெரிவித்துள்ளார்.

ஒரு மாதகாலத்திற்குள் ஓமந்தை ரயில் நிலைய புனரமைப்புப் பணிகள் முடிவடைந்து விடும் எனவும்; ஆனாலும் ஓமந்தை வரையான ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (6-2)

# ஆலயத்திருவிழாக்களின் போது திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

(கரவெட்டி)

மாலுசந்தை ஸ்ரீ வரதராஜ ஆலய வருடாந்த திருவிழாவின் இறுதி நிகழ்வான, இளைஞர் விழா இன்னிசை இரவு நிகழ்வு கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது. பெரும் திரளான பொதுமக்கள் கலந்து கொண்ட போது, அந்நேரத்தில் 9 சைக்கிள்கள் மற்றும் பெறுமதிமிக்க பொருட்கள் களவாடப்பட்டதாக, முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதிகளில் ஆலயத் திருவிழாக்கள் இடம்பெற்று வரும் இவ்வேளைகளில், இரவு நிகழ்ச்சிகளும் நடைபெற்று, வருவதனால், அதிகமான பொதுமக்களின் நகைகள், துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள் போன்றவற்றைத் திருடர்கள் அபகரிக்கும் சம்பவங்களும் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் கரணவாய் மூத்த விநாயகர் ஆலய இரவு நிகழ்ச்சியின் போது, மோட்டார் சைக்கிள் ஒன்றை களவாட முற்பட்ட சமயம், நெல்லியடி பொலிசாரினால், இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

(2-24)

# இலங்கை அரசை இந்தியா ஏன் கண்டிக்கவில்லை ?

## வைகோ கேள்வி



ஐ.நா.நிபுணர் குழுவை அனுமதிக்காத இலங்கை அரசை இந்தியா ஏன் கண்டிக்கவில்லை என்று வைகோ கேள்வி எழுப்பியுள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிப்பதற்கு ஐ.நா அமைத்துள்ள ஆய்வுக் குழுவை இலங்கை அனுமதிக்காமல் உள்ளது. இதை ஏன் இந்திய அரசு கண்டிக்கவில்லை. இலங்கை அரசுக்கு ஆதரவாக இந்தியா செயல்படுகிறது. ராஜபக்ஷ அரசுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் இந்திய அரசு செய்கிறது.

ஐ.நா. அலுவலகத்தை யே இழுத்து மூடுவோம் என்று அங்குள்ள அமைச் சர் ஒருவர் கூறுகிறார். ஐ.நா. அலுவலகத்தை மூடி அங்குள்ள பணியாளர்கள் வெளியே முடியாதபடி நடந்துகொண்டனர்.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இதற்கு கண்டனம் தெரிவித்துள் ளன.

இந்தியா ஏன் கண்டிக்கவில்லை.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை கண்டித்து வேதாரண்யத்தில் எனது தலைமையில் மதிமுக சார்பில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது என்றும் தெரிவித்தார்.(6)

# கடல் வழியாக பரவும் பிலிப்பைன்ஸ் பாசியால் தமிழகத்திற்கு ஆபத்து



(இராமநாதபுரம்)

பிலிப்பைன்ஸ் நாட்டின் பாசிகள் கடல் வழியாக, மன்னார் வளைகுடாவில் ஊடுருவியது தெரியவந்துள்ளதால் அதிகாரிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இதில் பிலிப்பைன்ஸ் நாட்டின் 'கப்பாபைகஸ் ஆல்வரேசி' என்ற கடல்பாசி பவளப் பாறைகளை மூடியிருப்பது தெரியவந்தது. றப்பர் போன்ற தன்மை கொண்ட இப்பாசிகள் பவளங்களில் படிந்து அவற்றின் சுவாசத்தை தடுத்து நிறுத்துகின்றன. இதனால் பவளப்பாறைகள் அழிவைச் சந்திக்கிறது.

கடந்த 1995 இல், பிலிப்பைன்சைச் சேர்ந்த குளிர்பான நிறுவனம் ஒன்று இந்தப் பாசியை இந்தியாவுக்கு அறிமுகம் செய்தது. இதை பவளப்பாறைகள் இல்லாத பாக்குநீரிணை கடற்பகுதியில் மீனவர்களை வளர்க்க செய்துள்ளது.

இதன்மூலம் சில நிறுவனங்களும், இடைத்தரகர்களும் பயன் பெற்று வருகின்றனர். பவளப்பாறைகள் அதிகம் கொண்ட மன்னார் வளைகுடாவில் இவற்றை வளர்க்க சாத்தியம் இல்லை என்ற நிலையிலும் பாக்கு நீரிணையிலிருந்து கடல் வழியாக ஊடுருவிய 'கப்பாபைகஸ் ஆல்வரேசி' பாசிகள் மன்னார் வளைகுடாவிலும் பரவி உள்ளது.

தற்போது மன்னார் வளைகுடாவின் சிங்கிள் , குருசடை, பூமரிச்சான் தீவுகளில் முற்றிலும் ஆக்கிரமித்துள்ள இப்பாசிகள் , எஞ்சியுள்ள 18 தீவுகளையும் விட்டு வைக்காது என்ற கவலை தற்போது எழுந்துள்ளது.

இப்பாசியால், பவளப் பாறைகள் பாதிக்கப்படுவதால், புவி வெப்பமடைவது தவிர்க்க முடியாதததாகி விடும்.

அதேநேரத்தில் ஆழிப்பேரலை, கடல் அதிர்வுகளை சமாளிக்கும்தன்மையை பவளப் பாறைகள் இழக்கும். இதனால், பாதிப்பு தமிழகத்திற்கு தான் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (6)

# இலங்கைக்கு சென்ற தமிழக எம்.பிக்கள் குழுவின் உண்மையான முகம் அம்பலமாகியுள்ளது

## ஜெயலலிதா குற்றச்சாட்டு



(சென்னை)

இலங்கையில் உண்மை நிலையை கண்டறிவதற்காக மற்றுமொரு குழுவை அனுப்புமாறு பிரதமரை முதல்வர் கருணாநிதி கேட்டுக் கொண்டதில் இருந்தே இதற்கு முன்பு அனுப்பப்பட்ட ஐக்கிய முற்போக்குக் கூட்டணி எம்.பி.க்கள் குழுவின் மதிப்பீடு உண்மைக்குப் புறம்பானது என்பது உறுதியாகியுள்ளது என அ.தி.மு.க.பொதுச் செயலாளர் ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில், இலங்கையில் உள்ள தமிழ் மக்களை சொல்லொணாத் துயரத்துக்குத் தள்ளிய இலங்கைப் போர் ஓர் ஆண்டுக்கு முன்பே முடிந்துவிட்டது.

பாக்கு நீரிணைக்கு அப்பால் மிக அருகில் உள்ள நமது தமிழ் சகோதர, சகோதரிகளின் இத்தகைய நெஞ்சைப் பிளக்கும் நிலைமை மனித உரிமை ஆர்வலர்கள். முற்போக்கு நாடுகளின் அரசுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் நியாயமான கிளர்ச்சியை, கோபத்தினை ஏற்படுத்தியுள்ளது.

போர்க்குற்றங்கள் நடைபெற்ற, இனப்படுகொலை நடைபெற்ற இலங்கை நாட்டை எவ்வித சட்டத்தையும் மதிக்காத குற்றவாளி நாடு என்று பிரகடனப்படுத்த வேண்டும் என்று இவைகள் கருதுகின்றன.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலிருந்து பத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கு சென்று பார்த்தனர். இந்தக்குழு இலங்கை அதிபரை சந்தித்தது.

இந்தக் குழு இலங்கையில் தமிழர்கள் எல்லோரும் நலமாக இருக்கிறார்கள் என்ற செய்தியுடன் இந்தியா வந்தடைந்தது.

ஆனால் 03.07.2010 அன்று இலங்கை தமிழர் பிரச்சினைக்காக பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதினார் கருணாநிதி. அப்படியானால் பத்து உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் பொய்யான தகவலைத் தெரிவித்து இருக்கிறார்கள் என்பது இதிலிருந்தே தெளிவாகத் தெரிகிறது.

09.07.2010 அன்று கருணாநிதிக்கு எழுதிய பதில் கடிதத்தில் இலங்கை இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தேவையான உதவிகளை செய்ய மத்திய அரசு தயாராக இருக்கிறது என்ற உறுதியை பாரதப் பிரதமர் அளித்தார். இதற்காக என்ன செய்ய வேண்டும் என்று கருணாநிதியின் ஆலோசனையையும் கேட்டார் பாரதப் பிரதமர்.

16.07.2010 அன்று பாரதப் பிரதமருக்கு எழுதிய பதில் கடிதத்தில் இலங்கை நாட்டுக்குள் இடம்பெயர்ந்த தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது என்பது அதிமுக்கியமானது. அவசரத்தன்மை வாய்ந்தது என்று தெரிவித்தார் கருணாநிதி.

இதிலிருந்து இலங்கையில் உள்ள தமிழர்கள் மிகவும் கடுமையான துன்பத்துக்கு இன்றும் கூட ஆளாக்கப்பட்டு வருகிறார்கள் என்பது தெரிகிறது.

உண்மை நிலையை கண்டறிவதற்காக மற்றுமொரு குழுவை அனுப்புமாறு பாரதப் பிரதமரை கருணாநிதி கேட்டுக்கொண்டுள்ளார்.

இதன்மூலம் இதற்கு முன்பு அனுப்பப்பட்ட குழுவின் மதிப்பீடு உண்மைக்குப் புறம்பானது என்று ஒப்புக்கொண்டிருக்கிறார் என்று ஜெயலலிதா கூறியுள்ளார். (6)

# இலங்கைத் தூதரகம்....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெறும் சட்டத்தைப் பார்த்தா பயந்து போவோம்?இந்திய எல்லைக்குள் வந்து அப்பாவித் தமிழ் மீனவனைச் சுட்டுக் கொல்லும் சிங்களக் கடற்படைக்கு எதிராக யுத்தம் செய்யுங்கள், உங்களிடம் தைரியம் இருக்குமானால்! அதைஎல்லாம் விட்டுவிட்டு வாய்ப்பூட்டுச் சட்டம் போடுவேன் என்று பட்டம் விட வேண்டாம். எதிர்க் காற்று எல்லாவற்றையும் தவிடு பொடியாக்கும்!"

**"சீமான் மீது தேசிய பாதுகாப்புச்சட்டம் பாய்ந்துள்ளதே.....?"**

"தேசத்தின் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படும் அளவுக்கு என்ன பேசிவிட்டார் சீமான்...? தமிழனை கொன்று கொண்டே இருக்கிறானே சிங்களவர் என்ற ஆத்திரத்தில்,ஆதங்கத்தில், கோபத்தில் வார்த்தைகளைக் கொட்டினால் அது தவறா? 'எரிமலை வெடிக்கும்' என்று கருணாநிதியே எத்தனையோ கூட்டங்களில் பேசியிருக்கிறார்!

எரிமலை வெடித்தால் இலட்சம் பேர் சாவார்கள். சாவுக்கு கருணாநிதிதான் காரணம் என்று வழக்குப்போட முடியுமா?சீமானும் அப்படித்தான் பேசியிருக்கிறார். நாட்டுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எந்தக் காரியத்தையாவது செய்தாரா.... இல்லையே? அதையும் மீறி கைது செய்யக் காரணம் ஈழத்தமிழனைப்பற்றி யார் பேசினாலும் கருணாநிதிக்கு ஆத்திரம் வருகிறது.

பழ.கறுப்பையா கட்டுரைகள் எழுதினார். தாங்க முடியவில்லை. ஆள் வைத்து அடிக்கிறார்கள். இந்த நாட்டை இப்போது மினி எமர்ஜென்சி மிரட்டிக்கொண்டு இருக்கிறது.

'அதிகாரம்,ஊழலை உருவாக்கும் அதீத அதிகாரம்,அதிக ஊழலை உருவாக்கும்' என்றார். ஐவர் ஜெனிக்ஸ் அதீத அதிகாரமும் அதீத ஊழலும் இன்று அடக்கு முறையை உற்பத்தி செய்துள்ளது. விளம்பர வெளிச்சங்களின் மூலம் அடக்குமுறை சம்பவங்களை மறைத்து விடலாம் என்று மனப்பால் குடிக்க வேண்டாம். தமிழ் மக்களுக்கு எல்லாம் தெரியும். நாங்கள் தான் சுதந்திரம் வாங்கிக்கொடுத்தோம் என்று பிரசாரம் செய்த காங்கிரஸ் கட்சியையே 1952இல் தோற்கடித்தது,சென்னை இராஜதானி! தோற்கப்போவதை உள்ளூர உணர்ந்ததால் தான் அதிகமான அடக்கு முறைகளை கருணாநிதி அமுல்படுத்தி வருகிறார்!"

**"ஆனால் "முரசொலி உங்களைப் பாராட்டி அடிக்கடி எழுதுகிறதே?"**

"எங்கே இருக்கிறது ம.தி.மு.க. என்று கேட்ட முரசொலியில், முல்லைப் பெரியாறு பிரச்சினைக்காக நாங்கள் நடத்திய மறியலுக்கு கூடிய கூட்டத்தை பாராட்டியும் எழுதப்பட்டுள்ளது. அவர்களையே அறியாமல் உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால்,அதையும் கூட அவர்கள் ஏதோ ஓர் அரசியல் உள் நோக்கத்தோடுதான் எழுதியிருக்கிறார்கள் .

கருணாநிதி மீது தனிப்பட்ட காழ்ப்பு உணர்ச்சி கொண்டு நான் அரசியல் நடத்தவில்லை. அருந்தமிழ் நாட்டையும் அண்ணா வளர்த்த கட்சியையும் தன்னுடைய சுயநலத்திற்காக கெடுத்துக்குட்டிச்சுவராக்கி விட்டார்.

கருணாநிதி என்பதைத், தவிர, அவர்மீது எனக்கென்ன தனிப்பட்ட கோபம்?

ஆனால், நாங்கள் அ.தி.மு.க வுடன் நல்ல நேச உணர்வுடன் இருக்கிறோம். அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் எங்களுக்கு உரிய மரியாதை வழங்குகிறார். நாங்கள் வலுவான தோழமையுடன் இருக்கிறோம். எங்களுக்குள் நெருடல் இல்லை!"

**"காங்கிரஸ் கூட்டணியையே ஜெயலலிதா அதிகம் விரும்புவதாகச் சொல்கிறார்களே? கோவை கூட்டத்தில் மத்திய அரசை அவர் அதிகம் கண்டிக்கவில்லையே?"**

ஒரே நேரத்தில் இரண்டு முனைகள் நோக்கித் தாக்குதல் நடத்துவது சரியான போர்த் தந்திரம் அல்ல என்று அவர் நினைத்திருக்கலாம்.எனவே, கருணாநிதியை மட்டும் தாக்கி இருக்கிறார்.

என்னைப் பொறுத்தவரையில், ஈழத்தமிழர் இனப் படுகொலைக்குக் காரணமான காங்கிரஸ் கட்சியை வேரோடும் வேரடி மண்ணோடும் வீழ்த்த வேண்டிய கடமை தமிழ் நாட்டுத் தமிழர் அனைவருக்கும் உண்டு.

**"அ.தி.மு.க. அணியில் விஜயகாந்த் இணைவாரா?"**

"கூட்டணியில் யாரை இணைக்க வேண்டும் என்பது,அ.தி.மு.க. தலைமை எடுக்க வேண்டிய முடிவு" இரகசியம் காக்கிறார் வைகோ!

பொறுமையற்று நிதானம் தவறி உணர்ச்சி வசப்பட்டு நடப்பதனால் நமக்கு ஒருலாபமும் ஏற்படாது.
—பிளேட்டோ

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சர்வதேச சமூகத்தின் ஆதரவை பெற்றுக்கொள்வது அவசியம்

யுத்தம் முடிபடைந்து விட்டது. சமாதானத்திற்கான யுத்தம் என்று கூறப்பட்டாலும் வன்னிப் போர் தமிழ் மக்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்புகளை தந்து விட்டன.

இந்த இழப்புகள் இழப்புகளாக இருக்கின்றனவே தவிர, அதிலிருந்து மக்கள் விடுபடுவதற்கான எந்தவித நடவடிக்கைகளும் இல்லையென்றே கூறவேண்டும்.

விடுதலைப் புலிகள் போராட்டம் நடத்திய காலத்தில் சமாதானப் பேச்சுவார்த்தை என்பது அரசின் பகிரங்க உச்சாடனமாக இருந்தது.

பேச்சுவார்த்தை மூலமே நிரந்த சமாதானத்தை இந்த நாட்டில் ஏற்படுத்த முடியும் என்று அப்போது கூறிய அரசு அதற்காக விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கைவிட வேண்டும் எனத் தெரிவித்து வந்தது.

ஆனால் தற்போது தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் முடிபுறுத்தப்பட்டு விட்டது. போர் முடிபுக்கு வந்துள்ளதே அன்றி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு எந்தவிதமான தீர்வுகளும் கிடைக்கவில்லை.

இந் நிலையில் சமாதானத்தை இலங்கை அரசு விரும்புமாயின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான பேச்சுவார்த்தைகளில்–முயற்சிகளில் அரசு ஈடுபடவேண்டும்.

ஆனால் அதற்கான அறிகுறிகள் எவையுமே இல்லை. நிலைமை இதுவாக இருக்கும் போது இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான அழுத்தத்தை இலங்கை அரசுக்குக் கொடுப்பது யார்?

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்கும் என யாரேனும் கருதுவார்களாயின் அது மகாதவறு.

அதே சமயம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு அழுத்தம் கொடுக்க வேண்டிய நாடாக இந்தியா இருக்கிறதென்னும் உண்மையையும் எளிதில் நிராகரித்து விட முடியாது.

எதுவாயினும் இந்திய தேசத்திற்கு ஏதோ ஒரு வகையில் நன்மை உண்டென உணராதவரை இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் எந்த முயற்சியையும் இந்தியா எடுக்காதென்பது நிறுத்திட்டமான உண்மை.

எனவே, இந்தியாவை எமது பக்கம் உள்ளீர்க்கவும், இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவும் கூடியதான விடயம் பற்றி சிந்திப்பது தமிழ் அரசியல் வாதிகளினதும், புத்திஜீவிகளினதும் தலையாய கடமையாகும்.

அவ்வகையில் அதற்கான ஒருவழி உண்டெனில் அது, சர்வதேச சமூகத்தை எங்கள் பிரச்சினையில் கவனம் செலுத்துமாறு கோருவதாகும்.

இலங்கை இனப்பிரச்சினையில் சர்வதேச சமூகத்தின் பார்வை திரும்புமாயின், இந்தியா தானாகவே முன்வந்து, இனப்பிரச்சினையைத் தீர்க்குமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க அது நடந்தேறும்.

# பரீட்சை முடிவுற்றதும் முன்னாள் புலி உறுப்பினர்கள் 364 பேர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுவர்

## அமைச்சர் டியூ குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

சரணடைந்துள்ள முன்னாள் புலிகள் உறுப்பினர் 12 ஆயிரம் பேரில் 7ஆயிரத்து 980 பேர் மட்டுமே தற்போது புனர்வாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் 364 பேர் பரீட்சை முடிவடைந்ததும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுவர் எனவும் புனர்வாழ்வு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொரளையிலுள்ள அமைச்சு அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புலிகளின் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டவர்கள் என அடையாளம் காணப்பட்ட ஆயிரத்து 300 பேர் உட்பட ஏனையோர் இயக்கத்துடன் எவ்வாறு தொடர்புபட்டிருந்தனரோ அதே அடிப்படையில் தரம் பிரிக்கப்பட்டு புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வுவளிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களுள் 98 சத வீதமானோர் பெற்றோருடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

பெற்றோருக்கும் இவர்களை சென்று நேரில் சந்திக்கக் கூடிய வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதோடு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு இம்முறை 364 பேர் தோற்றுகின்றனர் என்றும் இப்பரீட்சை முடிந்த பின்னரே அவர்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு பெற்றோர் கேட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (6-2)

# நீண்டகாலமாக திருத்தப்படாத குடத்தனை - வரணி வீதி

(குடத்தனை)

குடத்தனை வரணி வீதியானது நீண்டகாலமாக சீர்செய்யப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் இப்பாதை ஊடாக செல்லும் வாகனங்களும் பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வழியே மதகு ஒன்று உடைந்து காணப்படுவதால், மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி தவிர்ந்த ஏனைய வானகங்கள் பயணிக்க முடியாதுள்ளது.

வரணி, கொடிகா மம் ஏனைய பகுதிகளை 10கிலோ மீற்றர் சுற்றியே செல்ல வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆகையால்த குறித்த இவ்விடயத்தில் கவனம் செலுத்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஆடியில் திருமணம் நடக்காதது ஏன்?

ஆடியில் தெய்வங்களுக்கு திருமணம் நடக்கும். இரமேஸ்வரத்தில் சுவாமி அம்பாள் திருமணம் ஆடிப்பூரத்தன்று நடத்தப்படும். தெய்வங்கள் எல்லாம் சக்திகளுக்கும் அப்பாற்பட்டவை. ஆனால், மனிதனுக்கு ஆடியிலும், மார்கழியிலும் திருமணம் செய்ய தடை விதித்தனர்.

அறிவியல் ரீதியாக இந்த மாதங்களின் மனிதனை நோய்கள் தாக்கும் எனக் கருதப்பட்டது. ஆடியில் காற்றால் மூச்சுத்திணறல் போன்ற நோய்கள் ஏற்படும். இது ஆண்களைக் கடுமையாகத் தாக்கும். பெண்களைப் பொறுத்தவரை ஆடியில் கர்ப்பமாகும் பெண் சித்திரையில் குழந்தை பெறுவாள். அப்போது கடும் கோடை. அந்த வெப்பத்துடன் தனக்குத் தரப்படும் வெப்பமான பிரசவ மருந்துகளையும் சாப்பிடுவது உடலை மிகவும் வருத்தும். குழந்தை பிறக்கும்போது தாய்க்கு மிகவும் உடல் வலி அதிகமாகி உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும்.

இதனால் தான் திருமணம் நடத்துவதில்லை. மார்கழியில் அதிகக் குளிரால் ஜலதோஷம், ஆஸ்துமா முதலியன வரும். அதன் காரணமாக மார்கழியையும் தவிர்த்தனர் .

# தரம் : 5 மாணவர்களுக்கு இலவசக் கருத்தரங்கு

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு நாளை மறுதினம் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை, மாலை என இரு அமர்வுகளாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

இச் செயல் அமர்வினை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை நெறிப்படுத்தியுள்ளார். வளவாளர்களாக திருகோணமலை மாவட்ட ஆரம்பக்கல்வி உயர் கல்வி கல்விப்பணிப்பாளர் சு.கணேசலிங்கம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் சுரா.புவனேஸ்வரன் புலமைப் பரிசில் பரீட்சை யாழ். முன்னணி ஆசிரியர் கே.தவயோகராஜா கலந்துகொள்ளவுள்ளனர். இதில் அனைத்து மாணவர்களும் கலந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

முதலாவது அமர்வு காலை 8.00 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரையும். பிற்பகல் ஒரு மணி முதல் மாலை 5.00 மணி வரை, இரண்டாவது அமர்வும் நடைபெறும். (சு)

# குருபூர்ணிமா தினம்

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை போயா நிகழ்ச்சி காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி பிரசாந்திக் கொடியேற்றம் வேதபாராயணம், இலட்ச அர்ச்சனை, ஜோதி தியானம், சிறப்பு சொற்பொழிவு, பஜனை என்பன இடம் பெற்று மதியம் 12.30 மணிக்கு மதிய போசனத்துடன் நிறைவு பெறும். காலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனம் இடம் பெறும்.

இதேவேளை நாளை பாவாபால் பிரகடனப்படுத்தப்பட்ட அகில உலக மாற்றுவலுவுள்ளோர் தின நிகழ்வுகள் மாலை 3.00 மணிக்கு இடம் பெறும். இந் நிகழ்வில் வாழ்வக சிறார்களும், வழுவிழந்தோர் புனர்வாழ்வு சங்கத்தைச் சேர்ந்த அன்பர்களும் கலந்து கொள்வார்கள். (சு)

# வெள்ளி நற்சிந்தனை

132

## பக்தியின் மொழி தமிழ்

இறைவழிபாட்டில் நடிப்புத்தன்மையோடு ஈடுபடுவோரும் உளர். அவர்களை இனங்காண்பது மிகக் கடினம். அவராகவே அதை வெளிப்படுத்தவும் மாட்டார்கள். ஆனால் மணிவாசகர் தான் அவ்வாறு இருந்ததைப் பாடலிலே பாடியுள்ளார். பாண்டிய மன்னனின் அமைச்சராக இருந்து 'தென்னவன்பிரமராயன்' என்ற சிறப்புப் பட்டம் பெற்று உலக வாழ்க்கையின் எல்லா இன்பங்களையும் அனுபவித்தவர். அரசன் கட்டளைப்படி குதிரை வாங்குவதற்காகப் பணத்துடனும் பரிவாரத்துடனும் திருப்பெருந்துறை சென்றவர் அங்கிருந்த சிவயோகியாரைக் கண்டவுடனேயே எல்லாவற்றையும் மறந்து விடுகிறார். அச்சிவயோகியாரின் திருநோக்கம், பரிசம், திருவாக்கு ஆகியவற்றால் இறை சிந்தனை வயப்படுகிறார். குதிரை வாங்கவென மன்னன் கொடுத்த பணத்தைக் கொண்டு சிவயோகியார் கேட்டுக்கொண்டதற்கு இணங்கிக் கோயில் கட்டுவதிலே செலவிடுகின்றார்.

இந்த மாற்றத்தை மணிவாசகர் நடிப்பு என்று கூறுகிறார். இதுவரை வாழ்ந்த வாழ்க்கையை விட்டு இறைவனுக்கு அடியவனாக மாறி நிற்கும் தன்னுடைய செயற்பாட்டிலே அவருக்கு நம்பிக்கையில்லை. மனவுறுதி தளர்ந்து மீண்டும் மாறிவிடுவோமா என்ற மனக்கலக்கம் அவரிடமிருந்தது. தன்னுடைய வழிபாட்டுச் செயற்பாடுகள் யாவும் நடிப்பு என்று கூறுகிறார். அடியார் போல நான் நாடகமாடி முத்திப்பேற்றையடைய விரும்புகிறேன் எனத் தன் நிலையை எடுத்துரைக்கின்றார். எனவே இத்தகைய நடிப்பு நிலையை விட்டு இறைவன் மீது இடையறாத அன்பு செலுத்த அருளுமாறு வேண்டுகிறார்.

மணிவாசகர் இறைவனிடம் தன்னுடைய உண்மையான நிலையை எடுத்துக் கூறுவது அவருடைய கரவற்ற உள்ளத்தைக் காட்டுகிறது. மந்திரியாக வாழ்ந்த போது இறை சிந்தனையற்றிருந்ததை ஒப்புக் கொள்கிறார். உலக வாழ்க்கையில் இருப்போருக்கு ஒரு போலியான பக்தி வாழ்க்கை நடத்தும் நிலையும் ஏற்படலாம். குறுகிய வாழ் நாட்போதில் அனுபவிக்கும் இன்பமே பெரிதாய்த் தோன்றும். ஆனால் அது ஒரு நடிப்பான வாழ்க்கை என மணிவாசகர் கண்டார். தன்னையே அதற்கு எடுத்துக் காட்டாகக் காட்டுகிறார். அதனால் தன் உள்ளத்தைப் பக்குவப்படுத்திக் கொண்டு இறை பக்தி செய்யப் பார்க்கிறார். இறைவனையே அதை அருளும்படி வேண்டுகிறார். உள்ளார்ந்த நிலையில் உள்ளத்திலே வேறு சிந்தனையின்றி இறையன்பு ஒன்றையே வேண்டி நிற்கும் நிலையைத் தரும்படி கேட்கிறார். அவன் அருளாலே அவன் தாள் வணங்க முடியும் என்பதே மணிவாசகர்கருடைய தெளிவான கருத்தாகும். போலியான பக்திக் கோலத்தால் பயன்எதுவுமில்லை. நெற்றிநிறைய விபூதியும் நெஞ்சு நிறைய வஞ்சக நினைவுமாய் வாழ்பவர் இறைபக்தியை உணரமாட்டார். மெய்யடியார் போல் நடித்து இறைவனை உணர முடியாது. உள்ளத்தால் உள்ளே உருகிநிற்பவரே பக்திநிலையடைந்தவராவர். உலக இன்பங்களை அனுபவிக்கும் நிலையில் இறைவனை உணர முடியாது.சிறந்த செல்வப்பேறு இறைபற்றிய சிந்தனையைய் மறைத்துவிடும். எனவே அதனைத் துறந்து இறையருளை உண்மை நிலையில் நின்று தேட வேண்டும்.

"நாடகத்தாலுன்னடியார் போல் நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத்தந்தருளெம் உடையானே."

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

# சீனாவில் பெய்துவரும் மழை மற்றும் வெள்ளத்தால் 800 பேர் பலியாகியுள்ளனர்



(பீஜிங்)

சீனாவில் தெற்கு பகுதியை அடுத்தடுத்து புயல்கள் மிரட்டுகின்றன. அங்கு பெய்து வரும் மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் 800 பேர் பலியாகியுள்ளனர். ஆயிரம் பேரை காணவில்லை. சீனாவின் ஹெனான் காங் டாங் மாநிலங்களை கடந்த வாரத்தில் கான் சான் புயல் தாக்கியது. அதன் தாக்கம் இன்னும் அங்கு மழை பெய்து வருகிறது. பல தெருக் களில் வீடுகள் மூழ்கிவிட்டன. மின்சாரம் தகவல் தொடர்பு அடியோடு துண்டானது.

இரண்டு மாநிலங்களும் வெள்ளக்காடாக மாறிவிட்டன. பல பகுதிகள் இருந்த இடம் தெரியாமல் ஆறுகளாக நீர் பெருக்கெடுத்து ஓடுகின்றன. சாலை ரயில் விமான போக்கு வரத்து நின்று விட்டது. சில தெருக்களில் வீடுகள் மூழ்கி தெரு விளக்கு கம்பங்களில் விளக்கு மட்டுமே வெளியே தெரிகிறது. இந்த பயங்கர மழை வெள்ளத்துக்கு இதுவரை 701 பேர் பலியானதாக அரசின் அதிகாரப்பூர்வ தகவல் தெரிவிக்கிறது. எனினும் உயிரிழப்பு 800 ஐ தாண்டும் என்று தொண்டு நிறு வனங்கள் தெரிவித்தன.

சுமார்ஆயிரம் பேரை காணவில்லை. மீட்பு பணிகளை தொடங்க வழியின்றி வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. ஹெனான் மாநிலத் தின் பல பகுதிகள் மழைக் காடுகள் இதனால் அங்கு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு நகரங் களை மூழ்கடித்துவிட்டது.

சீனர்கள் தங்கள் சொந்த பந்தங்களை காணாமல் தேடவும் வழியின்றி தகவல் தொடர் பும் கிடைக்காமல் கஷ்டப்பட்டு வருகின்றனர். கடந்த ஒருவாரமாக இந்த மாநிலங்களில் பள்ளி , கல்லூரி, அலுவலகங்கள் மூடப்பட் டுள்ளன. பல நூறு கோடி மதிப்பில் வர்த்தக பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இதே மாநிலங்களை நோக்கி



தெற்கு சீன கடல் பகுதியில் மற்றொரு கடும் புயல் சின்னம் ஏற்பட்டுள்ளது. அதற்கு சாந்து என்று பெயரிடப்பட்டுள்ளது. அதுவும் கடும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று வானிலை மையம் எச்சரித்துள்ளது. (6)

## ஈரானில் பூகம்பத்துக்கு 15 பேர் காயம்

(டெக்ரான்)

ஈரானில் தெற்கு பகுதியில் உள்ள ஹார் முஸ்தான் மற்றும் பார்ஸ் ஆகிய மாநிலங் களில் அடுத்தடுத்து 4 முறை பூகம்பம் தாக் கியது. பின்னர் 11 நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

பூகம்பங்களின் தாக்கம் ரிக்டர் அளவில் 5.8 ஆகவும் அடுத்து 5.2 ஆகவும் பின்பு 4.1 ஆக வும் 3.9 ஆகவும் பதிவாகியுள்ளது.

இந்த பூகம்பங்களில் 4 கிராமங்களை சேர்ந்த 15 பேர் காயம் அடைந்தனர். இதில் பண்டார் அப்பாஸ் என்ற இடத்தில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. இந்த பூகம்பங்க ளின் காரணமாக சில வீடுகள் இடிந்து விழுந் தன.

ஈரானில் அடிக்கடி பூகம்பம் ஏற்படுவது வழக்கம் தான். கடந்த 2003 ஆம் ஆண்டு பாம் நகரில் ஏற்பட்ட பூகம்பத்தில் 30 ஆயிரம் பேர் பலியானமை குறிப்பிடத்தக் கது. (6-2)


## சூரியனை விட பெரிய நட்சத்திரம் விண்வெளியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

(லண்டன்)

லண்டலில் உள்ள செஃப்வில்டு பல்க லைக்கழகம் விண்வெளியில் உள்ள நட்சத் திரங்களை பற்றி ஆராய்ச்சி நடத்தி வந்தது. விஞ்ஞானி ப்வுல் கவுதரர் தலைமையில் அடங்கிய குழு, விண்வொளியில் சூரியனை விடமிக பெரிய புதிய நட்சத்திரத்தை கண்டு பிடித்துள்ளார். இந்த நட்சத்திரம் சூரியனை விட நூறு மடங்கு பெரியதாக உள்ளது என்பதையும் கண்டுபிடித்துள்ளதுடன் இந் நட்சத்திரம் நாம் வாழும் சூரிய குடும்பத்தின் அருகில் உள்ள நட்சத்திரம் என்பதும் குறிப் பிடத்தக்கது. மேலும் இந்த நட்சத்திரத்தின் வயது சூரியனை விட 4.57 பில்லியன் மிகப்



பழைமையானதெனவும் நட்சத்திரத்தின் வெப்பம்,சூரியனை ஒப்பிட்டு பார்க்கும் போது 0.03 அளவு அதிகம் உள்ளதாக விஞ் ஞானிகள் தெரிவித்துள்ளதுடன் இந்த நட்சத்திரத்திற்கு R136al என்று விஞ் ஞானிகள் பெயரையும் சூட்டியுள்ளனர்.(6-2)



அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தென்கொரியா சென்றுள்ள நிலையில் அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான பிரமாண்ட விமானம் தாங்கி சுப்பலான ஜோர்ஜ் வோஷிங்டன், தென்கொரிய பூசன் நகருக்கு வந்துள்ளது. அமெரிக்கா -தென்கொரியா இணைந்து நான்கு நாட்களுக்கு இராணுவ பயிற்சி நடவடிக்கையில் ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நேபாளத்தில் புதிய பிரதமரை தெரிவு செய்வதில் இழுபறி நிலை

### இன்று மீண்டும் தேர்தல்

(காத்மாண்டு)

நேபாளத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் களின் வாக்கெடுப்பு மூலம் புதிய பிரதமரைத் தேர்வு செய்வதற்காக நடைபெற்ற தேர்தலில் யாருக்கும் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கவில்லை. இதனால் இன்று மீண்டும் தேர்தல் நடைபெறவுள்ளது.

புதிய பிரதமருக்கான போட்டியில் மாவோ யிஸ்ட் தலைவர் புஷ்ப கமல் தஹால் பிரச ண்டா, முன்னாள் துணைப் பிரதமர் ராம் சந் திர பொதல், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஜலாநாத் கனால் ஆகியோரிடையே கடும் போட்டி இருந்தது. இதில் யாருக்கும் பெரும் பான்மை கிடைக்காததால் இன்று மீண்டும் தேர்தல் நடத்தப்படும் என நாடாளுமன்றத் தலைவர் அறிவித்துள்ளார். (6-2)




## வடகொரியா மீது புதிய தடைகளை விதிப்பதற்கு அமெரிக்கா தீர்மானம்

வடகொரியா மீது அமெரிக்கா புதிய தடை களை விதிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இராஜாங்கச் செயலா ளர் ஹிலாரி கிளின்ரன் தென் கொரியாவிற்கு விஜயம் செய்துள்ள நிலையில் இந்த தடைகள் தொடர்பான அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தென்கொரிய கப்பல் ஒன்றை தாக்கி அழித்தமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நோக் கில் ஆயுத ஏற்றுமதி மற்றும் சொகுசு பண்ட இறக்குமதி போன்றவற்றுக்கு எதிராக தடை விதிக்கப்படவுள்ளது.

கடந்த மார்ச் மாதம் தென்கொரிய கப்பல் ஒன்றின் மீது வடகொரியா தாக்குதல் நடத்திய தாகவும் இந்த சம்பவத்தில் 46 பேர் உயிரிழந் துள்ளதாகவும் சர்வதேச விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை வடகொரியா முற்று முழுதாக நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக் கது.

ஆயுத உற்பத்தி தொடர்பான வடகொரி யாவின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த அமெரிக்கா நடவடிக்கை எடுக்கும் என ராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் வடகொரியா விவகாரத் தில் அமெரிக்கா தலையீடு செய்வதனை சீனா விரும்பவில்லை என்பதுடன் தென்கொரி யாவுடன் இணைந்து அமெரிக்கா வடகொ ரிய கடற்பரப்பில் நடவடிக்கைகளை மேற் கொள்ள அனுமதிக்கப்பட முடியாது என சீனா தெரிவித்துள்ளது. (6)



அவுஸ்திரேலியாவில் அடுத்த மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள பிரதமர் பதவிக்கான தேர்தலில் போட்டியிடும் முதல் பெண் பிரதமர் ஜூலியான் கில்லார்ட் தனது ஆதரவாளர்களிடம் பிரசாரம் மேற்கொண்டு வருகின்றார்.

# 800 விக்கெட்டுக்கள் சாதனையுடன் முரளி டெஸ்டில் விடைபெற்றார்


(காலி)

இலங்கை அணியின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் டெஸ்ட் கிரிக்கெட்டில் 800 விக்கெட்டுக் களைக் கைப்பற்றிய முதலாவது வீரர் என்ற புதிய சாதனையுடன் டெஸ்ட் அரங்கிலிருந்து விடைபெற்றார்.

காலியில் நடைபெற்று வந்த இந்திய அணியுடனான முதலாவது டெஸ்ட் அரங்கிலிருந்து ஓய்வு பெறுவதாக முரளிதரன் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இப் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் முரளிதரன் டெஸ்ட் கிரிக்கெட்டில் 792 விக் கெட்டுக்களை கைப்பற்றியிருந்தார்.

இந் நிலையில் இந்திய அணியுடனான முதலாவது டெஸ்டில் 8 விக்கெட்டுக்கள் கைப்பற்றுவதன் மூலம் முரளிதரன் டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் 800 விக்கெட்டுக்கள் என்ற புதிய மைல் கல்லை பதிப்பார் என எதிர் பார்க்கப்பட்டது.




இப் போட்டியின் இறுதி நாளான நேற்று 2 விக்கெட்டுக்களை கைப்பற்றுவதன் மூலம் புதிய சாதனையைப்படைப்பதற்கு முரளி தரனுக்கு வாய்ப்பிருந்தது.

இதில் நேற்றைய நாள் ஆட்டம் ஆரம்ப மானதும் முரளிதரன் இந்திய அணித்தலைவர் தோனியின் விக்கெட்டை வீழ்த்தி 799ஆவது விக்கெட்டை பதிவு செய்தார்.

இந் நிலையில் இந்திய அணியின் கடைசி விக்கெட்டை வீழ்த்தி 800ஆவது விக்கெட் டை வீழ்த்த முரளிதரனுக்கு வாய்ப்பு கிடைத் தது.

இதற்காக முரளிதரன் 23 ஓவர்கள் வீச வேண்டிய நிலை ஏற்பட்டது.

டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் தனது இறுதிப் பந்தில் இந்திய அணியின் பிரஜன் ஓஜாவை வீழ்த்தி முத் தையா முரளிதரன் 800ஆவது விக் கெட் டைக் கைப்பற்றி சாதனைப் படைத் தார்.

இதற்கு முரளிதரனுக்கு மஹேல ஜெய வர்த்தன துணை புரிந்தார்.

இது வரை 77 விக் கெட்டுக்களை வீழ்த்து வதற்கு மஹேல ஜெய வர்த்தன பிடி எடுத்து துணை புரிந்துள்ளார்.

முத்தையா முரளிதரன் 1972ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் திகதி கண்டியில் பிறந்தார்.

பாடசாலை பருவத்திலேயே கிரிக்கெட் பரியமான முரளிதரன் கொழும்பு தமிழ் சங்கம் கிரிக்கெட் அணியில் இடம் பிடித்தார்.

இந் நிலையில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28ஆம் திகதி அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் முதல் முறையாக சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அறிமுகமானார்.

இது வரை 133 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

முரளிதரன் 67 இன் னிங்ஸ்களில் 5 விக்கெட்டுக்களை கைப் பற்றியுள்ளதுடன் 22 போட்டிகளில் 10 விக் கெட்டுக்களை சாய்த்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் முரளிதரனுக்கு அடுத்த நிலையில் அவுஸ்திரேலிய அணியின் ஷேன்வோர்ன் 712 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளார்.

இந் நிலையில் டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் 800 விக்கெட்டுக்கள் என்ற புதிய மைல் கல் சாதனையை படைத்தார்.

டெஸ்ட் கிரிக்கெட் அரங்கிலிருந்து முத் தையா முரளிதரன் ஓய்வு பெற்றாலும் சர்வ



தேச ஒரு நாள் போட்டி, இருபது-20 கிரிக்கெட் அணியில் தொடர்ந்து விளையாடுவார்.

## அனைத்து சாதனைகளும் படைத்து விட்டேன்

டெஸ்டில் இருந்து ஓய்வு பெற்ற பின் முரளிதரன் அளித்த பேட்டியில்,

கடந்த 1995இல் நான் பந்தை எறிவதாக நடுவர்கள் புகார் கூறியபோது ஏமாற்றம் அடைந்தேன்.

இதற்காக நடுவர்கள் மீது வெறுப்புக் கொள்ளவில்லை. அவர்கள் தங்கள் பணியை செய்தனர்.

வெறுங்கண்களால் பார்த்து முடிபு செய் தனர். நான் தொழில்நுட்ப ரீதியாக எனது பந்து வீச்சு சரியானது என்பதை நிரூபித் தேன்.

இக்கட்டான நேரத்தில் எனக்கு ஆதரவாக இருந்த ரணதுங்கா, அரவிந்த டிசில்வாவுக்கு நன்றி.

எதிர் வரும் 2011இல் நடக்கும் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்பது பற்றி தேர் வளர்களுடன் பேசியுள்ளேன்.

இத் தொடரில் தரமான இளம் வீரர்கள் கிடைக்காத பட்சத்தில் பங்கேற்பேன். இரு பது-20 போட்டிகளிலும் தொடர்ந்து கலந்து கொள்வேன்.

டெஸ்ட் அரங்கில் இனி சாதிக்க ஒன்றும் இல்லை. அனைத்து சாதனைகளையும் படைத்துவிட்டேன்.

எனது ராசியான காலி மைதானத்தில் வெற்றியுடன் விடைபெற்றது மகிழ்ச்சி அளிக் கிறது. இவ்வாறு முரளிதரன் கூறினார்.

# முதலாவது டெஸ்டில் இலங்கை முரளிக்கு வெற்றிப் பரிசளித்தது

(காலி)

மலிங்க, முரளிதரனின் பந்துவீச்சு கைகொடுக்க இலங்கை அணி முதலாவது டெஸ்ட்டில் 10 விக் கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் வந்துள்ள இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 18ஆம் திகதி காலி சர்வதேச விளையாட்டரங்கில் ஆரம்ப மானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக் களை இழந்து 520 ஓட்டங்களை எடுத்து ஆட் டத்தை இடைநிறுத்தியது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 276 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து பொலோன் நிலைக்கு தள்ளப்பட்டது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 254 ஓட்டங்கள் பின்னிலையில் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்ட நேர முடிபில் 5 விக்கெட்டுக்களை யிழந்து 181 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் ஐந்தாவதும் இறுதியுமான நாள் ஆட்டமான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத் தாடிய இந்திய அணிக்கு தோனி 04, ஹர்பஜன் சிங் 08 ஓட்டங்கள் எடுத்து அடுத்தடுத்து ஆட் டமிழந்து வெளியேறி ஏமாற்றினர்.

எனினும் 8ஆவது விக்கெட்டுக்காக இணைந்த லக்ஸ்மன்-மிதுன் ஜோடி நிதானமாகத் துடுப் பெடுத்தாடி இந்திய அணியின் இன்னிங்ஸ் தோல் வியை தவிர்க்கப் போராடினார்கள்.

இந்த ஜோடி 49 ஓட்டங்களை இணைப்பாட்ட மாக எடுத்தபோது மிதுன் 59 பந்துகளில் (5 பவுண் டரிகள் உட்பட) 25 ஓட்டங்களை எடுத்து மலிங்க வின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த இஷாந்த் சர்மா நிதானமாகத் துடுப்பெடுத்தாட இந்திய அணி இன்னிங்ஸ் தோல்வியிலிருந்து விடுபட்டது.

மறுமுனையில் வி.வி.எஸ்.லக்ஸ்மன் 101 ஆவது பந்தில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்ய இந்திய அணி 300 ஓட்டங்களை கடந்தது.

இந்த ஜோடி 68 ஓட்டங்களை இணைப்பாட்ட மாக எடுத்த போது வி.வி.எஸ். லக்ஸ்மன் 127 பந்து களில் (5 பவுண்டரி உட்பட) 69 ஓட்டங்களை எடுத்து ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

இந் நிலையில் களமிறங்கிய .ஓஜா நிதான மாகத் துடுப்பெடுத்தாடினார். இந்திய அணியின் இறுதி விக்கெட்டை வீழ்த்தினால் டெஸ்ட் அரங் கில் 800 விக்கெட்டுக்களை கைப்பற்றிவிடலாம் என முத்தையா முரளிதரன் போராட இலங்கை வீரர்களும் ஒத்துழைத்தனர்.

இந்த ஜோடி கடைசி விக்கெட்டுக்காக 15.2 ஓவர்களை எதிர் கொண்டு 24 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது பிரஜன் ஓஜா 13 ஓட்டங்களை எடுத்து முத்தையா முரளிதரனின் பந்துவீச்சில் மஹேல ஜெயவர்த்தனவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 2ஆவது இன்னிங்ஸில் 338 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இவ் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் முத் தையா முரளிதரன் டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது கடைசிப் பந்தில் 800ஆவது விக்கெட்டை வீழ்த்தி புதிய சாதனை படைத்தார்.

துடுப்பாட்டத்தில் இஷாந்த் சர்மா ஆட்டமிழக் காமல் 106 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 31 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் லசித் மலிங்க 5 விக்கெட்டுக் களையும் முரளிதரன் 3 விக்கெட்டுக்களையும் வெலகெதர ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதன்மூலம் 95 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி டில்சானின் அதிரடியில் 14.1 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 96 ஓட்டங்களைக் குவித்து 10 விக்கெட்டுக்



களால் வெற்றி பெற்றது.


இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெறும் சூழல் நாயகன் முத்தையா முரளிதரனுக்கு இலங்கை அணி வெற்றிப்பரிசு வழங்கியது.

துடுப்பாட்டத்தில் திலகரட்ண டில்சான் 47 பந்துகளில் (16 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங் கலாக) 68 ஓட்டங்களையும் பரணவித்தாரண 23 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்த னர்.

இப் போட்டியில் இரு இன்னிங்ஸ்களிலும் மொத்தமாக 8 விக்கெட்டுக்களை கைப்பற்றிய துடன் துடுப்பாட்டத்தில் 64 ஓட்டங்களையும் குவித்த லசித் மலிங்க ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டா வது டெஸ்ட் எதிர்வரும் 26ஆம் திகதி கொழும்பு என்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமாகிறது.



கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த கொரியக் குடியரசின் போர்க் கப்பலில் வந்த அதிகாரிகள் வரவேற்கப்படுவதையும் கடலில் தரித்து நிற்கும் போர்க் கப்பலையும் படங்களில் காணலாம்.

இக் கப்பல் 149 மீற்றர் நீளமுடையது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி மகிந்த இறக்கும் போது தானும் உயிர்துறப்பாராம் மேர்வின்

## ஐ.நா. செயலாளருக்கும் பாடம் புகட்டுவாராம்!

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உயிரிழக்கும் போது தானும் உயிரிழந்து விடுவேன் என பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தனது சகோதரர் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட போதும் தைரியத்தை இழக்காத ஜனாதிபதி திடமாக நின்று செயற்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டின் வெற்றியை ஒருபோதும் காட்டிக் கொடுத்ததில்லை. இவ்வாறான ஜனாதிபதிக்கு வலுசேர்க்கக் கிடைத்தமை மகிழ்ச்சியானதாகும்.

இதனால் ஜனாதிபதியின் மரணம் சம்பவிக்கும்போது எனது மரணமும் நிகழும்என மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

கண்டியில் மேம்பாலம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். பான் கீ மூன் இலங்கைக்கு எதிராகச் செயற்பட்டு வருவதால் அவருக்குத் தகுந்தபாடம் கற்பிக்க தகுந்த சந்தர்ப்பம் ஏற்படும்.

இலங்கை வரலாறு தொடர்பான வம்சக் கதைகள் பான் கீ மூனுக்கு அஞ்சலில் அனுப்பி வைக்கப் போவதாகவும் அது மொழி மாற்றம் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படும்.

அதிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளும் மூன் இலங்கையிடம் மண்டியிடுவார் எனவும் மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## றெபோ...

சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார். இந்த நிலையில் அவர் நேற்று நியூயோர்க் திரும்பியமைக்கான காரணம் குறித்து ஐக்கிய நாடுகளின் சபையில் இலங்கைக்கான தொடர்பு அதிகாரி மொஹான் சமரநாயக்கவிடம் வினாவியபோது நேற்று நியூயோர்க் திரும்பியமைக்கான காரணம் என்ன எனத் தெரியவில்லை எனக் குறிப்பிட்டார்.

எனினும் நீல் பூனே ஒரு மாத கால விடுமுறையில் செல்லவிருந்தார் என்பதைத் தான் அறிந்திருந்ததாகவும் அவர் தெரிவித்தார். (ச-5)

## கொரியக்...

செய்ததாகும்.

42 அதிகாரிகள் மற்றும் 264 கடற்படை வீரர்கள் பணியாற்றும் இந்தப் போர்க் கப்பல் படையினரைத் தரையிறக்கும் கலங்களைக் கொண்டுள்ளது.

கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்த கொரியக் குடியரசின் போர்க் கப்பலுக்கு இலங்கைக் கடற்படையினர் சம்பிரதாயபூர்வமாக வரவேற்பளித்தனர்.

அத்துடன் இந்தக் கப்பலை வரவேற்பதற்காக இலங்கையில் வதியும் நூறுக்கும் மேற்பட்ட கொரியப் பிரஜைகள் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## புலிகளின் தலைவர் இறந்து...

மேலும் தெரிவித்துள்ளவை,

நான் பிரபாகரனின் உயிரற்ற சடலம் சுமந்து செல்லப்படுகின்றமையைக் கண்டு கொண்டேன். அச் சடலம் காட்டு வழியாகக் கொண்டு செல்லப்பட்டு கொண்டிருந்தது.

என்னால் அமைதியாக இருக்க முடியவில்லை. அச் சடலத்திற்குப் பின்னால் ஓடினேன். அது பிரபாகரனின் சடலம்தான் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முயன்றேன்.

பிரபாகரனின் சொந்தத் துப்பாக்கியைத் தொட்டுப் பார்த்துப் பரிசோதித்தேன். அவரது துப்பாக்கி ரகம் அத் துப்பாக்கியின் சீரியல் இலக்கம் ஆகியன எனக்கு முன்கூட்டியே நன்றாகத் தெரியும்.

அவருடைய தகட்டு இலக்கம் 001. அது பிரபாகரன் உடையதுதான். பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டார் என்பதை உணர்ந்து கொண்டேன்.

வீட்டுக்கு வந்தேன். எனது இராணுவச் சீருடைகளைக் களைந்தேன். நான் இப்போது ஓய்வு பெற்றுக் கொள்ளலாம் என்று எனக்குள் நானே சொல்லிக் கொண்டேன்.

அதன் பின் ஓய்வு பெற்றுக் கொண்டேன். இப்போது நான் இஸ்ரேலுக்கான தூதுவர் என்றார். (ச-5)

## கொசோவா பிரிவினை சரி...

ஊக்குவிக்கும். சேர்பியப் படைகளுக்கும் அல்பேனியஇனப் பிரிவினைவாதிகளுக்கும் இடையிலான போரையடுத்து 9 வருடங்களின் பின்னர் கொசோவாவில் அல்பேனிய இனப் பெரும்பான்மையினர் 2008 இல் சுதந்திரப் பிரகடனம் செய்தனர்.

பெரும்பாலான மேற்கத்தைய நாடுகள் கொசோவாவை அங்கீகரித்தன. ஆனால் சேர்பியாவும் அதன் கூட்டாளியான ரஷ்யாவும் அதனை நிராகரித்தன.

தீர்ப்பின் தாக்கங்கள் என்ன?

சர்வதேச நீதிமன்றத்தின் இன்றைய தீர்ப்பானது சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் இரண்டு முக்கிய கேள்விகளுக்கு விடையளித்திருக்கின்றது.

ஏற்கனவே நிறுவப்பட்டு நிலைபெற்றிருக்கும் ஒரு நாட்டில் இருக்கும் ஒரு தொகுதி மக்கள் மொழியின் அடிப்படையிலேயே தேசிய இன அடையாளத்தின் அடிப்படையிலேயே தாங்கள் தனித்துவமானவர்கள் எனக் கூறித் தாங்கள் வாழ்ந்த ஒரு நாட்டிலிருந்து தாமாகவே பிரிந்து செல்வது சரியா என்பது முதல் கேள்வி.

அது சரி என்றால் தற்போதைய நாடுகள் தங்களின் இறையாண்மையையும் தமது ஆட்புல ஒருமைப்பாட்டையும் எப்படிப் பாதுகாத்துக் கொள்வது?

இந்த இரண்டு கேள்விகளுக்கான பதில்களை தான் நேற்றைய தீர்ப்பு தெளிவுபடுத்துகின்றது. (ச-3,5)


### 36-ம் நாள் நினைவும்
### அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்
### அமரர் திருமதி சிவசாம்பவி சிவதாசன்



18.06.2010 அன்று இறைபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு திருமதி சிவசாம்பவி சிவதாசன் அவர்களின் 36 ஆம் நாள் நினைவும் சபீண்டிகரண கிரியையும் இன்று 23.07.2010 வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் அன்னாரின் (மாமனார் இல்லத்தில் முல்லை கரணவாய் தெற்கு, கரவெட்டி) இல்லத்தில் நடைபெறும். அத் தருணம் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

மண்ணிற்காய் 19.10.1975

விண்ணிற்காய் 18.06.2010

வரணி வடக்கு, வரணி

தகவல்: தகப்பன், தாய், கணவன், பிள்ளைகள், சகோதரர்கள்: சிவதேவி, சிவசதன், திருமதி சிவசோதி ஜெகநாதன்

(C-723)


## அமெரிக்காவின் போதனைகள்...

இலங்கைக்கு விஜயம் செய்த மத்திய ஆசிய தென்னாசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி வெளிவிவகார அமைச்சரினால் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்கள் தொடர்பாகவேஹெகலிய இவ்வாறுகொக்கரித்துள்ளார்.

இலங்கையில் ஜனநாயகம், தேசிய நல்லிணக்கம், ஊடக சுதந்திரம் ஆகியவற்றை அரசு பேணிப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரசமைப்பின் 17-வது திருத்தத்தை நடைமுறைப்படுத்திப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் றொபோட் ஓ பிளேக் வலியுறுத்தியிருந்தார்.

இந் நிலையிலேயே இக் கருத்துக்களைக் கூற றொபோட் ஓ பிளேக்கிற்கு எவ்வித உரிமையும் சரி அருகதையும் சரி கிடையாது. அவர் இலங்கைக்குப் பாடம் சொல்லித் தரத் தேவையில்லை.

இலங்கையில் உள் நாட்டு விவகாரங்களில் மூக்கைத் துளைக்கத் தேவையில்லை என்று ஹெகலிய ரம்புக்வெல சீறிப் பாய்ந்தார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவை இலங்கை அரசு எதிர்த்தது எதிர்த்ததாகவே இருக்கும். ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட இந்தக் குழுவை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது. முன்னர் தெரிவித்ததுபோன்று எமது நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை.

இந்த விசாரணைக் குழு தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் பல நாடுகளுடன் இலங்கை அரசு பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாகவும் இலங்கை அரசின் அமைச்சரவைப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழுவின் செயற்பாடுகளும் அவர்களின் தீர்மானங்களுக்கும் அமையவே இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடு அமையும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

## வெற்றிலை கடைகளை...

பாக அவர்கள் மேலும் கூறியதாவது.

மூடப்பட்டுள்ள 30 வெற்றிலைக்கடைகளிலும் சுமார் 3இலட்சம் ரூபா பெறுமதியான வெற்றிலை. அவை அழுகும் நிலை ஏற்பட்டால் எமது நிலை மிகவும் மோசமாகக் காணப்படும் எனவும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டத்திலுள்ள வெற்றிலைக்கடைகளில் பல்வேறு பொருட்கள் விற்கப்படுகின்றன.

இடப்பெயர்வின்போது வவுனியா மாவட்ட சந்தையில் நாங்கள் வியாபாரத்தை மேற்கொண்டிருந்தோம்.

ஆனால் கரைச்சிப் பிரதேசசபையில் பணியாற்றும் சிலரால் எமது பணிக்கு இடையூறு ஏற்படுத்தும் நோக்குடன் இக்குற்றச்சாட்டு கூறப்பட்டுள்ளது.

இன்று காலை (நேற்று) 8.30 மணிக்கு கடைகளை மூடிவிட்டு கரைச்சி பிரதேச செயலருடன் தொடர்பு கொண்ட பின் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எமக்கு அறிவிக்கப்பட்டது. அதனை அடுத்து கடைகளை மூடிவிட்டு நாம் அங்கு சென்றபோது செயலர் யாழ்ப்பாணத்துக்கு சென்றுவிட்டார் என்றும் திங்கட்கிழமை வருவார் என்றும் பதிலளிக்கப்பட்டது.

அதே போன்று கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமண நிகழ்வு ஒன்றில் கலந்துகொள்வதற்காக வவுனியா சென்றுள்ளார் எனவும் கூறப்பட்டது.

இந்நிலையில் எமது வெற்றிலை அழுகி நட்டம் ஏற்படும் நிலை காணப்படுகிறது என வியாபாரிகள் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை வன்னியில் இறுதிப்போரின்போது பல்வேறு இன்னல்களைச் சந்தித்து தற்போது இருப்பதைக்கொண்டு வருமானத்தை திரட்ட முற்பட்ட வேளையில் அரச பதவியில் இருந்துகொண்டு மாதச்சம்பளம் பெறும் அதிகாரிகள் தம்மை பழிவாங்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாக அவர்கள் கவலை தெரிவித்தனர். இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என வியாபாரிகள் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் கரைச்சி பிரதேச செயலரைத் தொடர்புகொள்ள முற்படும் போது அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட். யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.